விலை ரூபா: 20.00

# தமிழ் நாதம்

Thamil Naatham

இராகம் 01 | தாளம் 112 | வள்ளுவர் ஆண்டு 2043 கார்த்திகை 07 வியாழக்கிழமை (22.11.2012) | பக்கங்கள்: பதினாறு

டெங்கு ஒழிப்புப் பணியில்

அணி திரள்வோம்

## நீண்ட நாட்களுக்கு பின்னர் யாழில் ஜூரி சபை விசாரணை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மேல் நீதிமன்றத்தில் ஜூரி சபை (அறங்கூறும் அவை) முன்னிலையில் கொலைக் குற்ற வழக்கு விசாரணை நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டது.

2007ஆம் ஆண்டு அச்சுவேலிப் பகுதியில் இடம்பெற்ற கொலையுடன் தொடர்புடையவர்கள் எனக் கருதும் ஐந்து சந்தேக நபர்களே இந்த விசாரணையில் உட்படுத்தப்பட்டனர்.

சில வழக்குகளிற்கு தேவை ஏற்படும் போது ஜூரி சபை முன்னிலையில் விசாரணைகள் மேற்கொள்வது வழக்கம். இதன் அடிப்படையில் யாழ்.மேல்

02

# முல்லைத்தீவில் பயிற்சியிலீடுபட்ட விமானங்களே தாழப் பறந்தன

## மக்கள் பீதியடையத் தேவையில்லை என்கிறார் விமானப்படைப் பேச்சாளர்

(ஆர்.சிவரூபன்)

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்புப் பிரதேசங்களில் விமானப் படையினர் வழக்கமான பயிற்சி நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர் என்றும் இதனால் மக்கள் பயப்படத் தேவையில்லை என்றும் விமானப் படைப் பேச்சாளர் விங் கொமாண்டர் சிராஸ் ஜெல்தீன் தெரிவித்தார். கடந்த திங்கட்கிழமையும் அதற்கு முன்னரும் "கிபீர்" குண்டு வீச்சு விமானங்கள் தாழப் பறந்தன என்றும், இதனால் அப்பகுதி மக்கள் அச்சமடைந்து பாதுகாப்புத் தேடி ஓடினர் என்றும் யாழ்ப்பாண ஊடகங்களிலும் வேறு சில இணையத்தளங்களிலும் செய்திகள் வெளியாகியிருந்தன. இது குறித்துக் கேட்டபோது விமானப் படைப் பேச்சாளர் மேற்கண்டவாறு கூறினார்.

விமானங்கள் தாழப் பறப்பதாலும், விமானங்கள் பறக்கும்போது பாரிய சத்தங்கள் கேட்பதாகவும், இதனாலேயே தாம் அச்சமடைய வேண்டிய நிலை ஏற்படுவதாகவும் முல்லைத்தீவு, புதுக்குடியிருப்புப் பகுதி மக்கள் கூறியவற்றைச் சுட்டிக் காட்டிக் கேட்டபோது,

ஜெட் ரக விமானங்கள் தாழப் பறக்கும்போது பாரிய சத்தங்கள் கேட்பது வழக்கமென்றும், இது குறித்து வீணாக

02



யாழ்ப்பாணத்தில் வீதி அபிவிருத்திப் பணிகளில் ஈடுபடுகின்ற "சீரா" நிறுவனப் பணியாளர்கள் தமக்கு இரண்டு மாதக் கொடுப்பனவு வழங்காமைக்கு எதிராக மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். அச்சந்தர்ப்பத்தில் எடுக்கப்பட்ட படத்தையே மேலே காண்கிறீர்கள்

## அவுஸ்ரேலியாவிலிருந்து நேற்றும் 100 பேர் இலங்கை வந்தனர்

(கொழும்பு)

சட்டவிரோதமாக அவுஸ்திரேலியா சென்ற நிலையில் அங்கிருந்து நாடு கடத்தப்பட்ட மேலும் ஒரு தொகுதியினர் நேற்று நாடு திரும்பினர்.

அவுஸ்திரேலியாவிலிருந்து திருப்பி அனுப்பப்படும் இந்த ஒன்பதாவது குழுவில் 100பேர் அடங்குவதாக அந்நாட்டுக் குடிவரவு அமைச்சர் கிறிஸ் போவன் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு திருப்பி அனுப்பப்பட்ட 100பேரும் ஆண்கள் எனவும், இம்மாதத்தில் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டவர்களில் இதுவே அதிகளவுபேர் அடங்கிய குழுவாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவுஸ்திரேலிய விமானப்படைக்குச் சொந்தமான கே.சி - 30 என்ற விசேட விமானம் மூலம் இவர்கள் திருப்பி

02

## நெல்லியடியில் விபத்து பத்து இராணுவ வீரர்கள் காயம்

(நெல்லியடி)

நெல்லியடிப் பகுதியில்' இராணுவ ட்ரக் வண்டியொன்று விபத்துக்குள்ளானதில் 10 இராணுவ வீரர்கள் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த பகுதியில் நேற்று மதியம் 12 மணியளவில் இடம்பெற்ற இவ்விபத்தில் இராணுவத்தின் 19 ஆவது

02

## டெசோ அறிக்கையுடன் ஐ.நா.வுக்கு தி.மு.க. உறுப்பினர்கள் மட்டும் சென்றது ஏன்?

### - கருணாநிதி தலைமையிலான கூட்டத்தில் கேள்வி

(சென்னை)

சென்னையில் கடந்த 19ஆம் திகதி நடந்த, டெசோ அமைப்பு உறுப்பினர்கள் கலந்துரையாடல் கூட்டத்தில், "எங்களையும் ஐ.நா., சபைக்கு அனுப்பாதது ஏன்" என்ற கேள்வியைச் சிலர் திடீரென எழுப்பியதாக, அக்கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. டெசோ அமைப்பின் கலந்துரையாடல் கூட்டம், தி.மு.க., தலைவர் கருணாநிதி தலைமையில், சென்னை அறிவாலயத்தில் மூன்று மணி நேரம் நடந்தது. கூட்டத்தில் தி.மு.க., பிரமுகர்கள் மற்றும் டெசோ அமைப்பின் உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

கூட்டத்தில், ஒரு உறுப்பினர்

02

## கனடியப் பாராளுமன்றத்தில் இலங்கை விவகாரம்

(ரொறன்ரோ)

கனடாவின் பிக்கறிங்- ஸ்காபரோ கிழக்கு தொகுதி கனடிய ஆளும் கன்சவேட்டிவ் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் கொர்நேலீச்சிசு, கடந்த 19ஆம் திகதி இலங்கையின் மனித உரிமைகள் நிலைமை மற்றும் கனடாவின் காட்டமான நிலைப்பாடு குறித்து கருத்து வெளியிட்டிருந்தார்.

கேள்வி நேரத்தின் போது, எதிர்க்கட்சியான புதிய ஜனநாயகக் கட்சியின் ஸ்காபுரோ ருச்ரிவர் பாராளுமன்ற உறுப்பினர் ராதிகா சிற்சபேசன் மற்றும்

02

## பிரிட்டிஷ் முன்னாள் வெளியுறவு அமைச்சருக்கு இந்தக் கவலை

(கொழும்பு)

தமது பதவிக்காலத்தில் இலங்கையில் யுத்தத்தை முடிவுறுத்த முடியாமைக்காக வருந்துவதாக பிரித்தானியாவின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் டேவிட் மில்லிபாண்ட்

02

# அரசாங்கம் மற்றும் தமிழ், முஸ்லிம் கட்சிகளுக்குப் பரிந்துரைகள்

(பிரஸல்ஸ்)

இலங்கை அரசாங்கம் தொடர்ந்தும் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பில் தமிழ்த் தலைவர்களுடன் பேச மறுத்து வருவதாகக் குற்றஞ்சாட்டியிருக்கும் சர்வதேச நெருக்கடிக்குழு, தமிழர்களுக்கு ஏன் அதிகாரப் பரவலாக்கல் அவசியம் என்பதைச் சிங்கள மக்களுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறியப்படுத்த வேண்டும் என்றும் தெரிவித்துள்ளது.

பெல்ஜியத்தின் தலைநகரான பிரஸல்சில் இந்த அறிக்கையை சர்வதேச நெருக்கடிக்குழு வெளியிட்டிருக்கிறது.

## பிரசல்ஸில் சர்வதேச நெருக்கடிக் குழு வெளியிட்டது

இலங்கை அரசாங்கம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் சிவில் சமூக அமைப்புக்கள், முஸ்லிம் கட்சிகள் ஆகியவற்றுக்கும் தனித் தனியான பரிந்துரைகளைச் செய்துள்ளது. நேற்றுமுன்தினம் மேற்படி அமைப்பு வெளியிட்ட அறிக்கையின் முக்கிய பகுதிகள் வருமாறு,

**1) தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கான பரிந்துரைகள்**

ஐக்கிய இலங்கைக்குள் தமிழர்களுக்கான தீர்வைக்காண அரசாங்கத்துடன் பேச்சுக்களை தொடங்க வேண்டும். ஏனைய சமூகங்களுடன் இணைப்பை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். தமிழர்களுக்கு ஏன் அதிகாரப் பரவலாக்கல் அவசியம் என்பதை சிங்கள மக்களுக்கு

10

தமிழ் பேசும் மக்களின் எழுச்சிக் குரல்

# கொழும்பு நூதனசாலையில் களவாடப்பட்ட வாள்கள் மீட்பு

கொழும்பு தேசிய அரும்பொருட் காட்சியகத்தில் இடம்பெற்ற களவாடல் சம்பவம் குறித்து கைது செய்யப்பட்ட பிரதான சந்தேக நபரான "கன்கெட்டாவின்" தாயாரின் இருப்பிடத்துக்கு அண்மையில் உள்ள குப்பைத்தொட்டி ஒன்றிலிருந்து, புராதன வாள்களின் மூன்று தகடுகளை ரகசிய பொலிஸார் மீட்டுள்ளனர்.

பியகம - சியம்பலாவ - டீமோ சந்திக்கருகாமையிலேயே இந்த வாள்கள் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பியகம பிரதேச சபையின் கழிவுப் பொருள் சேகரிப்பு ஊழியர் ஒருவரினால் குறித் தகடுகள் தற்செயலாக சேகரிக்கப்பட்டுள்ளன.

இந்தநிலையில், ரகசிய பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட பரிசோனையின் ஊடாகவே இந்த வாளின் பகுதிகள் மீட்கப்பட்டு, பியகம பிரதேச சபைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

இந்த வாளின் பிடியில் "நுக வெல அதிகாரம்" என சிங்களத்தில் பெயர் பொறிக்கப்பட்டிருந்ததாக பிரதேச சபையின் தலைவர் ஆனந்த கனேபொல தெரிவித்தார்.

கடந்த மார்ச் மாதம் 16 ம் திகதி இரவு அரும்பொருட் காட்சியகத்தில் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றது.

பின்னர் ஒக்டோபர் 27 ம் திகதி ரகசிய பொலிஸாரால் நீர்கொழும்பு பிரதேசத்தில் வைத்து திருட்டு சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபரான, கன்கெட்டா என்றழைக்கப்படும் லங்சகே பிரியந்த மேரிஸ் என்பவர் கைது செய்யப்பட்டார். தற்போதும், அவர் நீதிமன்ற உத்தரவின் பேரில் தடுத்துவைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகிறார்.

குறித்த சந்தேகநபரின் தகவல்களுக்கு அமைய நேற்றுமுன்தினம் மாளிகாவத்தை பிரதேசத்தில் புராதன பெறுமதியுடைய 10 நாணய தாள்களும் மீட்கப்பட்டிருந்தன.

# ஆஸி சென்ற இலங்கை அகதிகள் பப்புவா நியூகினி முகாமுக்கு

சட்டவிரோதமாகப் படகு மூலம் அவுஸ்திரேலியா சென்ற புகலிடக் கோரிக்கையாளர்கள் சிலர் பப்புவா நியூகினியாவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

தற்போது மீண்டும் திறக்கப்பட்டுள்ள பப்புவா நியூ கினியாவிற்குச் சொந்தமான மனூஸ் தீவுகளிலுள்ள தடுப்பு முகாமிற்கு புகலிடக் கோரிக்கையாளர்கள் அனுப்பப்பட்ட முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

இலங்கை மற்றும் ஈரானைச் சேர்ந்த 19 புகலிடக் கோரிக்கையாளர்கள் விமானம் மூலம் பப்புவா நியூ கினியாவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

அவுஸ்திரேலியாவுக்குப் படகின் மூலம் சட்டவிரோதமாக செல்லும் புகலிடக் கோரிக்கையாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டதைத் தொடர்ந்து, வேறு நாடுகளிலுள்ள தடுப்பு முகாம்களுக்கு அவர்களை அனுப்புவதற்கு அவுஸ்திரேலிய அரசாங்கம் தீர்மானித்துள்ளது. எவ்வாறாயினும், சட்டவிரோத புகலிடக் கோரிக்கையாளர்கள் 137 பேருடன் இரண்டு படகுககள் அவுஸ்திரேலிய கடற்படையினரால் நேற்று கைப்பற்றப்பட்ட தாக பி.பி. சி. உலக சேவை செய்தி வெளியிட்டுள்ளது..

## பிரதம நீதியரசர் விவகாரம் உயர் நீதிமன்றிடம்

பிரதம நீதியரசர் ஷிரானி பண்டாரநாயக்காவுக்கு எதிரான குற்றப் பிரேரணையைப் பாராளுமன்ற தெரிவுக் கமிட்டி விசாரணை செய்ய முடியாதென்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ரிட்மனு, அரசியல் யாப்பு விளக்கம் கோரி உயர் நீதிமன்றத்துக்குப் பாரப்படுத்தப்பட்டது. அரசியல் யாப்பின் 107 (3) ஆவது ஷரத்தின்படி பிரதம நீதியரசர் மீதான குற்றப் பிரேரணையை தெரிவுக் கமிட்டி விசாரிக்க முடியாதென்று நான்கு ரிட் மனுக்கள் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யபட்டுள்ளன.

## மூன்று செயற்கைக் கோள்கள் இலங்கை ஏவவுள்ளது

வான்வெளித் தொழில்நுட்பத்தில் இலங்கை பிரவேசிப்பதை முன்னிட்டு மூன்று செயற்கைக் கோளை இலங்கை, விண்வெளிக்கு ஏவவுள்ளது. முதலாவது செயற்கைக் கோள் இன்று ஏவப்படும். இரண்டாவது செயற்கைக் கோள் 2013 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் விண்ணுக்கு ஏவப்படும். மூன்றாவது செயற்கைக்கோள் அதன் பின்னர் இரண்டு வருடங்கள் கழித்து 2015 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் ஏவப்படும்.

# ஜி.எஸ்.பி. வரிச்சலுகை இல்லை: தைத்த ஆடைகளின் ஏற்றுமதி வீழ்ச்சி

இலங்கையின் தைத்த ஆடைகளின் ஏற்றுமதியில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி குறித்து, தைத்த ஆடை ஏற்றுமதியாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர். 'இலங்கை வர்த்தக சம்மேளனம்' இந்த ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் மட்டுமே இந்த தைத்த ஆடைகளின் ஏற்றுமதி நான்கு சதவீதம் அளவுக்கு வீழ்ச்சியடைந்துள்ளதாக தெரிவித்துள்ளது. பல பில்லியன் அமெரிக்க டாலர்கள் அளவுக்கு ஏற்பட்டிருக்கும் இந்த ஏற்றுமதி வீழ்ச்சி அந்தத் தொழிலை பெரிதும் பாதிக்கும் என்றும் ஏற்றுமதியாளர்கள் கூறுகிறார்கள்.

பல நாடுகளில் தைத்த ஆடைத் தொழிலில் பெண்கள் ஈடுபட்டுள்ளனர். இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் நடைபெற்ற இறுதிப் போரில் கடும் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றதாகவும், அதற்கு சரியான பொறுப்புக் கூறல் ஏற்படும் வரை ஐரோப்பிய ஒன்றியம் அளித்துவந்த ஜிஎஸ்பி வரிச்சலுகை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது.

அதன் காரணத்தினாலேயே தைத்த ஆடைகளின் ஏற்றுமதியில் வீழ்ச்சிகு காரணம் என்று ஏற்படக் அத்துறை சார்ந்தவர்கள் கூறுகிறார்கள். ஐரோப்பிய ஒன்றியத்துக்கான ஏற்றுமதியில் எற்பட்ட வீழ்ச்சியே பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்கிறார், இலங்கை தைத்த ஆடை ஏற்றுமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் ரொஹான் அபயகோன்.

ஐரோப்பிய ஒன்றியத்துக்கான தமது ஏற்றுமதியில் மட்டும் 12 முதல் 13 சதவீதம் வீழ்ச்சியடைந்துள்ளதாக அவர் கூறுகிறார். கடந்த ஆண்டில் மாத்திரம் இலங்கையிலிருந்து மொத்தமாக 4.1 பில்லியன் அமெரிக்க டாலர்கள் அளவுக்கு தைத்த ஆடைகள் ஏற்றுமதி செய்யப்பட்டன. பல நாட்டுச் சந்தைகளில் இலங்கையின் தயாரிப்புகள் விற்கப்படுகின்றன. இலங்கை அரசு நல்லிணக்க ஆணைக்குழுவின் சில பரிந்துரைகளை செயல்படுத்தத் தொடங்குவதில் முன்னேறி வரும் சூழலில், ஜி எஸ் பீ வரிச்சலுகையை மீண்டும் பெறும் நோக்கில் ஐரோப்பிய ஒன்றியத்துடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க சரியான தருணம் வந்துள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

ஜி எஸ் பி வரிச்ச லுகையை இலங்கை இழந்த போது இருந்த நிலைமையை விட நாட்டில் இப்போது முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன எனக் கூறும் ரொஹான் அபயகோன், இலங்கை அரசு இப்போது அந்தச் சலுகையை மீண்டும் கோரி விண்ணப்பிக்கத் தவறினால் அடுத்து வரும் மூன்று ஆண்டுகளுக்கு அதை இழக்க நேரிடும் எனவும் சுட்டிக்காட்டுகிறார்.

## அவுஸ்...(தொடர்)

அனுப்பப்பட்டுள்ளனர். இதுவரையில் 525பேர் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர் என்றும் கிறிஸ் போவன் கூறியுள்ளார்.

விஸா இன்றி அவுஸ்திரேலியாவில் எவரும் தங்கவைக்கப் படமாட்டார்கள்.

இவ்விடயம் தொடர்பில் பல முறை அறிவித்தும் கடத்தல் காரர்களின் பேச்சுக்களில் ஏமாற்ற முறும் பலர், தங்களது பணத்தினை இழந்துகொண்டு அவுஸ்திரேலியாவுக்கு சட்டவிரோத மாக வருகை தருகின்றனர்.

இவர்களை அவுஸ்திரேலியா அரசாங்கம் எவ்வகையிலும் நாட்டில் தங்கவைக்காது. அவர்களைத் திருப்பி அனுப்பவே நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்கு வருகை தருபவர்கள் நவுறு மற்றும் மனுஸ் தீவுகளில் தங்கவைக்கப்பட்ட நிலையிலேயே இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படுகின்றனர் என்று அவுஸ்திரேலிய அமைச்சர் கிறிஸ் போவன் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## வடபகுதி இ.போ.ச.வுக்கு இருபது சாரதிகள் நேற்று நியமனம்

வடபிராந்திய போக்குவரத்து சபை புதிய பணியாளர்களுக்கான (சாரதிகள்) நியமன பத்திரங்களை ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்) வழங்கினார்.

நேற்றுக் கோண்டாவில் சாலையில் வடபிராந்திய பிரதான பிராந்திய முகாமையாளர் திரு.எஸ். அஸ்கர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் இ.போ.ச.பணியாளர்கள் 20 பேருக்கான நியமனக்கடிதங்களை ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் வழங்கினார்.

## முல்லைத்தீவில் பயிற்சியில்...(தொடர்)

அச்சம் கொள்ளத் தேவையில்லையென்றும் விங் கொமாண்டர் மேலும் தெரிவித்தார்.

யுத்த காலத்தில் குண்டு வீச்சுகள், தாக்குதல்கள், மோதல்கள் இடம்பெற்றதை முல்லைத்தீவு மக்கள் அனுபவரீதியாகவே உணர்ந்திருப்பார்கள்.

எனவே அவர்கள் பீதியடையக் கூடிய நிலைமைகள் இருக்கின்றன. இப்போது இடம்பெறுவது பயிற்சி நடவடிக்கைகளே. விமானப்படை முகாம்களில் பயிற்சிகள் இடம்பெறுவது வழக்கம். அவ்வாறான பயிற்சிகளே அவ்வவ்போது இடம்பெற்று வருகின்றன.

இது குறித்து மக்கள் பீதி கொள்ளத் தேவையில்லை என்று விமானப்படை பேச்சாளர் கூறினார்.

## நெல்லியடியில் விபத்து...(தொடர்)

படைப்பிரிவைச் சேர்ந்த லக்மால் (வயது-20) என்பவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். ஏனைய ஒன்பது வீரர்களும் மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## நீண்ட நாட்களுக்குப்...(தொடர்)

நீதிமன்ற ஆணையாளர் ஜே. விஸ்வநாதன் முன்னிலையில் இந்த விசாரணை இடம்பெற்றது.

யாழ்.மாவட்டத்திற்கு மிக நீண்ட காலத்திற்குப் பின்னர் ஜூரி சபை விசாரணை இடம்பெற்ற தென்பது குறிப்பிடத்தக்கது.

## டெசோ அறிக்கையுடன்...(தொடர்)

பேசுகையில், டெசோ மாநாட்டின் தீர்மானங்களை, ஐ.நா., சபை, ஐ.நா., மனித உரிமை கமிஷனில் கொண்டு சென்ற குழுவில், டெசோ உறுப்பினர்கள் இடம் பெறவில்லை. முழுக்க, முழுக்க தி.மு.க., சார்பில் வழங்கப்பட்டது போல், முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது. எங்களையும் நியூயோர்க்கிற்கு அனுப்பாதது ஏன் என்ற கேள்வியை எழுப்பியதாக கூறப்படுகிறது. தொடர்ந்து, மற்றொரு உறுப்பினர், டெசோ மாநாட்டின் அடுத்த மாநாட்டை எங்கே நடத்தலாம்? எனக் கேட்டார். அதற்கு, சில தலைவர்கள், துபாய், சிங்கப்பூர், ஆர்ஜென்டினா போன்ற நாடுகளில் நடத்தலாம் எனக் கூறியுள்ளனர்.

அதற்கு ஒரு தலைவர், "சென்னையில் நடத்திய மாநாட்டிற்கு எதிர்பார்த்த தலைவர்கள் வரவில்லை. வெளிநாடுகளில் மாநாடு நடத்தி யாரும் வரவில்லை என்றால் என்ன செய்வது? என்ற ப[illegible] கேள்வியை எழுப்பினார்.

"இலங்கையில் பொது வாக்கெடுப்பு நடத்த, ஐ.நா.,வை வலியுறுத்தி, அங்கு போராட்டம் நடத்தலாமா?" என, மற்றொரு உறுப்பினர் கேட்டுள்ளார். இறுதியில், போராட்டம் தேவையில்லை என்ற முடிவு அக்கூட்டத்தில் எடுக்கப்பட்டுள்ளது. அதேசமயம், டெசோ அமைப்பின் பலத்தை காட்டும் வகையில், தொடர் நடவடிக்கைகள் இருக்க வேண்டும் எனக் கூட்டத்தில் வலி யுறுத்தப்பட்டுள்ளது.

இதற்கிடையில், விவாதம் திசை மாறி, ஸ்பெக்ட்ரம் அலை வரிசை ஒதுக்கீட்டின் ஏல விவகாரம் குறித்து சென்றதாகவும், இது தொடர்பாக, ஒரு மணி நேரம் விவாதிக்கப்பட்டதாகவும் தி.மு.க., வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## பிரிட்டிஷ் முன்னாள்...(தொடர்)

தெரிவித்துள்ளார். யுத்தம் இடம்பெற்ற காலத்தில் டேவிட் மில்லிபாண்ட் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

யுத்தத்தின் போது பெருமளவான மக்கள் உயிரிழந்ததாகவும், அதனை தடுத்து நிறுத்த முடியாமை வருத்தமளிப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். 2009ஆம் ஆண்டு இறுதிக் கட்ட யுத்தத்தின் போது ஐக்கிய நாடுகளின் அதிகாரிகள் யுத்த வலயத்தை விட்டு வெளியேறியமை வருந்தத்தக்கது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## கனடியப்...(தொடர்)

கமல்டன் கிழக்கு ஸ்ரோனிகிரீக் பாராளுமன்ற உறுப்பினர் வெயின் மார்சன் ஆகியோர் இலங்கை குறித்து கேள்விகளை எழுப்பினர்.

அவற்றிக்குப் பதிலளித்த கனடிய வெளிவிவகார அமைச்சர் ஜோன் பெயட் அவர்கள், இலங்கை விடயத்தில் கனடிய அரசு போன்று எந்தவொரு அரசும் தொழிற்பட்டதில்லை. தமிழ் மக்கள் உட்பட இலங்கையில் உள்ள அனைத்து மக்களின் நலனிலும் அக்கறை கொண்டுள்ளோம் என்றும் சொன்னார்.

# வன்னி மாணவர்களின் மனோநிலையில் பாதிப்பு

வன்னி மாவட்ட மாணவர்கள் மர நிழலில் கல்வி கற்று வருவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

மர நிழல்களிலும், உடைந்த கட்டடங்களிலுமே மாணவர்கள் கல்வி கற்க வேண்டியுள்ளது.

காயன்குளி பிரதேசத்தில் மழை வெள்ளம் காரணமாக நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வியைத் தொடர முடியாது அவதியுறுகின்றனர்.



முல்லைத்தீவில் 733 மாணவர்கள் வெடிபொருட்களின் இரும்புத்துகள் உடம்பில் பதிந்த நிலையில் கல்வி கற்கின்றனர். அவர்களுக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதா? மாணவர்களின் மனோநிலை பாதிக்கப்பட்டுள்ளது.

பிரதேசத்தின் பாடசாலைகளில் போதியளவு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

# துபாயில் நகைகள் கொள்ளை: இலங்கைப் பெண்ணுக்குச் சிறை

துபாய் நாட்டில், தான் பணி புரிந்த வீட்டில் தங்க நகைகளை கொள்ளையிட்ட இலங்கைப் பணிப்பெண்ணொருவருக்கு 6 மாத கால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த செப்டெம்பர் 10ம் திகதி 3 லட்சம் திர்ஹாம் பெறுமதியான தங்க நகைகளை கொள்ளையிட்டதாக குறித்த இலங்கைப் பணிப்பெண் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

குறித்த இலங்கைப் பணிப்பெண் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோது, தனது குற்றத்தை ஒப்புக் கொண்டுள்ளார்.

இதனையடுத்து, துபாய் நீதிமன்றம் 6 மாதகால சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

இலங்கை பணிப்பெண் சுமார் 12 வருடங்களாக குறித்த வீட்டில் பணிபுரிந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# வடக்கு, கிழக்கு பாடசாலைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை

## செல்வராசா எம்.பி. சொல்கிறார்

பாடசாலை அபிவிருத்தித் திட்டங்களில் வடக்கு கிழக்கிற்கு முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பொன்.செல்வராசா தெரிவித்துள்ளார்.

ஆயிரம் பாடசாலை அபிவிருத்தித் திட்டத்தில் வடக்கு கிழக்கைச் சேர்ந்த நான்கு பாடசாலைகள் மட்டுமே உள்ளடக்கப்பட்டுள்ளன. ஆளும் கட்சியினர் வெளியிட்ட தகவல்களின் அடிப்படையிலேயே இதனைக் குறிப்பிடுகின்றேன்.

பாடசாலைக் கல்வியை நெறிப்படுத்த சிறந்த முகாமைத்துவம் அவசியமானது. பாடசாலை அதிபர்களுக்கு கேணல் பதவிகளை வழங்குவது பொருத்தமற்றது.

2004ஆம் ஆண்டு ஆழிப் பேரலை அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட கிழக்கு பாடசாலைகள் இன்னமும் அபிவிருத்தி செய்யப்படவில்லை. மாணவ, மாணவியருக்கு பாதணிகள் வழங்கும் திட்டம் வரவேற்கப்பட வேண்டியது என பொன். செல்வராசா தெரிவித்துள்ளார். வரவு செலவுத் திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, ஆயிரம் பாடசாலை அபிவிருத்தித் திட்டத்தில் வடக்கு கிழக்கைச் சேர்ந்த 148 பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்பட உள்ளதாகவும், பொன் செல்வராசாவின் புள்ளி விபரத் தரவு பிழையானது எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் மொஹான் லால் கிரேரு தெரிவித்துள்ளார்.

# இலங்கையில் 70 இடங்களில் மண்சரிவு அபாயம்

இலங்கையில் சுமார் 70 இடங்கள் மிகவும் ஆபத்தான மண்சரிவுகள் ஏற்படும் இடங்களாக இனங்காணப்பட்டுள்ளன. கண்டி, நுவரெலிய, பதுளை, களுத்துறை, ரத்தினபுர, கேகாலை, காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களிலேயே இந்த அபாய இடங்கள் இனங்காணப்பட்டுள்ளன. அண்மையில் பெய்த கடும் மழைக் காரணமாகவே இந்தப் பிரதேசங்கள் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளன.

இந்தநிலையில் இந்தப் பாரிய மண்சரிவு அபாய பிரதேசங்களில் இருந்து ஆபத்துக்களை குறைக்கும் நடவடிக்கைகள் கட்டம் கட்டமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிலையம் தெரிவித்துள்ளது.

# டிஜிட்டல் தொழில்நுட்பத்தால் ஊடகங்களுக்கு நெருக்கடி

## உலக செய்தி பிரசுரிப்பாளர் பேரவைத் தலைவர்

நாட்டில் பூரண ஊடக சுதந்திரத்தை இலங்கை அரசாங்கம் நிலைநாட்ட வேண்டுமென சர்வதேச செய்தித்தாள் மற்றும் செய்தி பிரசுரிப்பாளர் பேரவையின் தலைவர் ஜேகோப் மெத்தீவ் தெரிவித்துள்ளார்.

ஊடகவியலார்கள் தாக்கப்படல், அச்சுறுத்தப்படல், கொலை செய்தல், கடத்தப்படல் உள்ளிட்ட பல்வேறு அடக்குமுறைகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

சட்டங்களின் ஊடாக ஊடகங்களின் பிரயோகிக்கப்பட்டுள்ள சகல கட்டுப்பாடுகளையும் களைய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். டிஜிட்டல் தொழில்நுட்பம் காரணமாக உலக அச்சு ஊடகங்கள் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருவதாக ஜேகோப் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

# அமெரிக்க துணை இராஜாங்க செயலாளருடன் ஹக்கீம் பேச்சு

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள அமெரிக்கத் துணை ராஜாங்கச் செயலாளர் அலீஸா அயர்ஸ், நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீமுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

13ஆம் திருத்தச் சட்டம், அதிகாரப் பகிர்வு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் மிச்சல் சிசன், நீதி அமைச்சின் செயலாளர் கமலினி டி சில்வா ஆகியோரும் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.



நாட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் நல்லிணக்கப் பணிகள் தொடர்பில் ஹக்கீம், அமெரிக்கத் துணைச் செயலாளருக்கு விளக்கமளித்துள்ளார்.

புலி இயக்க முன்னாள் உறுப்பினர்களுக்கு புனர்வாழ்வு அளித்தமை மற்றும் ஏனைய நல்லிணக்க பணிகள் தொடர்பில் விளக்கமளித்துள்ளார். இதன் போது பிரதம நீதியரசருக்கு எதிராக குற்றப்பிரேரணை குறித்து அமெரிக்காவின் அதிருப்தியை தூதுவர் வெளிப்படுத்தினார்.

# மாலைதீவில் வீதி அமைப்புக்காக இலங்கை ரூ.500 மில்லியன் கொடுக்கிறது

## ஐ.தே.க.குற்றச்சாட்டு

வெளிநாடுகளில் வட்டிக்கு கடன் வாங்கும் இந்த அரசாங்கம் அந்தப் பணத்தை வேறு நாடுகளுக்கு நன்கொடையாக அளித்து வருவதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

நாம் இப்பொழுது செல்வந்தர்களைப் போன்று மாலைதீவில் பாதைகளை அமைக்க உதவிகளை வழங்குகின்றோம் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

மாலைதீவில் பாதைகளை அமைக்கும் திட்டத்திற்கு அரசாங்கம் 500 மில்லியன் ரூபா நிதியை வழங்கவுள்ளது. எவ்வாறு இந்த நன்கொடையை நாம் வழங்குகின்றோம்.



வெளிநாடுகளில் கடன் வாங்கியே இந்த நன்கொடை வழங்கப்பட உள்ளது. வட்டிக்குப் பணத்தை வாங்கி நாம் பெரியர்கள் என்றுக் காட்டிக் கொள்வதற்காக மாலைதீவிற்கு நன்கொடை வழங்குகின்றோம்.

இலங்கையின் தொழிற் பயிற்சி மையங்களை அபிவிருத்தி செய்ய உகண்டா ஜனாதிபதி 130 மில்லியன் ரூபா நன்கொடை வழங்கியுள்ளார்.

நாட்டின் பல தொழில்நுட்பக் கல்லூரிகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. வரவு செலவுத் திட்ட இடைவெளியைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# இன்றைய இராசி பலன் (22.11.2012)

**நந்தன வருடம் கார்த்திகைத் திங்கள் 7ஆம் நாள்**
**வியாழக்கிழமை**

**நட்சத்திரம்** : பூரட்டாதி பி.இ. 6.10 வரை (23ஆம் திகதி காலை)
**திதி** : நவமி பி.ப. 1.09 வரை. அதன் பின் தசமி
**சுபநேரம்** : 7.41 - 9.10 **இராகுகாலம்** : 1.41 - 3.11
(இந்த நேரங்கள் பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்)

**மேடம்** : பெரியோர் உதவி, எதிர்பாராத பொருள்வரவு, மனக்குழப்பம்
**இடபம்** : புதியவாய்ப்பு, நம்பிக்கை அதிகரிப்பு, வியாபாரத்தில் உயர்வு
**மிதுனம்** : தன்னம்பிக்கை, தொழில்முன்னேற்றம், பிறரால் குறைகேட்டல்
**கடகம்** : பணவரவு, உதவிக்கேற்ற பலன், வியாபார மூலதனம் நன்மை
**சிங்கம்** : சுயநலப்போக்கு, கருத்துவேறுபாடு, சமவருமானம்
**கன்னி** : மனதிருப்தி, புத்திசாதுரியம், குழப்பநிலை சீராகும்
**துலாம்** : குடும்பத்தேவை நிறைவு, மனநிம்மதி, தொழில்நிலையில் பாராட்டு
**விருச்சிகம்** : வியாபாரத்தில் தாமதநிலை, சமாளிக்கும் திறமை, உறவினர் தொல்லை
**தனுசு** : நிதானம், தொழிலில் கவனம், வாக்கு அவதானம்
**மகரம்** : வியாபார விருத்தி, தொழிற்போட்டி, புதிய திருப்பம்
**கும்பம்** : சமூகஈடுபாடு, உற்பத்தி முன்னேற்றம், புத்திசாதுரியம்
**மீனம்** : மனச்சஞ்சலம், வியாபாரத்தில் சமநிலை, பெரியோர் அறிவுரை

- ஜோதிடர் பால.இரத்தினசேகர்

# மரண தண்டனைக்கு எதிரான தீர்மானம் ஐக்கிய நாடுகள் சபையில் நிறைவேற்றம்

## இந்தியா அமெரிக்கா உட்பட 39 நாடுகள் எதிர்ப்பு

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்சபையில் கொண்டுவரப் பட்ட மரண தண்டனைக்கு எதிரான தீர்மானம் 110 நாடுகளின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டுள் ளது. இந்த தீர்மானத்தை நிறை வேற்றுவதற்கான வாக்கெடுப்பில் 36 நாடுகள் பங்கேற்கவில்லை என்பதுடன் இந்தியா உட்பட 39 நாடுகள் எதிர்த்து வாக்களித்தன.

உலக நாடுகள் பலவற்றில் மரண தண்டனை இன்னும் நீடித்து வருவது ஆழ்ந்த கவலைக்குரியது. எனவே, அனைத்து நாடுகளும் மரண தண்டனையை ஒழிக்கும் நோக்கத்தில், மரண தண்டனையை கைவிட வேண்டும் என்று சமூக மற்றும் மனிதாபிமான விவகாரங்களை கவனித்து வரும் ஐ.நா பொதுச்சபையில் யோசனையொன்று முன்வைக்கப் பட்டது.

அதில், மரண தண்டனையை பயன்படுத்துவதை கட்டுப்படுத்த வேண்டும். 18 வயதுக்கு கீழ்ப் பட்டவர்கள் மற்றும் கர்ப்பிணிகளுக்கு மரண தண்டனை விதிக்கக்கூடாது. மரண தண்டனை விதிப்பதற்கான குற்றங்களின் எண்ணிக்கையை குறைக்க வேண்டும் என்று கூறப்பட்டது. இந்நிலையில், இந்த தீர்மானத்துக்கு எதிராக வாக்கெடுப்பு நடத்த ஐ.நா பொதுச்சபை தீர்மானித்தது. இதற்கமைய நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் 110 நாடுகளின் ஆதரவுடன் மரண தண்டனைக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

இந்த தீர்மானத்துக்கு எதிராக இந்தியா, அமெரிக்கா, பாகிஸ்தான், சீனா, ஜப்பான், பங்களாதேஷ், ஈரான், ஈராக், குவைத், லிபியா, கொரியா உள்ளிட்ட 39 நாடுகள் வாக்களித்துள்ளன. 36 நாடுகள் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை.

இதுகுறித்து விளக்கமளித்துள்ள இந்தியா, "ஒவ்வொரு நாட்டுக்கும் தங்கள் சட்ட நடைமுறையை தீர்மானிக்க இறையாண்மை உரிமை உள்ளது. இந்த தீர்மா னம், மரண தண்ட னையை கைவிட வற்புறுத்துகிறது. தீர்மானத்தை அதன் தற்போதைய வடிவத்தில் ஏற்க முடியாது" என்று கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சீனாவுடனான போரில் இந்தியாவின் தோல்விக்கு முன்னாள் பிரதமர் ஜவஹர்லால் நேருவே காரணம்

## - முன்னாள் இந்திய விமானப் படைத் தளபதி


ஏ.வை.டிப்னிஸ்

கடந்த 1962-ம் ஆண்டு சீனாவுடன் ஏற்பட்ட போரில் இந்தியா தோல்வி அடைந்தது. இதற்கு அப்போது பிரதமராக இருந்த நேருவே காரணம் என்று இந்திய விமானப்படை முன்னாள் தளபதி ஏ.வை.டிப்னிஸ் பரபரப்பு குற்றச் சாட்டை தெரிவித்துள்ளார். டெல்லியில் நடைபெற்ற "1962 போருக்கு 50 ஆண்டுகளுக்கு பிறகு" என்ற கருத்தரங்கில் பேசுகையில் அவர் இதை தெரிவித்தார். அவர் பேசுகையில், "சீனாவுடனான போரில் இந்தியாவின் தோல்விக்கு நேரு பெரும் பங்கு வகித்தார். அவர் உலக தலைவர் ஆகும் ஆசையில், நமது தேச நலன்களை அடகு வைத்தார். நேரு, எளிதில் கோபப்படுபவர். அவர் ஒரு ராணுவ தளபதியை பள்ளி மாணவனைப் போல நடத்தியதை நான் நேரில் பார்த்துள்ளேன்" என்று கூறினார். இதுபோல், "சீனாவுடனான போரில் விமானப்படையை பயன்படுத்தி இருந்தால், போரின் முடிவு வேறுவிதமாக இருந்திருக்கும்" என்று தற்போதைய விமானப்படை தளபதி என்.ஏ.கே.பிரவுனி சமீபத்தில் கூறியது, பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

# வடக்கின் அபிவிருத்திக்கு கடந்த 3 வருடங்களில் 129, 304 மில்லியன் ரூபா மூலதனச் செலவு

## பாரர்ளுமன்றத்தில் அமைச்சர் டக்ளஸ்

யுத்தம் முடிவுக்கு வந்து இக் குறுகிய மூன்று வருட காலத்தினுள் அரசாங்கம், இடம் பெயர்ந்த மக்களை விரைந்து மீளக்குடி யேற்றியது மாத்திரமல்லாது, பாதைகள், பாலங்கள், பாடசாலைகள் மற்றும் வைத்தியசாலைகள் ஆகியவற்றை நிர் மாணித்து வருவதோடு ஏனைய சகல உட்கட்டமைப்புகளான மின் சாரம், நீர்வழங்கல், மற்றும் இதர கட்டமைப்புக்களையும் நிர்மாணித்து வருகின்றதென்பதனையும் கூறி வைக்க விரும்புகின்றேன். இவ்வாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கடந்த பதினேழாம் திகதி, வரவு- செலவுத் திட்ட விவாதத்தில் உரையாற்றுகையில் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:

சுருங்கக் கூறின், 2009 மே மாதத்திலிருந்து வடமாகணத்தின் அபிவிருத்திக்காக, இவ்வருட இறுதிக்குள் முடிவுபெறவிருக்கும் வேலைத்திட்டங்கள் உள்ளடங்கலாக, ரூபா 123,304 மில்லியன் மூலதனச் செலவாக செலவிடப் பட்டுள்ளது. அதன் விபரமானது, ரூபா 29,224 மில்லியன் யாழ்ப் பாண மாவட்டத்திற்கும் ரூபா 28,706 மில்லியன் கிளிநொச்சி மாவட்டத்திற்கும் ரூபா 28,119 மில்லியன் முல்லைத்தீவு மாவட டத்திற்கும், ரூபா 26,376 மில் லியன் வவுனியா மாவட்டத்திற் கும் ரூபா 10,879 மில்லியன் மன்னார் மாவட்டத்திற்கும் ஆகும். இது ஒரு வரலாற்று ரீதியான சாதனையாகும். கடந்த காலங் களில் இம் மாவட்டங்களின் அபி விருத்திக்காக எந்தவொரு அர சாங்கமும் இத்தகையதொரு மிகப் பெரிய தொகையினைச் செலவ- ளித்திருக்கவில்லை. இந்த மாவட் டங்களில் உள்ள மாவட்டச் செய லகங்களின் முன்னேற்ற அறிக் கைகள் எனது இக்கூற்றுக்கு, சான்று பகரும். இம் மாவட்டங் களில் மேற்கொள்ளப்பட்ட பாரிய அபிவிருத்தித் திட்டங்களினால் இம் மாவட்டங்களின் உற்பத்தித் திறன் அதிகரிக்கப்பட்டுள்ளதோடு, நாட்டின் மொத்த உள்நாட்டு உற் பத்திக்கும் அவை பங்களிப்புச் செய்துள்ளன.



இந்த வரவு செலவுத்திட்டம் இலங்கையில் வடபகுதியை முற் றாகப் புறந்தள்ளி வைத்துள்ளது என தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் இச்சபையில் உரையாற றும் போது குறிப்பிடடார். அத்து டன், மாகாண சபைகளுக்கான ஒதுக்கீட்டில் வடக்கிற்கு எவ்வ ளவு தொகை ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது என்பதனை அவரால் அறியமுடியாமல் உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். இவ்வருடத் திற்கென மாகாணசபைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள மூல தனச் செலவீனம் ரூபா 14 பில் லியன் மாத்திரமே எனவும் அவர் மேலும் தனது உரையில் தெரிவ- ித்துள்ளார்.

2013 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளின் 246 மற்றும் 247 ஆம் பக்கங்களை இச்சபைக்கு சமர்ப்பிக்கின்றேன். மாகாண சபைகளுக்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளுக்கான இந்தப் பக்கங்களை மேலோட்ட மாகப் பார்க்கும்போது, வரவு செலவுத் திட்ட மூலதன செலவீட் டுத் தொகையாக ரூபா 5.1 பில்லியன், மற்றும் 3.8 பில்லியன் ஆகியவை முறையே கிழக்கு மற் றும் வடமாகாணங்களுக்கு ஒதுக் கீடு செய்யப்பட்டள்ளன என்ப தனை எவராலும் கண்டு கொள்ள முடியும். இம் மூலதன செலவீன ஒதுக்கீடுகள் ஏனைய சகல மாகாணங்களுக்கான ஒதுக்கீடுக ளுடன் ஒப்பிடுகையில், மிகக் கூடிய தொகையாகவும் இரண்டா வது மிகக்கூடிய தொகையாகவும் காணப்படுகின்றது. இது அரசாங் கத்தின் கொள்கையாகிய சம நிலைப்படுத்தப்பட்ட பிராந்திய அபிவிருத்தி மற்றும் இன்று வரை அபிவிருத்தி செய்யப்படாத பகு திகளாகிய குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களை அபி விருத்தி செய்தல் என்ற அரசின் கொள்கையினை மீள் வலியுறுத் தும் நடவடிக்கையாக அமைந் துள்ளது. தமிழ்த் தேசியக் கூட் டமைப்பின் இந்த உறுப்பினர் இவ்வாறானதொரு பொய்யான கூற்றை ஏன் கூறியுள்ளார் என எனக்குப் புரியவில்லை. இந்த உறுப்பினர் வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளின் உள்ளடக்கத் தைப் புரிந்து கொள்ளவில்லையா அல்லது இச்சபையையும் அவ ரின் ஊடகத்தின் மூலம் வெளி உலகையும் தப்பான வழியில் இட்டுச் செல்வதற்கு முயற்சிக் கின்றாரா என எனக்குப் புரிய வில்லை எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

## பாசையூர் இறங்குதுறை நிர்மாணம்

ஐ.ஓ.எம் நிறுவனத்தின் நிதியுதவியுடன் கடற்றொழில் திணைக் களத்தினால் நிர்மாணிக்கப்பட்டு வரும் பாசையூர் இறக்குதுறை அபிவிருத்திப் பணிகள் துரித கதியில் நடைபெற்று வருகின்றன.

நீண்ட காலமாக பெரும் நெருக் கடிகளுக்கு மத்தியில் பாசையூர் கடற்தொழிலாளர்கள் கடற்தொழி லில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில் 50 மில்லியன் ரூபா செலவில் இந்த இறங்கு துறை புனரமைப்பு பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இன்னும் ஒரு வாரகாலத்தில் நிர்மானப்பணிகள் நிறைவு பெறும் என குறித்த பகுதியில் கடமை யில் ஈடுபட்டுள்ள தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் தெரிவிக் கின்றனர்.

# விழிப்புலன் இழந்தவர்களுக்கு உதவ கிளிநொச்சியில் கிளை

(கிளிநொச்சி)

ஸ்ரீலங்கா விழிப்புலன் விழிப் புலன் இழந்தோர் சம்மேளனத் தின் முதலாவது வடமாகாண கிளை கிளிநொச்சி நகரில் அங் குரார்ப்பணம் செய்து வைக்கப் பட்டது. அத்துடன் கண்பார்வை யற்றோருக்கான உதவிகளும் வழங்கப்பட்டன.

கிளிநொச்சி மாவட்டப் பொலிஸ் பொதுமக்கள் தொடர்பாடல் பிரி வின் ஏற்பாட்டில் இப் பிரிவின் கேட்போர் கூடத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

பிரதமவிருந்தினராகக் கிளி நொச்சி- முல்லைத்தீவு மாவட்டங் களின் பிரதிப்பொலிஸ் மா அதிபர் நீல் தளுவத்த கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

கிளிநொச்சி பொலிஸ் அத் தியட்சகர் மகேந்திரா மற்றும் கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் பொதுமக்கள் தொடர்பாடல் பிரிவு பொறுப்பதிகாரி அராப்டீன் உட் பட பொலிஸ் அதிகாரிகள், ஸ்ரீ லங்கா விழிப்புலன் இழந்தோர் சம்மேளனத் தலைவர் ஜயவர்த் தன- கிளிநொச்சி வர்த்தன வங்கி அதிகாரிகள், பொலிஸ் பொதுமக் கள் பிரிவு ஆலோசகர்கள், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத் தினர் எனப் பலரும் கலந்து சிறப் பித்தனர்.

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கிளிநொச்சி, முல்லைத தீவு மாவட்டங்களின் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நீல் தளு வத்த உரையாற்றுகையில்:

கிளிநொச்சி மற்றும் முல்லைத் தீவு மாவட்டங்களில் யுத்தத்தி னாலும், பிறப்பிலும் ஏனைய வழி களாலும் கண்பார்வையை இழந்த மக்களின் பிரச்சினைகள் அதி கரித்து காணப்படுகின்றன.

இவ்வாறானவர்களுக்கு பல விதத்திலும் உதவ முன்வந்த ஸ்ரீ லங்கா விழிப்புலன் இழந்தோர் சம்மேளனத்தினரையும், கிளி- நொச்சி வர்த்தன வங்கியரயும் பாராட்டுகின்றேன்.

அத்துடன் ஸ்ரீலங்கா விழிப்புலன் இழந்தோர் சம்மேளனத்தின் முத லாவது வடமாகாணக் கிளையை கிளிநொச்சியில் நிறுவ முன்வந் தமைக்கு எமது நன்றியையும் தெரிவிக்கின்றேன் என்றார்.

# மருந்துக்காக ஆண்டு தோறும் 55 பில்லியன் ரூபா செலவு செய்யப்படுகின்றது

**- பேரசிரியர் சேனக பிபில ஞாபகார்த்த சங்கம்**

சேனக பிபிலயின் மருந்துப் பொருள் கொள்கையை அரசாங்கம் நடைமுறைப்படுத்த தவறியுள்ளதால் மருந்து பொருட்களை வாங்குவதில் பெருந்தொகையாக 55 பில்லியன் ரூபாவை ஆண்டு தோறும் நாடு செலவிட வேண்டியுள்ளதாக பேராசிரியர் சேனக பிபில ஞாபகார்த்த சங்கம் நேற்று குற்றம் சாட்டியுள்ளது.

2006 மஹிந்த சிந்தனையில் வாக்களிக்கப்பட்ட மருந்தகப் பொருள் கொள்கையை அரசாங்கம் நடைமுறைப்படுத்தினால் மருந்துகள், மருத்துவ கருவிகள் மீது செலவளிக்கப்படும் தொகையில் 70 சதவீதத்தை மீதப்படுத்த முடியும் என்றும் அவர் கூறினார்.

மருந்துகளுக்கு விலைக்கட்டுப்பாடு இல்லையாதலால் மருந்துகளை ஒரு நியமவிலையில் வாங்க முடியாதுள்ளது என பிபில ஞாபகார்த்த சங்கத்தின் செயலாளர் வைத்தியர் ஜயந்த பண்டார தெரிவித்தார்.

நீரிழிவு நோய்க்கு வழங்கப்படும் மெட்போமின் எனும் மருந்தை ஒரு ரூபாவுக்கு வாங்க முடியும் ஆனால் அது கடைகளில் 12 ரூபாவுக்கு விற்கப்படுகின்றது. இது போலவே பல மருந்துகள் அதியுச்ச விலையில் விற்கப்படுகின்றன என பண்டார கூறினார்.

இந்த பிரச்சினையை கவனிக்குமாறு நாம் சுகாதார அமைச்சிடம் கேட்டிருக்கலாம்.

ஆனால் மருந்து இறக்கும்பதி கூட்டுறவு மட்டும் உள்நாட்டு வர்த்தக அமைச்சின் கீழ் வருவதால் தம்மால் எதுவும் செய்ய முடியாதுள்ளது என அவர்கள் கூறுகின்றனர்.

ஆனால் இப்படி ஒரு பிரச்சினை இருப்பதுபற்றி அவர்களுக்கு தெரிந்திருக்கும் என்பதையே நான் சந்தேகிக்கிறேன்" என அவர் கூறினார்.

# மாத்தறை, இரத்தினபுரியில் கடும் மழை: இருவர் உயிரிழப்பு

மாத்தறை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் பெய்து வருகின்ற அடை மழையினால் இருவர் உயிரிழந்துள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

நொனாகம, அம்பலாந்தோட்ட பகுதியில் வீட்டின் சுவர் இடிந்து வீழ்ந்ததில் ஒருவரும் கஹவத்தைப் பகுதியில் இடம்பெற்ற மண் சரிவில் அகப்பட்டு ஒருவ ருமே உயிரிழந்துள்ளனர். இதே வேளை, மாத்தறை மாவட்டத்தில் பெய்து வரும் கடும் மழையைத் தொடர்ந்து அந்த மாவட்டத்தில் உள்ள தாழ் நிலப் பகுதிகளும் வீதிகளும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

மாகந்துர, ரஞ்சாகொட, அம்பலாந்தோட்ட, கும்புறுப்பிட்டிய ஆகிய பகுதிகளிலுள்ள தாழ்நிலங்களும் வீதிகளுமே இவ்வாறு மழை வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

# ஏசியா பவுண்டேசனின் வாழ்வாதார உதவி

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் ஏசியா பவுண்டேசன் நிறுவனத்தினால் வாழ்வாதார கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது.

யாழ் வணிகர் கழகத்தின் தலை வர் ஜெயசேகரம் தலைமையில் யாழ் வணிகர் கழக கேட்போர் கூடத் தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டத்தில் இதன் முதற்கட்டமாக தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் 14 பேருக்கு இந்த கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது.

அவர்களின் தேவைக்கு ஏற்ப 60 ஆயிரம் தொடக்கம் 1 லட்சம் ரூபா வரை இந்த கடன் உதவி வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# தமிழ் சமுதாயத்தின் உரிமைகளுக்கு அமெரிக்கா முன்னுரிமையளிக்கின்றது

**இலங்கை விஜயம் செய்துள்ள அமெரிக்காவின் பிரதி ராஜாங்க செயலாளர்**

இலங்கைக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள இராஜாங்க உதவி செயலாளரான அலீஸா அயர்ஸ் இலங்கை அரசாங்கத்தின் உயர்மட்ட அதிகாரிகளுடன் சந்திப்பை மேற்கொண்ட நிலையில் நேற்று நீதியமைச்சர் ரவூப் ஹக்கீமை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது பிரதம நீதியரசர் விடயத்தில் அமெரிக்காவின் நிலைப்பாடு குறித்து தெளிவுபடுத்தியுள்ளார். அத்துடன், வடக்கின் நிலவரங்கள் குறித்தும் அவர் பேசியுள்ளார்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளை செயற்படுத்துவதில் இலங்கை கண்டுள்ள முன்னேற்றம் குறித்து இதில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டது.

13ஆவது திருத்தம் பற்றி தற்போது நாட்டில் நிலவும் விவாதம் குறித்து கேட்டபோது, "அதிகாரப் பகிர்வும் தமிழ் சமுதாயத்தின் உரிமைகளும் அமெரிக்க அரசாங் கத்தின் முன்னுரிமையாக உள்ளது'' என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், அமெரிக்கா தான் ஆகக் கூடுதலான உதவியை மீளக் குடியமர்த்தலுக்காக வழங்கி உள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மனித உரிமைகள், சட்டத்துறை, நிர்வாகத்துறை மற்றும் நீதித்துறை என்பவற்றுக்கு இடையிலான அதிகாரப் பகிர்வு, பல்லின சமுதாயத்தின் சகிப்புத்தன்மை, பத்திரிகை சுதந்திரம் என்பவற்றை பூரணமாக மதித்து நடப்பதில் அமெரிக்கா எப்போதும் அக்கறையாக உள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

தனது இலங்கை விஜயத்தின் போது அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர்கள் சிலரையும் ஐக்கிய தேசிய கட்சி, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர்களையும் அலீஸ் அயர்ஸ் சந்தித்து கலந்துரையாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கஞ்சா வைத்திருந்த வயோதிபருக்கு விளக்கமறியல்

கஞ்சா போதைப்பொருள் வைத்திருந்த வயோதிபர் ஒருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

யாழ். நகரப்பகுதயில் 725 கிராம் கஞ்சாவுடன் ஆட்டோ ஒன்றில் பயணம் செய்த வேளையில், யாழ். பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் படி இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பண்டத்தரிப்பு பனிப்புலம் பகுதியைச் சேர்ந்த வயோதிபர் ஒருவரே கைது செய்யப்பட்டு, யாழ். நீதிவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டதை அடுத்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

# துப்பாக்கி ஏந்திய சிறார்களை புத்தகம் ஏந்த வைத்துள்ளோம்

**நாமல் எம்.பி.**



துப்பாக்கி ஏந்திய சிறுவர்களை புத்தகப் பை தூக்கச் செய்துள்ளோம் என ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் வடக்கு அரசியல் தலைவர்கள் திருப்தி அடைய வேண்டும். நாட்டின் கல்வித்துறையில் குறிப்பிடத்தக்களவு அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது.

கிராமிய பாடசாலைகளை அபிவிருத்தி செய்ய விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும். கிராமிய பாடசாலை மாணவர்களுக்கு ஆங்கிலம் மற்றும் கணனி ஆகிய பாடங்களை கற்கும் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையின் பின்னர் நாட்டின் சகல மாணவ மாணவியருக்கும் மடி கணனிகளை வழங்கும் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கிராமிய பாடசாலைகளிலும் பழைய மாணவர் சங்கங்கள் உருவாக்கப்பட வேண்டுமென நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

# கடவத்தையில் பெண்ணொருவர் கழுத்து வெட்டிக் கொலை

கடவத்தை - கோனஹேன - வேபட பகுதி வீடொன்றில் கழுத்துவெட்டி கொலை செய்யப்பட்ட நிலையில் பெண்ணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

38 வயதுடைய புஸ்பகாந்தி என்ற பெண்ணே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பெண் நேற்றுமுன்தினம் (20) காலை தனது வீட்டில் கணவருடன் உணவு உட்கொண்ட தாகவும் சம்பவம் இடம்பெற்ற வேளை வீட்டில் எவரும் இருக்க வில்லை எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த பெண்ணின் மகள் பாடசாலைவிட்டு வீடுவந்து பார்த்த போது தாய் இறந்து கிடப்பதை கண்டு அயலவர்களிடம் கூறிய பின் பொலிஸ் நிலையத்திற்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை.

மஹர நீதவான் மரண விசாரணைகளை மேற்கொண்ட பின் சடலம் பிரேத பரிசோதனைக்கென ராகம வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. கடவத்தை பொலி ஸார் மேல திக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பட்டதாரி பயிலுநர்களை உள்ளீர்த்தல்

(சண்டிலிப்பாய்)

யாழ் மாவட்டத்தில் நியமனம் செய்யப்பட்ட பட்டதாரிப் பயிலுனர்களில் அதிகளவான அமைச்சுக்கள், திணைக்களங்கள் என்பனவற்றிற்கு உள்வாங்கப்பட்டுள்ளதாக தெரிகின்றது.

கடந்த ஆடி மாதம் யாழ்மாவட்ட செயலாளரினால் யாழ்ப்பாணத்தின் பல பிரதேச செயலக பிரிவுகளிற்கும் நியமிக்கப்பட்ட பட்டதாரிப் பயிலுனர்களில் முதல்கட்டமாக ஒரு தொகுதியினர் பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கும் ஏனையவர்கள் கட்டம் கட்டமாக வேறு அமைச்சுக்கள், திணைக்களங்கள் என்பனவற்றிற்கு நியமிக்கப்பட்டனர்.

அண்மையில் மேலும் ஒரு தொகுதியினரின் பெயர் விவரங்களை மாவட்ட செயலகம், அவர்கள் உள் வாங்கப்பட்ட அமைச்சுக்கள், திணைக்களங்களை குறிப்பிட்டு பிரதேச செயலகங்களிற்கு அனுப்பி வைத்துள்ளது.

எனவே சுமார் 85 வீதத்திற்கு மேற்பட்டதாரிகள் உள்ளீர்ப்பு செய்யப்பட்டுள்ளனர்.

மீதிப் பட்டதாரிகளிற்கும் தங்களது விபரங்களை உடன் அனுப்பிவைக்குமாறும் பட்டதாரிகள் சார்பில் உருக்கமாக வேண்டப்பட்டுள்ளது.

# இந்திய வீட்டுத் திட்டம் உடன் விண்ணப்பியுங்கள்

(சண்டிலிப்பாய்)

இந்தியன் வீட்டுத்திட்டத் தெரிவிற்கான பட்டியலில் பெயர் குறிப்பிடப்படும், இதுவரை வீட்டுத்திட்ட விண்ணப்பப் படிவத்தினைப் பூர்த்தி செய்யாதவர்கள் உடனடியாக தங்கள் பகுதிக் கிராம அலுவலருடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவினுள் இந்திய வீட்டுத்திட்டம் வழங்குவதற்கான புள்ளி இடப்பட்டு பயனாளிகளைத் தெரிவு செய்வதற்காக பட்டதாரிப் பயிலுனர்கள் இலங்கை செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர்கள் ஆகியோர் இணைந்து கிராம அலுவலர் பிரிவு ரீதியாக விண்ணப்பப் படிவங்களை பூர்த்தி செய்து வருகின்றார்கள்.

முதல் கட்டமாக மேற்படி பிரதேச செயலாளர் பிரிவில் எட்டுக் கிராம அலுவலர் பிரிவுகள் தெரிவு செய்யப்பட்டு ஆரம்ப வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

எனவே இதுவரை இவ் விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்யாதவர்கள் தங்கள் பகுதி பட்டதாரிப் பயிலுனருடனோ அல்லது கிராம அலுவலருடனோ தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

தமிழ்நாதம்
Thamil Naatham
நவம்பர் மாதம் 22ஆம் திகதி வியாழக்கிழமை

# அக்கா, தங்கைகளோடு பிறக்காத மிருகங்கள்!

“தனிப்பட்ட உதவியாளராகப் பணிபுரியும் பெண்ணொருவருக்குப் பல வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன என்று ஊடக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. மூன்று உத்தியோகபூர்வ வாகனங்களும், அவற் றுக்கான சாரதிகளும், வேலைக்காரர்களும் அந்தப் பெண்மணிக்கு வழங் கப்பட்டன என்றும் சொல்லப்பட்டது. வரியிருப்பாளர்களின் பணத்தி லேயே இந்த வசதிகளெல்லாம் செய்து கொடுக்கப்பட்டன என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டது”

இப்படியொரு குற்றச்சாட்டினை ‘மருத்துவ நிர்வாக அதிகாரிகள் அரங் கம்’ என்ற அமைப்பு ஐந்து தினங்களுக்கு முன்னர் வெளியிட்ட அறிக் கையில் தெரிவித்திருந்தது.

சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, பத்து நாட்களுக்கு முன் னர் தெரிவித்த பாரதூரமான குற்றச்சாட்டுக்குப் பதிலடி கொடுக்கும் விதத்தில் மருத்துவ நிர்வாக அதிகாரிகள் சங்கம் வெளியிட்ட அறிக் கையில் இவ்வாறான காரசாரமான குற்றச்சாட்டும் வெளியிடப்பட்டிருந்தது.

“ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்” என்பார்கள். சுகாதார அமைச்சின் கீழுள்ள அரசாங்க நிறுவனங்களில் அதாவது அரசாங்க ஆஸ்பத்திரிகளில் பாலியல் குற்றங்கள் அதிகளவில் இடம் பெறுவதாக சுகாதார அமைச்சர் தெரிவித்த குற்றச்சாட்டின் எதிரொலி களே இந்த வார்த்தைப் பிரயோகங்கள்.

“பெண்கள் புதிய வேலைகளை, பதவியுயர்வுகளை, இடமாற்றங் களைக் கோரும்போது சுகாதாரப் பிரிவு சார்ந்த அதிகாரிகளினால் பாலி யல் தொந்தரவுக்கும், துஷ்பிரயோகத்துக்கும் உள்ளாக்கப்படுகின்றனர் என்று சுகாதார அமைச்சர் குற்றம் சுமத்தியிருந்தார். இதனையடுத்து, “இலங்கை சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து பேணப்பட்டுவந்த மதிப்புமிகு சுகாதார அமைச்சு அதிகாரிகளின் நல்ல பெயரும், கௌரவமும் இப்போது அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதோடு, மழுங்கடிக்கப்பட்டும் உள்ளது” - இவ்வாறும் மருத்துவ நிர்வாக அதிகாரிகள் சங்கம் அமைச்சர் மீது குற்றம் சுமத்தியுள்ளது.

“மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்” என்பது போல ஏதோ அதிகாரிகள் மீது மட்டும்தான் அமைச்சர் குற்றஞ்சாட்டினாரென்ற பாணியில் துள்ளிக் குதித்திருக்கிறது இந்த நிர்வாக அதிகாரிகள் சங்கம்.

அண்மையில் சுகாதாரம் சம்பந்தப்பட்ட மூன்று நூல்களின் வெளியீட்டு விழாவில், அரசாங்க ஆஸ்பத்திரிகளில் இடம்பெறும் பாலியல் துஷ்பிர யோகங்கள், தொந்தரவுகள் பற்றி சுகாதார அமைச்சர் காரசாரமாகவே கருத்துத் தெரிவித்திருந்தமை உண்மைதான்.

“அரசாங்க சுகாதார நிறுவனங்களிலுள்ள பல பெண் சிற்றூழியர் களும், நிர்வாக மட்டத்திலுள்ள பெண் ஊழியர்களும் கூடப் பாலியல் வக்கிரம் கொண்டவர்களால் பாதிப்புக்கு உள்ளாகின்றனர்” என்று அமைச்சர் கூறியது அப்பட்டமான உண்மை.

ஆஸ்பத்திரி சவச்சாலைக்குள் வைத்துப் பெண்களின் சடலங்களோடு சில்மிஷம் புரிகின்ற ஆண் சிற்றூழியர்களைப் பற்றிய பல்வேறு தகவல்கள் அவ்வப்போது வெளிவந்திருக்கின்றன.

சுகாதார அமைச்சர் வெறுமனே நிர்வாக அதிகாரிகளை மட்டும் குற்றம் சாட்டவில்லை. பாலியல் வக்கிரம் பிடித்தவர்கள் பல்வேறு துறைக ளிலும், பல்வேறு மட்டங்களிலும் இருக்கிறார்கள்.

களுபோவில ஆஸ்பத்திரியில் இரு ஆண் சிற்றூழியர்கள், ஒரு பெண் சிற்றூழியரைப் பாலியல் வன்புணர்ச்சிக்கு உட்படுத்திய சம்பவம் அண் மையில் அம்பலத்துக்கு வந்தது. சவச்சாலைக்குள் சடலமொன்றினைக் கொண்டு செல்வதற்கு அந்தப் பெண் சிற்றூழியரை உதவுமாறு கேட்டார் களாம். அவ்வாறான பணிகளில் ஈடுபட்டுப் பழக்கமில்லாத அந்தப் பெண் சிற்றூழியர் மயங்கிப்போனார். அந்தப் பெண் மயக்கம் தெளிந்து பார்த் தபோது தரையில் வீழ்ந்து கிடப்பதையும், பாலியல் துஷ்பிரயோகத் துக்கு உட்படுத்தப்பட்டிருப்பதையும் உணர்ந்திருக்கிறார். ஆனாலும் பயம், பழிவாங்கப்படலாமென்ற பீதி, அவமானம் ஆகிய காரணங்களால் புகார் தெரிவிக்கவே இல்லை.

கொழும்பு மருத்துவ ஆராய்ச்சி மையத்தில் மற்றொரு சம்பவமும் இடம்பெற்றிருக்கிறது. அனுராதபுர ஆஸ்பத்திரியிலிருந்து மேற்படி மையத்துக்குச் சம்பந்தப்பட்ட பெண் ஊழியர் இடமாற்றம் பெற்றுச் சென்றிருக்கிறார். அங்கு சில பாலியல் வக்கிரம் கொண்ட ஆண் ஊழி யர்களின் வக்கிர உணர்வுகளுக்கு இரையாகியிருக்கிறார். உத்தியோக ரீதியில் முறைப்பாடொன்றினைத் தெரிவிக்காமலேயே இந்தப் பெண் ஊழியர் மீண்டும் அனுராதபுர ஆஸ்பத்திரிக்கே இடமாற்றம் பெற்றுச் சென்றுவிட்டார்.

யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் கூட ஒரு பெண் தாதி தான் பாலியல் தொந்தரவுக்கு உள்ளாக்கப்பட்டாரென்று அண்மையில் புகார் தெரிவி த்திருக்கிறார்.

அரசாங்க ஆஸ்பத்திரிகளில் பாலியல் சேஷ்டைகள் அதிகம் இடம் பெறுவதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. இரவு, பகல் என்றில் லாமல் 24 மணித்தியாலங்களும் இயங்கும் நிறுவனங்கள்தான் ஆஸ்பத் திரிகள். இது வக்கிர உணர்வு கொண்டவர்களுக்கு வசதியானவை. பாலியல் தொந்தரவு, பாலியல் துஷ்பிரயோகம், பாலியல் வன்புணர்ச்சி இவையெல்லாம் இடம்பெற்றாலும் கூட, பாதிக்கப்பட்ட பெண்கள் புகார் தெரிவிக்க முன்வருவதில்லை. இதற்குக் காரணங்களும் இருக்கின்றன. பெண் மீது குற்றம் புரிந்தவனிலும் பார்க்கப் பாதிக்கப்பட்ட பெண்ணை ஏளனமாகப் பார்க்கின்ற ஒரு சமூக அமைப்புத்தான் இங்கே இருக் கின்றது.

பாலியல் தேவை சர்வ வியாபகமானது. சகல உயிரினங்களின் தேவையும்கூட. ஆனாலும் கட்டுப்பாடுகளோடும், மனித கௌரவங்க ளோடும் இவை சம்பந்தப்பட்டவை. பாலியல் வக்கிரம் கொண்ட ஆண்களை, அக்கா, தங்கைகளோடு பிறக்காதவர்கள் என்று சாடுவதைத் தவிர எம்மால் என்ன செய்ய முடிகிறது?

இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
ஆசிரியர் பீட தொலைபேசி- 021-2219567 / பக்ஸ் 021-2219505,
விளம்பரம்/விநியோகம் : 021-2219506
e-mail: tnaatham@yahoo.com

# என்னைக் கண்ணாடிப் பத்மநாதன் என்றும் அழைத்தார்கள்

## கிளிநொச்சியில் வழங்கிய பேட்டியில் கே.பி.

(நேற்றைய தொடர்ச்சி)

**கேள்வி:** எப்படி மற்றும் ஏன் இது நடந்தது?

பதில்: ராஜீவ் காந்தியின் கொலை வழக்கு தொடர்பான சில சம்ப வங்கள் பற்றி என்னிடம் கேள்வி கேட்க வேண்டும் என்று இந்திய அதிகாரிகள் ஸ்ரீலங்கா அதிகாரி களிடம் ஒரு வேண்டுகோள் விடுத்திருந்தார் கள். அந்த வேண்டுதலை மரி யாதை நிமித் தம் ஸ்ரீலங்கா ஏற்றுக் கொண்டது. இந்தச் சம்பவத்தில் நான் முற்றி லும் ஒரு அப்பாவியாக இருந் தபடி யால் என்னிடம் மறைப்ப தற்கு எதுவும் இருக்கவில்லை. எனவே நான் ஒத்துழைக்க தயாரானேன்.



**கேள்வி:** அந்தச் சந்திப்புகள் எங்கே நடைபெற்றன,மற்றும் ஸ்ரீலங்கா அதிகாரிகளும் அதில் தொடர்பு பட்டிருந்தார்களா?

**பதில்:** இந்திய அதிகாரிகளுட னான சந்திப்பு கொழும்பிலுள்ள பாதுகாப்பு அமைச்சக வளா கத்திலேயே நடைபெற்றது. இரண்டு சந்தர்ப்பங்களிலும் ஸ்ரீலங்கா அதிகாரிகள் பார்வை யாளர்களாக அங்கு சமூகமளித் திருந்தார்கள். பேச்சில் அவர்கள் கலந்து கொள்ளவில்லை ஆனால் அந்த சந்திப்பில் நடந்தவற்றை குறிப்பெடுத்துக் கொண்டார்கள்.

**கேள்வி:** இந்த இரண்டு சந்திப்பு களுக்கும் இடையே உள்ள வேறுபாடுகள் யாவை?

**பதில்:** முதலில் 2010ல் சி.பி.ஐ அதிகாரிகள் குழுவொன்று என்னை சந்தித்தது. அது ஒரு நேர்காணல், ஒரு விசாரணை அல்ல. பின்னர் 2011ல் மற்றொரு இந்திய அதி காரிகள் குழுவொன்று என்னைச் சந்தித்தது. இது அநேகமாக ஒரு கலந்துரையாடலைப் போன் றிருந்தது. முதலாவது சந்திப்பு விசேடமாக ராஜீவ் கொலை சம்பந்தமாக இருந்தது, மற்றும் இரண்டாவது எல்.ரீ.ரீ.ஈ யுடன் தொடர்பான அரசியல் முனனேற் றங்கள் பற்றிய பொதுவான ஒரு கலந்துரையாடலாக இருந்தது.

**கேள்வி:** முதலாவது சந்திப்பில் என்ன நடந்தது என்பதை உங்க ளால் நினைவுபடுத்த முடிகிறதா? சி.பி.ஐ உங்களிடம் என்ன கேட்டது?

**பதில்:** ராஜீவ் காந்தியின் கொலை யை விசாரிக்கும் சி.பி.ஐ, என்னி டம் சில நேரடிக் கேள்விகளைக் கேட்டார்கள். முதலில் இந்தக் கொலையை பற்றி எனக்கு ஏதாவது முன்கூட்டியே தெிந்தி ருந்ததா என அவர்கள் அறிய விரும்பினார்கள். எனக்கு எந்த அறிவும் கிடையாது என உண் மையாகப் பதிலளித்ததோடு, சம்பவம் நடைபெற்ற சமயம் நான் இந்தியாவுக்கு வெளியே இருந்தேன் என்பதை அவர்களி டம் தெரிவித்தேன். இரண்டாவ தாக இந்த நடவடிக்கைகளுக் காக நான் ஏதாவது நிதியுதவி வழங்கினேனா என அடுத்து அவாகள் என்னிடம் கேட்ட போது, இல்லை என்று நான் பதிலளித்தேன். இப்படியான நடவடிக்கைகள் எல்.ரீ.ரீ.ஈயின் புலனாய்வுப் பிரிவினராலேயே திட்டமிடப்படுகின்றன, அவர்க ளுக்கு சொந்தமாக ஒரு வரவு செலவு திட்டம் உள்ளது மற்றும் அவர்கள் என்னில் தங்கியிருப் பதில்லை என்று அவர்களிடம் நான் விளக்கி கூறினேன்.பின்னர் அவர்கள் குண்டு பொருத்திய இடைப்பட்டி மற்றும் சிவராசனின் துப்பாக்கி என்பனவற்றை பற்றி என்னிடம் கேட்டார்கள்.

**கேள்வி:** அந்தக் கேள்விகள் சரியாக எதைப்பற்றி அமைந்தி ருந்தன?

**பதில்:** நல்லது குண்டு பொருத் திய இடைப்பட்டியை பற்றிச் சொல்வதானால், ராஜீவ் காந்தி யை கொன்று தன்னையும் வெடி க்க வைத்த அந்தப் பெண் அணிந்திருந்த இடைப்பட்டியில் வெடிபொருட்கள் பொருத்தப்பட் டிருந்தன. அந்த இடைப்பட்டி மற்றும் வெடிபொருட்களை நான்தான் வழங்கினேனா என அவர்கள் என்னிடம் வினாவி னார்கள். அதற்கு இல்லை யென்று நான் பதிலளித்தேன். அந்த ஆர்.டி.எக்ஸ் வெடிமருந்து களை இந்தியாவிலேயே வாங்க முடியும், வெடிமருந்துகளை வெளி நாட்டில் கொள்வனவு செய்து அதில் ஒரு சிறுபகுதியை இடைப் பட்டியில் பொருத்துவதற்காக அவர்களுக்கு வழங்குவதற்கு நான்தான அவசியம் என்கிற தேவை கிடையாது என்று அவர்களுக்கு விளக்கிக் கூறி னேன். எனது அறிவுக்கு எட்டி யவரை அந்த வெடி மருந்து பொருத்திய இடைப்பட்டி வெளி நாட்டில் வாங்கப்பட்டதல்ல, உள்ளூரிலேயே எல்.ரீ.ரீ.ஈ யினால் தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும் என்று நான் அவர் களிடம் தெரிவித்தேன். அவர்க ளும் அதை ஏற்றுக் கொண்டது போலத் தோன்றியது.

**கேள்வி:** சிவராசனின் துப்பாக்கி என்பது என்ன? சிவராசன் என்று நீங்கள் குறிப்பிடுவர் இந்தக் கொலையின் பிரதான சூத்திரதா ரியாகச் செயற்பட்டு பின்னர் பெங்களூரில் தற்கொலை செய்து கொண்ட அந்த ஒற்றைக் கண் மனிதரைத்தானே?

**பதில்:** ஆம். அவரைத்தான் இந்தியர்கள் ஒற்றைக்கண் சிவராசன் என்று குறிப்பிடுவார் கள். வெளிப்படையாக அவர் தன்வசம் ஒரு 9 மி.மீ கைத்துப் பாக்கியை வைத்திருந்தார். எனவே அந்த துப்பாக்கியை நான் தனிப்பட்ட முறையில் சிவராசனுக்கு வழங்கியிருந் தேனா என்று இந்திய மத்திய புலனாய்வுப் பிரிவினருக்கு அறிந்து கொள்ள வேண்டியிருந் தது. உண்மையில் நான் அதை வழங்கவில்லை எனவே அதை நான் கொடுக்கவில்லை என்று சி.பி.ஐ. யிடம் தெரிவித்தேன் அவர்கள் அதை ஏற்றுக் கொண் டதாகத் தெரிந்தது.

**கேள்வி:** இரண்டாவது சந்திப் பைப் பற்றிச் சொல்லுங்கள் அதில் என்ன நடந்தது?

**பதில்:** நான் ஏற்கனவே உங்க ளுக்குச் சொல்லியதுபோல இந்தச் சந்திப்பு முற்றிலும் ஒரு கலந்துரையாடலை போலவே இருந்தது. முதலாவது கூட்டத் தில் சி.பி.ஐ உத்தியோகத்தர் கள் மட்டுமே கலந்து கொண்டி ருந்தார்கள். ஆனால் இந்தக் கூட்டத்திற்கு சி.பி.ஐ அல்லாத மற்றுமொரு நபரும் வந்திருந் தார்.

**கேள்வி:** ரோ? அல்லது வெளிவிவகார அமைச்சு?

**பதில்:** இருக்கலாம், ஆனால் எனக்குத் தெரியாது. எப்படியாயி னும் அது ஒரு சாதாரண கலந்து ரையாடல். மறுவாழ்வளிக் கப்பட்ட எல்.ரீ.ரீ.ஈ அங்கத்தவர்களின் எதிர்காலம், புலம்பெயர் சமூகம் மற்றும் புலம் பெயர் சமூகத்தி லுள்ள அமைப்புகள்,ஆயுதப் போராட்டத்தின் விளைவுகள், தமிழ் மக்களின் நிலை போன்ற அநேக விடயங்களைப்பற்றி நாங்கள் பேசினோம். நான் எனது கருத்துக்களை மிகவும் வெளிப்படையாகவே தெரிவித் தேன். என்னுடைய நேர்மையான கருத்துக்களைக் கேட்டு அவர்கள் சிறிது ஆச்சரியமடைந் தது போலத் தெரிந்தது, ஆனால் அதைப் பாராட்டியது போலவும் தெரிந்தது.

**கேள்வி:** இந்திய அதிகாரிகளு டன் மூன்றாவதாக ஒரு சந்திப் பும் இடம்பெறுமா? உங்களுடன் ஒரு கலந்துரையாடல் அல்லது நேர்காணல்?

**பதில்:** எனக்குத் தெரியாது. ஆனால் இந்திய அதிகாரிகளு டன் ஒரு சந்திப்பை ஏற்படுத்த இலங்கை விரும்பினால், கொழும் புடன் ஒத்துழைக்க நான் தயார். நான் இந்திய அதிகாரிகளைச் சந்தித்தது ஏனென்றால் நான் அப்படிச் செய்யவேண்டும் என்று இலங்கை விரும்பியது, மற்றும் இலங்கை அதிகாரிகளும் அங்கு பிரசன்னமாக இருந்தார்கள். இல்லாவிட்டால் நான் அதற்குச் சம்மதித்திருக்க மாட்டேன். முந் தைய இரண்டு சந்திப்புக்களை-யிட்டும் இந்தியா திருப்தியடை யாவிட்டால், திரும்பவும் என்னி டம் கேள்வி கேட்கவோ அல்லது பேசவோ விரும்பினால், நான் அதற்குத் தயார், ஆனால் இலங்கையும் விரும்பினால் மட்டுமே அது நடக்கும்.

# இலங்கை பொலிஸ் திணைக்களம் உப பொலிஸ் பரிசோதகர் பதவி

இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் தகுதிகாண் உப பொலிஸ் பரிசோதகர் பதவிக்கு இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. கீழ்க்காணும் வகையில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் "பணிப்பாளர் (ஆட்சேர்ப்பு), பயிலுனர் ஆட்சேர்ப்பு அலுவலகம், இல. 375, ஸ்ரீ சம்புத்தத்வ ஜயந்தி மாவத்தை, கொழும்பு 06" என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தங்களால் விண்ணப்பிக்கப்படும் பதவிப் பெயரினைக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் 2013.01.15 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் மேற்குறிப்பிட்ட முகவரியை வந்தடையுமாறு அனுப்பப்படல் வேண்டும்.

தாமதித்து பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் பொலிஸ் திணைக்களத்தினால் விண்ணப்பங்கள் வழங்கப்படமாட்டாது.

3. சம்பள அளவுத்திட்டம்.- ரூபா 1,90,200 - 7 x 2,160 - 2 x 2,880- 8 x 3,840 - 17 x 4,500 - ரூபா 3,18,300. மேலும் அரச உத்தியோகத்தர்களுக்கானவாழ்க்கைச் செலவுகொடுப்பனவுக்கும் அத்துடன் 31/ 11 ஆம் இலக்க மற்றும் 12.12.2011 ஆந் திகதிய பொது நிர்வாக சுற்றுநிருபத்துக்கும் அமைவானகொடுப்பனவுகளுக்கும் உரித்துடையவராவர்.

மேற்கூறப்பட்ட சம்பள அளவுத் திட்டத்திற்கு மேலதிகமாக கீழ்க்காணும் கொடுப்பனவுகள் மாதந்தோறும் வழங்கப்படும் :-

(அ) விசேட கடினக் கடமைக் கொடுப்பனவுகள் :

(1) வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் சேவையின் பொருட்டு ரூபா 1,200

(2) ஏனைய பிரதேசங்களில் சேவையின் பொருட்டு ரூபா 600.

(ஆ) இணைந்த கொடுப்பனவுகள் :

(1) வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் சேவையின் பொருட்டு ரூபா 12,000

(2) ஏனைய பிரதேசங்களில் சேவையின் பொருட் டு ரூபா 6,400.

(அ) இலவச போக்குவரத்து வசதிகள்

(ஆ) உத் தியோகத்தர்களுக்கு இலவச மருத்துவ வசதி (வெளிநாடுகளிலும் வைத்திய வசதிகள் பொருட்டு) பண உதவிகள் வழங்கப்படும்

(இ) சகல சீருடைகளும் இலவசமாக வழங்கப்படும்ளு

(ஈ) விளையாட்டுத் திறன்களை வளர்த்துக்கொள்ள உதவிகள் வழங்கப்படும்

(உ) கடமைகளுக்கான பிரயாணச் செலவுகள் கடினமான வேலைகளுக்காகவும் அத்துடன் திறமையான கடமைகளைச் செய்வதற்காகவும் வெகுமதிகளாகப் பணம் வழங்கப்படும்.

4. தேவையான அடிப்படைத் தகைமைகள் :

(அ) வயதெல்லை :

வர்த் தமானி அறிவித்தலின்படி விண்ணப்ப முடிவுத் திகதியன்று 18-28 வயதிற்கு உட் பட் டவராக இருத்தல் வேண்டும். ஏற்கனவே பொலிஸ் திணைக் களத் தில் சேவை செய்யும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும், பாதுகாப்பு உதவி உத்தியோகத்தர்களுக்கும் (SA) விண்ணப்பங்களினை ஒப்படைக்கும் கடைசித் திகதி அன்று 30 வயதிற்கு உட்பட்டவராக இருந்தால் அவர்களும் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவர்.

(ஆ) கல்வித் தகைமைகள் :

* க. பொ. த. (சா.தர) பரீ ட்சையில் கணிதம்/ ஊடகமொழி உட்பட 04 பாடங்களில் திறமைச் சித்தி பெற்றுள்ளதுடன் ஒரே தடவையில் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

* க. பொ. த. (உ. தர) பரீட்சையில் ஒரே தடவையில் 3 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

குறிப்பு 1.- இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் வகைப்படுத்தலின்படி பாடங்களின் எண் ணிக்கையை வகைப்படுத்தும் போது விஞ்ஞான பாட இலக்கங்கள் 41 உம் 44 உம் ஒரு பாடமாகவும், இல. 42, 45 ஐக் கொண்ட கணித பாடங்கள் ஒரு பாடமாகவும் கருதப்படும்.

குறிப்பு 2.- க.பொ. த. (சா.தர) பரீட்சையில் எழுத்துப் பரீட்சையில் தொழில்நுட்ப பாடத்தில் சித்தியடையாமல் அதே பாடத்தில் செயல் முறைப்பரீட்சையில் சித்தியடைந் திருந்தபோதும் அப்பாடத்தில் சித்தியடையாததாக கருதப்படும்.

குறிப்பு 3.- விருப் பத்திற்குரிய தமிழ், ஆங்கிலம் மற்றும் சிங்களம் ஆகிய பாடங்கள் க.பொ.த. (சா.தர) பாடத்திட்டத்திற்குள் உள்ளடக்கப் படாமையால் அப் பாடங்களில் சித்திபெறுதல் க. பொ. த. (சா. தர) பரீட்சையில் சித்தியெய்திய பாடங்களாக கருதப்படமாட்டாது.

(இ) பௌதிகத் தகைமைகள் :

உயரம் : 5 அடி 6 அங். (ஆகக் குறைந்தது)

மார்பு : 32 அங் . ஆகக் குறைந்தது (வெளிச் சுவாசத்தின் போது)

குறிப்பு 1.- சிறந்த விளையாட்டுத் திறமையுடைய தேசிய மட்டத்தில் விளையாட்டுப் போட்டிகளில் திறமை காட்டியுள்ள அல்லது சர்வதேச போட்டிகளில் பங்குபற்றி இலங்கைக்கு புகழ் ஈட்டித்தந் துள்ள விண்ணப் பதாரர் ஒருவரின் பௌதிக தகைமைகள் குறைவாக இருப்பினும் அவர் பிற தகைமைகளைப் பூர்த்தி செய் திருப்பின் பொலிஸ் மா அதிபரின் ஆலோசனையின்படி தகைமை பெறுவர்.

(ஈ) பார்வை தொடர்பான தேவை :

ஒவ்வொரு கண்ணிலும் பார்வை 6/12 க்கு குறைவாக இருத்தலாகாது. ஒரு கண்ணின் பார்வை 6ஃ 6 ஆகவும் மற்றைய கண்ணின் பார்வை 6/18 ஆகவும் இருப்பின் ஏற் றுக் கொள்ளப்படும். நிறப்பார்வை சாதாரணமாக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் ஒருவர் மூக்குக் கண்ணாடி அல் லது பொருத்து வில்லைகள் பாவிப் பவராயின் தகைமை அற் றவராவார்.

(உ) பிற தகைமைகள் :

விண்ணப்பதாரர் திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும் . (விவாகரத்துப் பெற்றவர்கள், விவாகமானவர்களாகக் கருதப்படுவர்.) மற்றைய தகைமைகளை உடைய ஏற்கனவே பொலிஸ் திணைக்களத்தில் பணிபுரியும் அலுவலர்களுக்கும் மற்றும் பாதுகாப்பு உதவி உத்தியோகத்தர்களுக்கும் (SA) இது ஏற்புடையதாகாது.

5. ஆட்சேர்ப்பு முறை.- தெரிவுசெய்யப்படும் விண் ணப்பதாரிகள் பொலிஸ் திணைக்களத்தினால் நடாத் தப்படும் அடிப்படைத் தகைமைப் பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும் . அதில் சித்தியடைந் தவர்கள் மாத்திரம் பின்வரும் உடற் தகுதிகாண் பரீட்சையில் பங்குபற்றலாம் அதாவது மனோவலிமை பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும்.-

(1) 1000 மீற்றர் - 3 நிமிடங்கள் 14 விநாடிகள்.

* பௌதிகப் பரீ ட்சையில் சித் தியடைந்தவர்கள் மாத்திரம் இறுதிநேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சையில் 40… அல்லது அதற்கு மேல் புள்ளிகள் எடுப் பவர்கள் மாத்திரமே இறுதி எழுத்துப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர் .

எழுத்து பரீட்சை :

(i) இவ்வெழுத்துப் பரீட்சை இரு வினாத்தாள்களை உள்ளடக்கியது.

அவை :-

* 45 நிமிடங் களில் 500 சொற்களுக்கு குறையாமல் ஒரு விடயம் தொடர்பாக கட்டுரை எழுதுதல்

* பொது அறிவும் பொது நுண்ணறிவும் (01 மணித்தியாலம்.)

6. வைத்தியப் பரீட்சை.- முன் னுரிமை பட்டியல் மற்றும் திறமை ஒழுங்கிற்கு அமைவாக தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் தமது நியமனத்திற்கு முன்னர் வைத்திய பரீட்சைக்கு தோற்ற வேண்டும். பரீட்சையில் சித்திபெறாதோர் நிராகரிக் கப்படுவர்.

7. பின்னணி விசாரணைகள்.- (அ) விண்ணப்பதாரரின் நன்நடத்தையை உறுதிப்படுத்த அவரின் நெருங்கிய உறவினர்கள் மற்றும் நண்பர்களின் நன்நடத் தைகள் தொடர் பாகவும் விசாரணைகள் மேற்கொள்ளப்படும் . துர்நடத்தையுள்ள விண்ணப்பதாரர்கள் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டார்கள்.

(ஆ) விண்ணப் பதாரி பொய் யான தகவல்கள் வழங் குவது அவரை ஆட் சேர்ப்பிற்கு தகைமை அற்றதாக்கும். ஆட்சேர்ப்பின் பின்னர் கொடுக்கப் பட்டுள்ள தகவல்கள் பொய்யானது என வெளிப்பட்டால் சேவையில் இருந்து நீக்கப்படுவர் .

8. அரச மொழி தேர்ச்சிக் கொள்கையை அமுல்படுத்தல் :

* பொது நிருவாக மற்றும் உள்நாட்டலுவல் கள் அமைச்சினால் வெளியிடப்பட்ட 07/ 2007 ஆம் இலக்க 2007.04.28 ஆந் திகதிய சுற்று நிருபத்தின் பிரகாரம் 01.07.2007 ஆந் திகியிலிருந்து அரச சேவைக்கு/ மாகாண அரச சேவைக்கு சேர்த்துக் கொள்ளப் பட்டவர்கள் தாம் சேவையில் சேர்ந்த அரச கரும மொழிக்கு மேலதிகமாக மற் றைய அரச கரும மொழியிலும் சேவையில் சேர்ந்த திகதியில் இருந்து 5 வருடத்திற்குள் தேர்ச்சி பெறல் வேண்டும் .

* 2007.07.01 ஆந் திகதி தொடக்கம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவி நிலைக்கு கீழே சேர் க் கப்பட்ட அலுவலர்கள் , அரச கரும மொழிகள் திணைக்களத் தினால் நடாத்தப்படும் மொழிப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும் .

* நியமனத் திகதியில் இருந்து 5 வருடத் திற்குள் இரண்டாம் அரச கருமமொழியில் சித்தியடையாதவர்கள் குறித்த மொழியில் தேர்ச்சியடையும் வரை சம்பள ஏற்றங்கள் நிறுத்தி வைக்கப்படும்.

9. நியமனக் கொள்கைகள். - இப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கு உட் பட்டதுமாகும் . விதவைகள்/ தபுதாரர்/ அநாதைகள் ஓய்வூதியதிட்டத்திற்கு பங்களிப்பு செய்வதற்கு உரித்துடையவர்.

10. சேவை நிபந்தனைகள்.- (அ) இந்நியமனம் 3 ஆண்டு கால தகுதிகாண் காலத்தை அடிப்படையாகக் கொண்டது.

(ஆ) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர் அரசாங்கத்தின் மொழிக் கொள்கைக்கு இணங்க ஏற்கனவே ஆக்கப்பட்ட விதிகளுக்கோ அல்லது இனிமேல் ஆக்கப்படக்கூடிய விதிகளுக்கோ அமைந்தொழுக வேண்டும்.

(இ) அவர்கள் தாபனக் கோவையின் I ஆம், II ஆம் தொகுதிகளில் சம்பந்தப்பட்ட ஏற்பாடுகள் நிதி ஒழுங் கு விதிகள், திணைக்களக் கட்டளைகள் அத்துடன் பொலிஸ்மா அதிபரினால் அல்லது அரசாங்கத்தினால் காலத்திற்குக் காலம் வெளியிடப்படும் பிற கட்டளைகளுக்கும் உட்பட்டவராவர்.

(ஈ) பதவி உறுதிப்படுத்துவதற்கு முன்னர் ஒவ்வொரு உத்தியோகத்தர்களும் விதிக்கப்பட்ட திணைக்களப் பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும். விதிக்கப்படும் பரீட்சையில் சித்தியடையத் தவறுவோர் அல்லது பொலிஸ் கடமைகளை ஆற்றுவதற்குத் தகுதியற்றவர் எனக் கருதப்படுவோர் பொலிஸ் சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவார்.

(உ) பொலிஸ்மா அதிபரின் அங் கீ காரம் இல்லாமல் தமது பதவியில் உறுதிப்படுத்தும் வரை திருமணம் செய்ய அனுமதிக்கப்படமாட்டாது. எனினும் 1973.02.28 ஆந் திகதிய 41 ஆம் இலக்கம் கொண்ட பொலிஸ் வர்த்தமானியின் பகுதி II பிரகாரமும் மற்றும் 2006.10.19 ஆந் திகதிய மற்றும் 1952/ 2006 ஆம் இலக்க 2007.08.09 ஆந் திகதிய பொலிஸ்மா அதிபரின் சுற்றுநிருபத்தின் (திருத்தப்பட்டது) பிரகாரம் திருமணம் செய்வதற்கான விசேட காரணங்களைத் தெரிவித்து பொலிஸ்மா அதிபரின் அங்கீகாரத்துடன் திருமணம் செய்யமுடியும்.

(ஊ) தெரிவுசெய்யப்பட்ட விண்ணப் பதாரர் கள் பயிற்சிக்குப் பின் 3 வருட தகுதிகாண் நிலையில் பொலிஸ் திணைக் களத்திலேயே பணியாற்ற வேண்டியதுடன் தகுதிகாண் சேவைக் காலம் முடிவடை வதற்கு முன்னர் அவர்கள் பதவி விலக விரும்பின் பதவி விலகல் கடிதத்தை சமர்ப்பிக்கும் காலம்வரை அவருடைய பயிற்சிக்காகவும் சீருடை மற்றும் ஏனையவைகள் தொடர்பில் ஏற்பட்ட செலவினங்களை செலுத்துவதற் கு விருப்பம் தெரிவித்து ஒப்பந்தமொன்றில் கையொப்பமிடல் வேண்டும். அப்பெறுமதி பொலிஸ் பயிற்சி கல்லூரியின் பணிப்பாளரினால் தீ ர்மானிக்கப்படும். பதவி விலகலை ஏற்றுக்கொள் வதானது 1985 ஆம் ஆண்டின் தாபன விதிக் கோவையின் I ஆம் தொகுதியின் V ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவிற்கு ஏற்புடையதாக இருத்தல் வேண்டும்.

(எ) தகுதிகாண் உதவிப் பொலிஸ் பரிசோதகர்கள் பயிற் சியினை ஆரம்பித்தவுடன் உடனடியாக 1693/ 2003 ஆம் இலக்க பொலிஸ் மா அதிபரின் சுற்றுநிருபத்திற்கு இணங்க பொலிஸ் ஒழுக்காற்றுக் கோவையினை பின்பற்றுவதாக பிரமாணம் செய்தல் வேண்டும்.

(ஏ) தகுதிகாண் உதவிப் பொலிஸ் பரிசோதகர் பொலிஸ் பயிற்சி கல்லூரியில் பயிற்சி ஆரம்பித்தவுடன் உடனடியாக பொலிஸ் மா அதிபரின் 1804/ 2004 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அரச சேவைக்கு கட்டுப்பட்டு நடப்பதாக உறுதி/ சத்தியம் செய்ய வேண்டும்.

(ஒ) தகுதிகாண் உதவிப் பொலிஸ் பரிசோதகர் தனது பதவியை உறுதிப்படுத்தியபின் , பொலிஸ் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்வு பெறுவதற்குவாய்ப்புண்டு.

11. (அ) இவ்வர்த்தமானியின் பகுதி I : தொகுதி II (அ) வில் வெளியிடப்பட்டுள்ள அரச சேவை நியமனங்களுக்கு ஏற்பு டைய பொது நிபந்தனைகளுக்கு கவனம் ஈர்க்கப் படுகின்றது.

(ஆ) 1990.03.10 ஆந் திகதிய 15/ 90 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக் கையின் நியதிகளின்படி ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

12. விண்ணப்பதாரர் தமது விண்ணப்பத்துடன் கீழ்க்காணும் ஆவணங்களின் பிரதிகளை இணைத்தல் வேண்டும் . (மூல ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் ஆகாது) :-

(அ) பிறப்புச் சான்றிதழ்

(ஆ) அண் மையில் பெறப்பட்ட குணச் சான்றிதழ்கள் இரண்டு (உறவினர்கள் அல்லாதவர்களிடமிருந்து பெறப்பட்டது)

(இ) கல்வித் தகைமைச் சான்றிதழ்கள் .

(ஈ) விசேட சாதனையுடன் விளையாட்டுத் துறையில் பெற்ற சான்றிதழ்கள் அல்லது பாடத்திற்குப் புறம்பாக பெற்ற சான்றிதழ்கள்

(உ) சேவையில் அனுபவம் சம்பந்தமான சான்றிதழ் (இருப்பின்)

(ஊ) தேசிய அடையாள அட்டையின் பிரதி.

13. (அ) தற்போது அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரர் கள் தமது விண்ணப்பங்களை தத்தமது திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அத்துடன் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படின் அவரை விடுவிக்க முடியும் என்ற சான்றிதழ்களும் இணைக்கப்படல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரர் 11" x 8" அளவில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை தமது சொந்தகையெழுத்தில் பூர ணப்படுத்தி சான்றிதழ்களது பிரதிகளுடன் 2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பப்படல்வேண்டும். எக் காரணம் கொண்டும் இத் திணைக்களத்தின் எந்த உத்தியோ கத்தர்களிடமும் தனிப்பட்ட முறையில் விண்ணப்பங்களை நேரடியாக கையளித்தலாகாது.

14. இவ்வறிவித்தலின் விதிமுறைகளுக்கு அமைவுறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் அது தொடர்பாக விண்ணப்பதாரருக்கு அறிவிக்கப்படமாட்டாது.

குறிப்பு.- பரீட்சைக்கும் , நேர்முகப் பரீட்சைக்கும் அழைக் கப்படும் விண்ணப்பதாரர்களுக்கு போக்குவரத்துச் செலவுகளோ, பிற செலவுகளோ வழங்கப்படமாட்டாது.

பொலிஸ் மா அதிபர். பொலிஸ் தலைமையகம்,
கொழும்பு 01.

**மாதிரி விண்ணப்பப் படிவம்**

இலங்கை பொலிஸ் திணைக்களம்

தகுதிகாண் உப பொலிஸ் பரிசோதகர் பதவி

1. (அ) முழுப் பெயர் (தெளிவான பெரிய எழுத்துக்களிலும் விண்ணப்ப தாரரின் பிறப்புச் சான்றிதழ்களில் உள்ளபடியும் இருத்தல் வேண்டும்) :-----.

(ஆ) பெயர் (முதல் எழுத்துக்களுடன்) :-----.

(இ) விண்ணப்பிக்கும் பதவி :-----.

2. தேசிய அடையாள அட்டை இலக்கம் :-----.

(பிரதியை இணைக்கவும்)

3. தந்தையின் முழுப்பெயர் :-----.

4. விண்ணப்பதாரரின் பிறந்த இடம் :-----.

பிறந்த இடத்திற்குரிய பொலிஸ் நிலையம் - மாகாணம் :-----.

5. (அ) தற்போதைய முகவரி :-----.

(ஆ) தற் போதைய முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :-----.

(இ) நிரந்தர முகவரி :-----.

(ஈ) நிரந் தர முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :-----.

(உ) நிரந்தர முகவரிக்குரிய தேர்தல் தொகுதி :-----.

(ஊ) நிரந்தர முகவரிக்குரிய கிராம சேவையாளரின் பிரிவு :----.

பிரதேச செயலாளர் பிரிவு :-----.

(எ) தொலைபேசி இலக்கம் (வசிப்பிடம்) :-----, கையடக்க தொலைபேசி இல. :-----.

6. (அ) தேசிய இனம் :-----.

(ஆ) நீங்கள் பிறப்பினால் இலங் கைப் பிரஜையா ? அல்லது பதிவு மூலம் இலங்கைப் பிரஜையா ? (பதிவு மூலம் எனின் பதிவுச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்) :-----

(இ) வம்சாவளி மூலம் இலங்கைப் பிரஜையானால் பின்வருபவர்களின் பிறந்த இடங்களைக் குறிப்பிடவும் :-

(1) விண்ணப்பதாரர் :-----.

(2) விண்ணப்பதாரரின் தந்தை :-----.


(3) விண் ணப்பதாரரின் தந்தை வழி பாட்டன் :-----.

(4) விண் ணப்பதாரரின் தந்தை வழி முப்பாட்டன் :-----.

3 பகுதி I : தொகுதி (IIm) - இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை - 2012.11.16

7. விண்ணப்பதாரரின் பிறந்த திகதி :-----.

(13 ஆம் பக்கம் பார்க்க)



# SWINE FLU
# உலகை பதற வைக்கும் பன்றிக் காய்ச்சல்

2003 இன் நடுப்பகுதியில் தென்கொரியாவில் வெளிக்கிளம்பிய பறவைக்காய்ச்சலின் பீதியில் உலகம் உறைந்திருக்கும் போது, யாரும் எதிர்பாராத விதமாக பன்றிக் காய்ச்சல் தனது உக்கிரத்தை உலகிற்குக் காட்டியது. தொற்றுநோய் என்ற அடிப்படையில் 21 ஆம் நூற்றாண் டின் முதல் தசாப்தத்திலேயே உலகை அச்சுறுத்தும் ஒரு நோயாகப் பன்றிக் காய்ச்சல் என்று அழைக்கப் படும் N1 H1 இன்புளுவன்சா ஸ்வைன் வேகமாகப் பரவி வந்தது.

இதனடிப்படையில் ஐ.நா வின் உலக சுகாதார அமைப்பான WHO இன் ஜுன் 11 ஆம் திகதி ஜெனி வாவில் நடந்த அவசரக் கூட்டமொன்றில் ஸ்வைன் புளு என்று கூறப்படும் பன்றிக் காய்ச்சல் உலகளாவிய முறையில் பரவி வரும் தொற்று நோய் என உலக சுகாதார தாபனத்தின் இயக்குனரான Dr.மார்க்ரெட் தெரிவித்தார்.

**பன்றிக் காய்ச்சல்:**

**பன்றிக் காய்ச்சலும் வைரசும்:**

பன்றிக்காய்ச்சல் ஒரு வகை "இன்புளுவென்சா" (INFLUENZA) நோய் ஆகும். முலையூட்டிகளிலும், பறவைகளிலும் அவற்றின் சுவாசக் குழாய்களில் தொற்றுகின்ற வைரஸ் கிருமிகளால் ஏற்படும் சளிக்காய்சலையே மருத்துவ மொழியில் இன்புளுவென்சா அல்லது ஃப்ளு என்கிறார்கள். ஃப்ளு காய்ச்சலை ஏற்படுத்தும் வைரசுகளில் A,B,C என்று மூன்று வகை உண்டு. இவை மூன்றும் மனிதனில் ஃப்ளு காய்ச்சலை விதைக்க கூடியவை. இவற்றில் A,C வகை வைரஸ்கள் பன்றிகளிலும், A வகை வைரஸ்கள் பறவைகளிலும் கைவரிசை காட்டக் கூடியவை.

மூன்று வகை வைரஸ்களிலும் ஏராளமான உபவகைகள் காணப்படுகின்றன. வைரசுக்கள் நியூக்கிளிக் அமிலங்களாலும், ஹீமாகுளுற்றினின் (H-Haemagglutinin), நியூறாமினிடேஸ் (N-neuraminidase) என்னும் புரதங்களினாலும் ஆனவை. இவ்விரண்டு வகைப் புரதங்களிலுமே முன்னையதில் 19 உபவகைப் புரதங்களும் (H1 - H19), 7 உபவகைப் புரதங்களும் (H1 - H7), இருக்கின்றன. வைரஸ் ஒன்றில் காணக் கூடிய இரண்டு புரதங்களிலும், உபவகைப் புரதங்களினதும் சேர்மானத்தின் அடிப்படையில் ஃப்ளு வைரசுகள் H1 H1, H1 N2, H2 H2, H2 N3, H3 N1, H3 N2, H5 N1 என்றவாறு பெயரிடப்பட்டுள்ளது. இவ்வைரசுகளில் A வகையைச் சேர்ந்த H1 N1, H1 N2, H3 N2 ஆகிய மூன்றும் பன்றிகளில் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. இவற்றிலும் இப்போது உலகைக் கதிகலங்க வைத்திருக்கும் பன்றிக்காய்ச்சல் வைரஸ் H1 N1 ஆகும்.

பன்றிகளில் பன்றிக் காய்ச்சல் நோய் A வகை H1N1 வைரசால் ஏற்படுவது முதன்முதலில் 1930 ஆம் ஆண்டில் கண்டு பிடிக்கப்பட்டது. பன்னெடுங் காலமாகப் பன்றிகளைத் தாக்கிவரும் H1N1 வைரசுக்களிலிருந்து இப்பொழுது மனிதர்களைத் தாக்க ஆரம்பித்திருக்கும் பன்றிக் காய்ச்சல் H1N1 வேறுபட்டது. உலகம் பூராகவும் மில்லியன் கணக்கானோரைப் பீடிக்கும் சாதாரண ஃப்ளுவும் ( Common Flu) A வகையைச் சேர்ந்த H1N1 வைரஸ் கிருமிகளால் தான் ஏற்படுகின் றது.

இதுவரையில் மனிதர்களிலோ அல்லது பன்றிகளிலோ கூடக் காணப்படாத இந்தப் புதிய வைரசை அமெரிக்க நோய்க் கட்டுப்பாட்டு மற்றும் தடுப்பு மையம் விரிவாக ஆராய்ந்துள்ளது. இதில் இப்புதுவகை வைரஸ் 2 வகை. பன்றி ஃப்ளு வைரஸ் ஒரு வகை, பறவை ஃப்ளு வைரஸ் ஒரு வகை மனித ஃப்ளு வைரஸ் என 4 விதமான ஃப்ளு வைரசுகள் இணைந்து உருவான ஒரு விரியமான கலப்பு பிறப்பு என்பது தெரிய வந்துள்ளது.

மனித உயிரிகளை பறித்த A வகை H1N1 வைரசுக்களினால் பிரசவத்தில், பன்றி ஃப்ளு வைரசுகளின் பங்களிப்பே அதிகம். இதனால் அது மனிதர்களில் ஏற்படுத்திய சளிச்சுரத்தில் பலரும் ஸ்வான் ஃபுளு (Swine Flu) அல்லது பன்றிக் காய்ச்சல் என அழைக்கத் தலைப்பட்டனர். எனினும் இந்தப் பெயர் முழுமையான பொருத்தப்பாடு உடையது அல்ல. கோழிகளில் பறவைக் காய்ச்சல் நோயை ஏற்படுத்தும் A வகை H5N1 வைரஸ் மனிதர்களிலும் தொற்றுதலை ஏற்படுத்தியது. கோழிகளைக் கொல்வதைப் போன்று மனிதர்களையும் கொல்கின்றது. எனவே மனிதர்கள் அந்நோயை பறவைக் காய்ச்சல் எனக் விழிப்பதில் தவறேதும் இல்லை.

ஆனால் மனிதர்களில் இப்பொழுது ஃப்ளு வைரசுகளின் கூறுகளைக் கொண்டுள்ளதே தவிர பன்றிகளில் தொற்றியிருப்பது இதவரை அவதானிக்கப்படவில்லை. இதனால் பன்றிக் காய்ச்சல் என ஆய்வு மட்டத்தில் ஆட்சேபனை கிளம்பியது. பன்றிக் காய்ச்சல் என்று கூறியதால் பன்றி வளர்ப்புப் பண்ணைகளும் கடும் நெருக்கடிகளை எதிர் கொண்டன. பன்றிகளை விரோதிகளாகக் கருதி நோய் அபாயம் இல்லாத போதும் இஸ்லாமிய நாடான எகிப்து அங்கிருந்த பன்றிகள் அனைத்தையும் கொல்ல உத்தரவிட்டமை குறிப்பிடத்தக்கது. இவை போன்ற காரணங்களினால் பன்றிகளின் மீது பழியைத் துடைக்கும் முகமாக உலக சுகாதார நிறுவனம் "பன்றிக் காய்ச்சல் என்று அழைப்பதைத் தவிர்த்து "ர்1சே1" இன்ஃபுளுவன்சா அல்லது 2009 H1N1 ஃப்ளு எனக் குறிப்பிடத் தொடங்கியது.

இன்ஃபுளுவன்சா வைரசுகள் அசுரர்களைப் போல தொடர்ச்சியாகத் தமது வடிவத்தை மரபணுச் சேர்க்கையை மாற்றித் கொண்டிருப்பவை. இதனாலேயே இவை புதிதாகத் தொற்றும் போது இவற்றுக்கு எதிராக முன்னர் உடல் தோற்றி வைத்திருக்கும் நோய் எதிர்ப்பு ஆற்றலோ தடுப்பு மருந்துகளின் மூலம் பெற்றுக் கொண்ட நோய் எதுவும் செய்ய இயலாது போகின்றது. பன்றிக் காய்ச்சல் என்பது ஆதோமிக் சொல்லிரிடே குடும்பத்தைச் சேர்ந்த வைரசுகளினால் வரும் உயிர் ஆபத்து மிக்க நோயாகும். இந் நோயைப் பரப்பு வைரசுகள் மிகவும் அரிதான மரபணித் தொகுதியைப் பெற்றிருப்பதால் இதனைக் கண்டு ஆராய்ச்சியாளர் வியப்படைந்துள்ளார்கள்.

இந்நோய் பன்றிகளிடமிருந்து மனிதர்களுக்குப் பரவுகின்றது. எனினும் பன்றிகளிடையே வைரசுகள் பாரிய தாக்கம் எதனையே ஏற்படுத்தவில்லை. இந்நோய் பெரும்பாலும் பன்றிப் பண்ணை களில் வேலை செய்பவர்களைத் தாக்குகின் றது. இவ் வைரஸ் ஒரு மனிதரைத் தாக்கிய பின் மனிதரின் உடலுக்குள் மரபணு சடுதி மாற்றம் பெற்று மனிதர்களிடமிருந்து வேறொரு மனிதனைத் தாக்குகின்றது.

**H1N1 வைரசுகளின் பண்பு:**

தும்மல் இருமலில் இருந்து வெளிப்பட்டு 2 தொடக்கம் 8 மணி நேரம் வரைத் தொற்றும் தன்மையுடன் இருக்கும்

நோய் வருவதற்கு ஒரு நாள் முன்பிலிருந்து பாதித்த 7 நாட்கள் வரை பரவும் தன்மையுடையது.

இவ் வைரஸ் உடலினுள் நுழைந்து 48 மணி நேரத்திற்குள் நன்கு செயற்படும்.

அதன் பின்பு பல்கிப் பெருகி உடலின் பல செல்களைத் தாக்கிவிடும்.

75-100 பாகை செல்சியஸ் வெப்பத்தில் செயலிழக்கும் தன்மையுடையது.

**தொற்றும் முறைகள்:**

நோய் தாக்கியவர்களிடமிருந்து வைரஸ் மற்றவர்களிடமிருந்து வேகமாகப் பரவும்

காற்றின் மூலம் வேகமாகப் பரவும் ஆற்றலுடையது.

நோய் தொற்றியவரின் உமிழ் நீர், சளி யைத் தொட்டுவிட்டு கை கழுவாமல் மற்றவரைத் தொட்டால் அதனால் பரவும்.

எச்சில், மூக்குச் சளி, மலம், குருதி என்பவற்றினுடாகவும் தொற்றும்.

இன்ஃபுளுவன்சா வைரஸ் தொற்றியுள்ள மனிதனுடைய மேல் சுவாசப் பாதையிலுள்ள திரவப் பொருளினுடாக சுகதேகியான நபருக்கு இந்நோய் தொற்றிக் கொள்ளும்.

நோயாளிக்கு நோய் அறிகுறிகள் ஏற்படுவதற்கு ஒரு நாளைக்கு முன்பும், நோய் அறிகுறி ஏற்பட்டு 7 நாட்களுக்குள்ளும் நோய் அற்ற சுகதேகிக்கு வைரஸ் தொற்றும் சந்தர்ப்பங்கள் உண்டு.

நோயாளி ஒருவருக்கு தும்மல், இருமல் ஏற்படும் பொழுது அல்லது பேசும் பொழுதும் வைரஸ் தொற்ற வாய்ப்புள்ளது.

நோயாளர் பிடித்த கதவு, தாழ்பாள், மேசை, சாவிக் கோர்வை, தொலைபேசி, பணம் முதலியவற்றில் இவ்வைரஸ் பரவும்.

சுகதேகியான ஒருவருக்கு நேரடியாக அல்லது நோயாளர் தொட்ட பொருட்களின் மூலமாக இந்நோய் பரவ வாய்ப்புண்டு.


**அதிகம் நோய் தொற்றுபவர்கள்:**

நோய் எதிர்ப்பு சக்தி குறைந்தவர்கள், ஐந்து வயதிற்குட்பட்ட சிறார்கள், கர்ப்பிணிகள், ஆஸ்மா, நீரிழிவு, இதய நுரையிரல் நோய் உள்ளவர்கள், எயிட்ஸ் நோயாளிகள், உடல் பருமனானோர், வயோதிபர், போசாக்கு குறைபாடு உள்ளோர், நீண்ட காலமாக அஸ்பிரின் மருந்த பாவிக்கும் 18 வயதிற்கு கீழ்ப்பட்டோர், நோய்களால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவோர் போன்றோரை இந்நோய் இலகுவில் தொற்றிக் கொள்கின்றது. இந்நோயால் பாதிக்கப்பட்டவர்களில் 70 வீதமானோர் இவ்வகையைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

**நோயின் அறிகுறி:**

வைரஸ் பரவியதும் சளி பிடிக்கும், உடன் காய்ச்சல் ஏற்படும், தொண்டை வலி, சோர்வு, உடல் வலி, பசியின்மை, போன்றவை வரும். முதல் 5 நாட்களுக்கு சாதாரண காய்ச்சல் போன்று காணப்படும். பின்னர் காய்ச்சல் கடுமையாகும். தாங்க முடியாத உடல்வலி, வாந்தி, வயிற்றுப் போக்கு ஏற்பட்டு உயிரிழப்பும் ஏற்படுத்தும். தொடந்து தலைவலி, குளிர்தல், நடுங்குதல், விறைப்பு தசைநார் வலி, இருமல், சளி, மூக்கில் நீர்

வைரஸ் பரவும் முறை




வழிதல், தொண்டை அழற்சி, பசியின்மை, உணவின் மீது வெறுப்பு, மயக்கம், வயிற்றுப் பகுதி மற்றும் இதயப் பகுதிகளில் இடைவிடாத காய்ச்சல் ( 100 பாகை பரனைக்கு மேல்) தொடர்ச்சியாக இருக்கும்.

குழந்தைகளுக்கு இந்நோய் தொற்றினால் தொடர்ந்து காய்ச்சல், சளி மற்றும் மூச்சுத் திணறல், மூச்சு விட சிரமப்படுதல், உடல் தோல் ஒருவித நீலநிறமாக மாறுதல் இதை நகக் கணுவை அவதானிப்பதன் மூலம் கண்டு பிடிக்கலாம்). தண்ணீர் அதிகமாக குடிக்காது இருத்தல், அசாதாரணமாக தூங்குதல், எழுந்திருக்காமல் இருத்தல் அல்லது வழமை போல் இல்லாது சோர்ந்திருத்தல். அமைதியின்றி இருத்தல். தோலில் சொறி (Rash) போன்றவற்றை அவதானிக்க லாம்.

நோய் தீவிரமடையும் போது சுவாச உறுப்புக்களுக்குள் சளி கோர்த்துக் கொள்வதால் மூச்சுத் திணறல் உண்டாகும். உச்ச நிலையில் சிறுநீரகம், இதயம், மூளை முதலிய முக்கிய அவயவங்கள் செயலிழப்பதால் மரணம் உண்டாகும்.

**நோய் அரும்பு காலம்:**

நோய் தொற்றியுள்ள நோயாளியின் சுவாசத்தின் போது வெளியாகும் நீர்த் தன்மை எம்முறையிலாவது நோய் அற்ற சுகதேகி ஒருவரின் சுவாச உறுப்புகளினுள் சென்றால் நோய் அறிகுறிகள் ஏற்படலாம். இக்கால எல்லையில் அந்த நோயாளிக்கு எந்தவிதமான அறிகுறியும் தென்படாவிட்டாலும் அவருடைய உடலினுள் வைரஸ் மிக வேகமாக வளர்ச்சியடையும். எவ்வாறாயினும் நோய் அறிகுறி தோன்றுவதற்கு ஒரு நாளைக்கு முன்னர் வெளியாகும் சுவாசப் பகுதியின் நீர்த் தன்மையான பொருளில் வைரஸ் கிருமிகள் இருப்பதுடன் அதனால் மற்றவர்களுக்கு நோய் தொற்றும் வாய்ப்பும் அதிகமாகக் காணப்படும்.

**நோயை உறுதிப்படுத்தல்:**

இந்நோயின் அறிகுறிகள் பெரும்பாலும் சாதாரண காய்ச்சல், தடிமனுடனான வைரஸ் காய்ச்சலை ஒத்தவையே. அதனால் நோய் அறிகுறிகளால் மாத்திரம் நோய் ஏற்படுத்தியுள்ளதை உறுதிப்படுத்திக் கொள்வது கடினம். நோய் ஏற்பட்டுள்ளது என்பதை இரசாயனப் பரிசோதனை மூலமாகவே உறுதிப்படுத்த முடியும். தொற்று நோய் ஏற்பட்டு இரு நாட்களுக்குள் 'Real time PCR' என்னும் பரிசோதனை மூலம் இந்நோய் ஏற்பட்டுள்ளதா இல்லையா என்பதைத் தீர்மானிக்க முடியும்.

**சிகிச்சை:**

Oselta mivir (Tamiflu), Zana mvir ( Relenza) முதலான பிற பொருள் எதிர்ப்புத் தன்மையான வைரஸ் மருந்துகளைப் பாவிப்பதனால் இந்நோயைக் கட்டுப்படுத்தலாம். என்றாலும் திருப்திகரமான பெறுபேற்றைப் பெற்றுக் கொள்வதற்கு நோய் அறிகுறிகள் ஏற்பட்டு 48 மணித்தியாலத்திற்குள் சிகிச்சை அளிக்கப்படல் வேண்டும்.

நோயாளருக்கு அதிகமாக நீர் அருந்தக் கொடுக்க வேண்டும். காய்ச்சல் இருப்பின் பரசிற்றமோல் போன்று மருந்து வகைகளைக் கொடுக்கலாம். அத்துடன் ஒய்வு கொடுத்தல் மிகவும் சிறப்பானதாகும். வைத்தியரின் அனுமதியுடன் சேலைன் பாய்ச்சலாம்.

Anti viral medicines அல்லது Oral pills கூட சில நேரம் நோய்க் கிருமிகள் மேலும் அதிகரிப்பதாகவும் கூறப்படுகின்றது. நோய் தாக்கிய இரண்டு நாட்களுக்குள் மருத்துவரின் ஆலோசனை இல்லாமல் எதுவித வைத்தியமும் செய்யக் கூடாது.

**சித்த மருத்தவம்:**

பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நமது யோக சித்தர்கள் பல்வேறு தொற்று நோய்களை இலகுவில் கிடைக்கும் மூலிகளைக் கொண்டு மிகத் துல்லியமாக குண்ப்படுத்தியுள்ளார்கள். அந்த வகையில் இப்பன்றிக் காய்ச்சலுக்கு வீட்டுத் தோட்டத்தில் சாதாரணமாகக் காணப்படும் துளசி காய்ச்சலைத் தடுப்பது மட்டுமல்லாது ஏற்பட்ட பின்பும் இலகுவாக குணப்படுத்தும் சக்தி வாய்ந்த மருந்தாகும்.

கடுமையான பன்றிக் காய்ச்சல் நிலையில் ஒரு மேசைக்கரண்டி தேனுடன் ஒரு மேசைக் கரண்டி கறுவாய்த் தூள் கலந்து 5 நாட்களுக்கு குடித்துவர தடிமல், இருமல், சளி போன்ற பிரச்சினைகள் அகலும்.

**முகமூடிகள் (Masks):**

தடுப்பு முகமூடிகளில் பலவகையுண்டு. இதில் சுநளிசையவழசள என்று அழைக்கப்படும் மிக நுண்ணிய வைரசையும் தடுக்கக் கூடியவையாகும். (N 95 அல்லது Higher Filtering Face Pieces) இவை முகத்தோடு இறுகப் பற்றிக் கொள்பவை. சரியான முறையில் அணிந்தால் வைரஸ் தொற்றுவதைத் தடுக்கலாம்.

**தடுப்பு முறை:**

நோய் தாக்கியவரிடம் இருந்து விலகி இருப்பது அல்லது தவிர்க்க முடியாத காரணத்திற்காக அருகில் செல்லும் போது முகமூடி (மாஸ்க்) அணிந்து கொள்வ தும் மற்றும் வாழுமிடத்தை மிகத் தூய்மையாக வைத்துக் கொள்வதும் நோய் பரவுவதைத் ஓரளவுக்கு தவிர்க்க முடியும் என உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

இருமல், தும்மல், தொடுதல் போன்றவற்றால் மட்டுமே நோய்த் தொற்று ஏற்படாது.

இந்நிலையில் சளிக்காய்ச் சல் பரவாது தடுப்பதற்கு உங்கள் கைகளைக் கழுவுதல் சிறந்த வழி என கனடா நலத்துறை விபர மடலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கைகளை அடிக்கடி சவற்காரம் இட்டு இளஞ் சுடுநீரில் கொண்டு 15 முதல் 20 விநாடிகள் வரைக் கழுவ வேண்டும். அல்லது கைக் குட்டை கொண்டு இருமவும் தும்முதல் பின்னர் கைளைக் கழுவவும் அல்லது கிருமி போக்கி கொண்டு சுத்தப்படுத்தவும்.

கைக் குட்டையை விட ரிசுத்தாள் பயன்படுத்துவது சிறந்தது. ரிசுத்தாள் இல்லாத சந்தர்ப்பத்தில் தனது உள்ளங்கையை பயன்படுத்துவதைத் தவிர்த்து கையை மடித்து முழங்கையைப் பயன்படுத்துவது சிறப்பானதாகும்.

சளிக்காய்ச்சல் நுண்ணங்கி தொற்றக் கூடிய பாத்திரங்கள், குவளைகள், இசைக்கருவிகள், தண்ணீர் தொட்டிகள் முதலானவற்றை பகிரக் கூடாது.

நோயுற்ற ஒருவர் தும்மும் போது காற்றின் மூலம் நோய்க்கிருமிகள் பரவுவதால் மேசை, கணணி விசைப்பலகை, கணணி மவுஸ், தொலைபேசிக் கருவிகள், கதவுக் கைபிடிகள், லிப்ட் பொத்தான்கள், நாணயங்கள், வங்கி தன்னியக்க இயத்திரம் போன்றவற்றை கையாண்ட உடன் கை கழுவுவதால் நோய் வருவதை ஓரளவிற்காவது தடுக்கலாம்.

நோயின் தாக்கத்திற்கு உள்ளாகியிருக்கும் ஒருவர் வீட்டில் அவரைத் தனிமைப்படுத்தி வைப்பது அவசியமாகும். நோயாளருக்கு நல்ல ஒய்வு கொடுப்பதும், உடற் பயிற்சி செய்வதும் பானங்கள் நிறையப் பருகுவ தும் சத்துணவு உண்ணுவதும் ஓரளவிற்கு நன்மை தரும்.

பன்றிக் காய்ச்சல் ஆழமான புரிதலும், அரசும் குடிமக்களும் சேர்ந்து ஒருங்கிணைந்த செயற்பாடுகளுமே இந்தக் தாக்கத்தை மட்டுப்படுத்தலாம்.

கை கழுவும் தன்மை




முடியுமான வரையில் வீட்டில் தனியறையில் நோயாளியை தனிமைப்படுத்தி கண்காணிப்பதுடன் அந்த அறைக் கதவை எச்சந்தர்ப்பத்திலும் அடைத்து வைத்திருத்தல் வேண்டும். குடும்பத்தில் ஒருவர் மாத்திரம் அந்த அறைக்குள் செல்வதற்கு ஏற்பாடு செய்வது விரும்பத்தக்கது.

நோயாளியை எவரும் பார்க்கவிடாமல் தவிர்ப்பது சிறந்தது. தவிர்க்க முடியாத சந்தர்ப்பத்தில் ஒரு மீற்றரை விட தூரத்தில் நின்று பார்க்கலாம்.

சுவாசிப்பதற்கு சிரமப்படும் பொது கடுமையான காய்ச்சல் ஏற்பட்டாலும் உடன் வைத்தியரை நாட வேண்டும். சிகிச்சை பெற்றுக் கொள்வதற்காக வெளியில் செல்லும் போது வாய்ப் பாதுகாப்பு அணி அல்லது கைக்குட்டை பயன்படுத்துவது அவசியமாகின்றது.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் சனநெருக்கடியான இடங்களிற்கு செல்வதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். இரு கைகளையும் அடிக்கடி சவர்காரம் இட்டு கழுவாத சந்தர்ப்பத்தில் வாய், மூக்கு, கண் போன்ற பகுதிகளை கைகளை கழுவாத நிலையில் பிடிக்க வேண்டாம்.

இந்நோய் குறித்து விசேடமாக முன்பள்ளி மற்றும் பாடசாலை செல்லும் பிள்ளைகளும், கர்ப்பிணித் தாய்மாரும் மிகவும் விழிப்பாக இருத்தல் வேண்டும்.


நோயாளிகள் ஏனையவர்களுடன் கை குலுக்குவதையோ பொது இடங்களில் எச்சில் துப்புவதையோ தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

**தற்பாதுகாப்பு நடவடிக்கை:**

நோயாளிகள் நாட்டினுள் நுழைவதைத் தடுக்க தெர்மல் ஸ்கேனர் என்னும் கருவி மூலம் பரிசோதனைக்கு உட்படுத்தல்

பாடசாலைச் சிறுவர்களிடம் நோய் தொற்றுவதைத் தவிர்க்க பல பாதுகாப்பு நடவடிக்கைப்பட்டமை.

வைரசின் தொழிற்பாடு




மக்களை விழிப்பூட்டும் வகையில் தொடர்பு சாதனங்கள் மூலம் நோயின் பாதிப்பை மக்களுக்கு எடுத்துரைத்தல்.

**பன்றிக் காய்ச்சலின் இட ரீதியான பரவல்:**

**ஆரம்பம்:**

1812 ஆம் ஆண்டில் ஒருவகை இன்ஃபுளுவன்சா கிருமி உலகத்தில் பரவியது.

1918 ஆம் ஆண்டில் H1N1 சளிச் சுரத்தின் இன்னுமொரு வடிவம் ( Spanish Flu) ஸ்பெனில் பரவியதால் 5 கோடிக்கு மேலான உயிர்கள் பலியாகினர்.

1968 ஆம் ஆண்டு ர்3G2 என்ற வடிவம் ( Hong Kong Flu) கொங்கொங்கில் 10 இலட்சத்திற்கும் மேற்பட்டோரின் உயிர்களைக் காவு கொண்டுள்ளது.

1976 அல் அமெரிக்க படை வீரர்களை இந்நோய் தாக்கியது. பின்னர் இரண்டு ஆண்டுகளிற்கு முன்னரும் பிலிப்பைன்ஸ்சில் இந்நோய் மீண்டும் பரவியது.

2008 மார்ச் மாதத்தில் மெச்சிக்கோயின் தலைநகர் La Gloria கிராமத்தில் இக்காய்ச்சல் ( H1N1 ) முதன்முதலில் தோன்றியது. அங்கு அமெரிக்க நிறுவனம் ஒன்று நடத்திவரும் Granjas Carroll என்ற பன்றிப் பண்ணையிலிருந்து தான் தொற்றுக் கிருமிகள் முதன் முதலில் வெளிப்பட்டன.

2009 எப்ரலில் இன்புளுவன்சாவின் A வகை வைரஸ்கள் மெக்சிக்கோவில் பரவத் தொடங்கியது. கடந்த நூறு ஆண்டுகளில் பன்றிக் காய்ச்சல் இத்தகைய நோயாக பரிமாணம் கொள்வது இது நான்காவது முறையாகும். ஆயினும் இத்தடவை பன்றிக் காய்ச்சலின் வீரியம், இதுவரை மிதமானதாக இருந்ததாக நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

**சர்வதேசம் :**

மெக்சிக்கோவில் பன்றிக் காய்ச்சல் பரவியதைத் தொடர்ந்து அமெரிக்கா, பிரேசில், இஸ்ரேல், அவுஸ்ரேலியா, நியூசிலாந்து, கனடா, இங்கிலாந்து, உக்ரென், சவுதி அரேபியா, ஸ்கொட்லாந்து உள்ளிட்ட 208 நாடுகளை இந் நோய் தாக்கியது.

உலகம் முழுவதும் ஏப்ரல் 2009- ஜனவரி 2010 வரை 57 மில்லியன் மக்களுக்கு இந் நோய் தாக்கியது. இதில் 17,000 பேர் பலியாகினர். இதில் 1,800 பேர் குழந்தைக-ளாவர். அமெரிக்காவில் 263 பேரும், தென்கிழக்காசியாவ-ில் 88 பேரும், தாய்லாந்தில் 65 பேரும், அவுஸ்ரேலியாவில் 31 பேரும், இங்கிலாந்தில் 26 பேரும் இந் நோயால் இறந்தனர். உலகில் u1N1 பரவியதைத் பல படங்களின் உதவியுடன் நோக்க முடியும்.

**இலங்கை :**

இலங்கையில் இந்நோயினால் பீடிக்கப்பட்ட முதலாவது நோயாளியாக 16 யூன் 2009 இல் இனங்காணப்பட்டது. 8 வயது சிறுவனான இவர் அவுஸ்ரேலியாவிலிருந்த சிங்கப்பூரின் ஊடாக தனது தந்தையுடன் இலங்கைக்கு வந்தார்.

மேலும் இந்நோயினால் பீடிக்கப்பட்டு இறந்த முதலாவது நோயாளியாக கண்டியைச் சேர்ந்த 16 வயதுடைய பாடசாலை மாணவன் ஒருவன் இனங் காணப்பட்டதுடன் இம் மாணவன் 4ஆந் நவம்பர் 2009 உயிரிழந்தான்.

மொத்தமாக 78 பேர் இந்நோயினால் பீடிக்கப்பட்டமை உறுதி செய்யப்பட்டமை. இவர்களுள் 68 பேர் வெளிநாடுகளிலிருந்து வந்தவர்களுடன் நெருங்கி பழகியவர்கள் என்றும் 10 பேர் பாதிக்கப்பட்டவர்களுடன் பழகியவர்கள் என்றும் பிரித்தானியா மற்றும் சவுதி அரேபிய நாடுகளிலிருந்து தலா 7 பேரும் இந்தியாவிலிருந்து 5 பேரும் அமெரிக்காவில் 3 பேரும் நோய்த் தொற்றுக்குள்ளாகியிருந்தனர்.

நாட்டினைப் பரவலாக நோக்குமிடத்து கண்டி பேராதனை, நுவரெலியா, காத்தான்குடி, குருநாகல், பதுளை, இப்பாகமுவ, மாத்தளை, கம்பளை, போன்ற வைத்தியசாலைகளில் நோய் அறிகுறிகளுடன் அதிகம் பேர் அனுமதிக்கப் பட்டிருந்தனர். கண்டி, குருநாகல், அம்பாறை, மாத்தளை, கம்பளை, போன்ற பிரதேசங்களில் மரணங்கள் பதிவாகியிருந்தன. (29.12.2009 வீரகேசரி)

**தடுப்பு:**

நாடு முழுவதிலும் காய்ச்சலை ஆய்வு செய்ய 33 வைத்தியசாலைகளில் விசேட பிரிவுகள் உருவாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கவை. H1N1 வைரசைக் கட்டுப் படுத்த வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

உலக நாடுகள் பலவற்றை ஆட்டிப்படைத்த பன்றிக் காய்ச்சல் இன்று பெரும்பாம் கட்டுப் படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

து.ரஜனி

# ஒரு மாதத்துக்குள் நிரந்தர நியமனம் இல்லையென்றால் தொடர் மறியல் போராட்டம்

## எச்சரிக்கிறது வன்னித் தொண்டர் ஆசிரியர் ஒன்றியம்

"நாட்டின் ஏனைய பகுதிகளிலுள்ள தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டிருக்கிறது. வன்னிப் பகுதியில் எவ்வித வேதனமுமின்றி சுமார் அறுநூறு தொண்டர் ஆசிரியர்கள் பணியாற்றி வருகின்றனர். ஒரு மாதத்துக்குள் எமக்கு நிரந்தர நியமனம் வழங்கத் தவறினால் தொடர் மறியல் போராட்டத்திலும் உண்ணாவிரதப் போராட்டத்திலும் ஈடுபடுவோம்" வன்னியிலுள்ள தொண்டர் ஆசிரியர் ஒன்றியம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

மேற்படி அழைப்பின் தலைவர் மற்றும் செயலாளர் கைச்சாத்திட்டு நேற்று வெளியிட்ட அறிக்கையின் பூரண வாசகம் வருமாறு.

வன்னிப் பகுதிப் பாடசாலைகளில் நீண்டகாலமாக எவ்வித வேதனமும் இன்றி பொறுப்புள்ள அதிகாரிகளினதும், அரசினதும் உறுதிமொழிகளை நம்பி தொண்டர் ஆசிரியர்களாகச் சேவையாற்றி வரும் நாம் தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டு ஏமாற்றப்பட்டு வருகின்றோம். இந்நிலையில் வன்னித் தொண்டர் ஆசிரியர்களாகிய நாம் வடக்கு மாகாண கல்வி அமைச்சு அலுவலகத்தில் தொடர் மறியல் போராட்டத்தையும், உண்ணாவிரதப் போராட்டத்தையும் மேற்கொள்வதற்கு தீர்மானித்துள்ளோம்.

வன்னிப்பகுதிப் பாடசாலைகளில் கடந்த 10 வருடங்களுக்கும் மேலாக எவ்வித கொடுப்பனவும் இன்றித் தொடர் சேவையாற்றி வரும் நாம் மட்டும்தான் நிரந்தர ஆசிரியர் நியமனத்தில் காரணம் எதுவும் இன்றி புறக்கணித்து ஒதுக்கப்பட்டுள்ளோம்.

நாட்டின் ஏனைய பகுதித் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கியது போல கடந்த கால யுத்தங்கள் மூலமும் எல்லாவகையிலும் பாதிக்கப்பட்டுள்ள எமக்கும் நிரந்தர நியமனம் வழங்கக்கோரி பொறுப்புள்ளவர்களிடமும், அரசிடமும் பல முறை எமது நிலைமையை விளக்கிக் கேட்டிருந்தோம். அச்சந்தர்ப்பங்களிலெல்லாம் பொறுப்பு வாய்ந்தவர்களால் "வன்னித் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் நடைபெறுகின்றன. மிக விரைவில் நியமனம் வழங்கப்படும்." என்று கூறியதுடன், வடக்கு மாகாண கல்வி அமைச்சு அலுவலகத்தால் வன்னித் தொண்டர் ஆசிரியர்களது விபரங்களை வன்னியில் உள்ள வலயக்கல்வி அலுவலகங்களுக்கு நேரில் வந்து பரிசீலித்து நிரந்தர நியமனத்திற்கான பெயர்ப்பட்டியல்களும் தயாரிக்கப்பட்டிருந்தன. ஆனாலும் நீண்ட காலமாகியும் நியமனம் இன்னும் வழங்கப்படவில்லை.

நிரந்தர நியமனம் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்புக்களுடன் பொறுப்புள்ளவர்களது உறுதி மொழிகளையும் நம்பி நீண்ட காலமாக சேவையாற்றி வரும் 600இற்கும் மேற்பட்ட தொண்டர் ஆசிரியர்கள் பல்வேறுபட்ட பிரச்சினைகளை எதிர்நோக்கி பெரிதும் கஷ்டப்படுகிறார்கள். அண்மையில் கூட நீண்ட காலமாக சேவையாற்றிய குடும்பஸ்தரான தொண்டர் ஆசிரியர் ஒருவர் தற்கொலைக்கு முயற்சித்து அயலவர்களால் காப்பாற்றப்பட்டுள்ளார்.

எனவே வன்னித் தொண்டர் ஆசிரியர்களுக்க விரைவில் நிரந்தர நியமனம் வழங்கப்படும் என்று கூறிவரும் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் பொறுப்பு வாய்ந்தவர்கள் வன்னித் தொண்டர் ஆசிரியர்களாகிய எமக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கு ரிய நல்ல பதிலை ஒரு மாதத்திற்குள் பொறுப்புடன் தராவிடின் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் முன் எமது நிரந்தர நியமனத்தை வலியுறுத்தி தொடர் மறியல் போராட்டத்தையும், உண்ணாவிரதப் போராட்டத்தையும் முன்னெடுப்பதற்கு வன்னித் தொண்டர் ஆசிரியர்களாகிய நாம் முடிவெடுத்துத் தீர்மானித்துள்ளோம் என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# செக் குடியரசின் நாடாளுமன்ற தூதுக்குழு யாழ்.விஜயம்

செக் குடியரசின் நாடாளுமன்ற தூதுக்குழுவினர் இன்று புதன் கிழமை யாழ்.மாவட்டத்திற்கு விஜயம் செய்துள்ளனர். டேவிட் லொட்ரஸ்கா தலைமையிலான இக்குழுவினர் யாழ்.ஆயர் தோமஸ் சௌந்தர நாயகம் ஆண்டகையைச் சந்தித்து யாழ்.மாவட்டத்தின் நிலமைகள் குறித்துக் கேட்டறிந்துள்ளனர்.

அத்துடன் ஆயருடனான சந்திப்பை தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் உள்ள மரியன்னை பேராலயத்திற்குச் சென்று பார்வையிட்டுள்ளனர். பாதுகாப்பு அமைச்சின் ஏற்பாட்டில் இங்கு வருகை தந்த இக்குழுவினர், வட மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறியையும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

டேவிட் லொட்ரஸ்கா தலைமையிலான செக் குடியரசின் நாடாளுமன்ற தூதுக்குழுவில் திருமதி சுஸானா பூட்னறோவா உள்ளடங்கிய குழுவினருடன் செக்குடியரசின் புதுடில்லி தூதரகத்தைச் சேர்ந்த இருவருமாக மொத்தம் 8 பேர் இக்குழுவில் அங்கம் வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# மன்னார் நீதிமன்றம் மீதான தாக்குதல்: 5 பேர் தொடர்ந்தும் விளக்கமறியலில்

மன்னார் நீதிமன்றம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பில் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள ஐந்து சந்தேக நபர்கள் கடந்த திங்கட்கிழமை மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போது குறித்த சந்தேக நபர்களை எதிர்வரும் 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் மாவட்ட மேலதிக நீதிவான் ஆர்.எஸ்.ஏ.திஸாநாயக்க உத்தரவிட்டுள்ளார்.

மன்னார் மேல் நீதிமன்றம் மற்றும் மன்னார் நீதிவான் நீதிமன்றம் ஆகிய இரண்டு நீதிமன்றங்களிலும் இடம்பெற்ற வழக்கு விசாரணைகளின் போதே குறித்த நீதிமன்றங்களின் நீதிபதிகள் இவ்வாறு உத்தரவிட்டுள்ளனர்.

கடந்த ஜுலை மாதம் 18 ஆம் திகதி மன்னார் நீதிமன்றத்திற்கு முன் இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் ஒன்றைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டக்காரர்கள் சிலரினால் மன்னார் நீதிமன்றம் மீது கற்கள் வீசித் தாக்குதல் நடத்தப்பட்டதோடு பொதுச் சொத்துகளுக்கும் சேதம் ஏற்படுத்தப்பட்டது.

இதன்போது குறித்த தாக்குதல் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மற்றும் புலனாய்வுத்துறை அதிகாரிகளினால் கட்டம் கட்டமாக 43 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

பின் மன்னார் நீதிமன்றம் மற்றும் மன்னார் மேல் நீதிமன்றம் ஆகியவற்றில் இடம்பெற்ற வழக்கு விசரணைகளினைத் தொடர்ந்து 38 சந்தேக நபர்கள் கட்டம் கட்டமாகப் பிணையில் விடுதலை செய்யப்பட்டனர். ஏனைய 5 சந்தேக நபர்களும் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

மன்னார் நீதிமன்றம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பில் குற்றப்புலனாய்வுத்துறை அதிகாரிகளினால் வழங்கப்பட்ட பெயர்ப்பட்டியலில் சந்தேக நபர்களில் ஒருவர் இதுவரை கைது செய்யப்படாத நிலையில் தலைமறைவாகியுள்ளார்.

இதுவரை பொலிஸார் அவரை கைது செய்யாத நிலையிலேயே குறித்த 5 சந்தேக நபர்களுக்குமான பிணை நிராகரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தலைமறைவாகியிருக்கும் குறித்த சந்தேக நபரை உடன் கைது செய்து மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு மன்னார் பொலிஸாருக்கு பகிரங்கப் பிடியாணை ஒன்றை நீதிவான் ஆர்.எஸ்.ஏ.திஸாநாயக்க பிறப்பித்துள்ளார்.

# தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் எச்சரிக்கை

மேல் மாகாணத்தில் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்கள் எதிர்வரும் 28ஆம் திகதி அடையாள வேலைநிறுத்தத்தில் ஈடுபடவுள்ளதாக தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

வழித்தட கட்டண அதிகரிப்புக்கு எதிராகவே அடையாள வேலைநிறுத்தத்தில் ஈடுபடவுள்ளதாக அந்த சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரத்ன தெரிவித்தார்.

# யாழ்.குடாநாட்டில் டெங்கு நோய் அதிகரிப்பு

## பொதுமக்களுக்கு எச்சரிக்கை

யாழ்.குடாநாட்டில் இவ்வாண்டில் 448 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலை தொற்று நோய் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி சசி தெரிவித்துள்ளார்.

இம்மாதத்தில் மாத்திரம் 57 பேரும் நேற்றுதினம் நான்கு பேரும் டெங்கினால் பாதிப்படைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை யாழ்ப்பாணத்தில் நியூமோனியாக் காய்ச்சலினால் பலர் பாதிப்படைந்துள்ளதாகவும், இந்தக் காய்ச்சல் அதிகளவில் பரவி வருவதாகவும் அவற்றைக் கட்டுப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# அரசாங்கம் மற்றும் தமிழ், முஸ்லிம்...(தொடர்)

அறியப்படுத்தல் வேண்டும்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உட்பட்ட ஏனைய முஸ்லிம் கட்சிகளுடன் கூட்டிணைந்து வடக்கு, கிழக்கில் ஏற்பட்டுள்ள காணிப் பிரச்சினைகள் மற்றும் அதிகாரப் பரவலாக்கல் போன்றவை தொடர்பில் பேச்சு நடத்த வேண்டும்.

மலையக தமிழ் அமைப்புக்களுடன் இணைந்து மொழி மற்றும் புறக்கணிப்பு மற்றும் வடக்கு கிழக்குக்கு வெளியில் வாழும் தமிழர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் தீர்மானம் ஒன்றுக்கு வரவேண்டும்.

அத்துடன் கூட்டமைப்பின் உள்ளூர் தலைவர்கள், சமூக ரீதியான செயற்பாடுகளில் ஈடுபட்டு வடக்கு கிழக்கு மக்களின் வாழ்வாதார பிரச்சினைகளை தீர்க்க முன்னுரிமை வழங்க வேண்டும்.

**2) தமிழ் சிவில் சமூக அமைப்புக்களுக்கான பரிந்துரைகள்**

போர்காரணமாக முஸ்லிம்கள் சிங்களவர்களும் பாதிக்கப்பட்டுள்ளமையை ஏற்றுக்கொண்டு அவர்கள் வடக்குகிழக்கு மீள்திரும்புவதை வரவேற்க வேண்டும். அத்துடன் இனங்களுக்கு இடையிலான சமாதான உறவுகளை கட்டியெழுப்ப முன்வரவேண்டும்.

**3) புலம்பெயர்ந்த தமிழர் அமைப்புக்களுக்கும் தமிழ் நாட்டுக்குமான பரிந்துரைகள்**

ஐக்கிய இலங்கைக்குள் இனப் பிரச்சினையை தீர்க்கக்கூடிய ஆலோசனையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வழங்க அந்தக் கூட்டமைப்பின் திறனை விருத்தி செய்ய வேண்டும். அத்துடன் போரின் போது புலிகளால் ஏற்பட்ட உயிரிழப்புகளை ஏற்றுக் கொண்டு சர்வதேச விசாரணை ஒன்றின் போது அதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

**4) இலங்கை அரசாங்கத்துக்கான பரிந்துரைகள்**

ஐக்கிய இலங்கைக்குள் தமிழர்களுக்கான தீர்வை உயரிய அதிகாரப் பரவலாக்கலுடன் வழங்க அர்ப்பணிப்பு அவசியம்.

தீர்வுக்கான நோக்கத்துடன் நாடாளுமன்ற தெரிவுக்குழுக்கு உள்வாங்கும் வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் உடனடியாக பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும்.

வடக்கு மாகாணசபை தேர்தலை நீதியாகவும் நேர்மையாகவும் உடனடியாக நடத்தி, அதன் பெறுபேறுகளின் அடிப்படையில் உரிய அதிகாரப் பரவலாக்கத்துக்கு வழிசெய்ய வேண்டும்.

அனைத்து மாகாணசபைகளையும் அதன் அதிகாரங்களுக்கு உட்பட்ட வகையில் செயற்பட வழிசெய்ய வேண்டும். அந்த சபைகளுக்கு பொதுமக்கள் மத்தியில் இருந்து ஆளுநர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

வடக்கு கிழக்கு மாகாண சபைகளுக்கு நிதியீட்டல் வழிகளை ஆராய வேண்டும். திவிநெகும சட்டமூலத்தை திரும்பப்பெற்று அதற்கானக உள்ளூர் மட்டத்தில் அதிகாரங்களை பகிரும் திட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.

வடக்கு, கிழக்கில் இராணுவத்தினர் பொதுமக்கள் மத்தியில் காட்டி வரும் அதிக பிரசன்னத்தை குறைக்க வேண்டும். வடக்கு கிழக்கில் தமிழர்கள் மற்றும் தமிழ் பேசும் மக்களின் இருப்பை ஏற்றுக்கொண்டு அங்கு இனப்பரம்பலை மாற்றும் நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும்.

இராணுவம் கையகப்படுத்தியுள்ள நிலங்களை மீண்டும் பொதுமக்களுக்கு வழங்க வேண்டும். தமிழர்களின் கலாசாரத்துக்கு பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும. அத்துடன் இந்து, இஸ்லாம் மற்றும் கிறிஸ்தவ மதங்களின் உரிமைகள் மதிக்கப்பட வேண்டும்.

சிறைப்படுத்தப்பட்டுள்ள அனைத்து தமிழ் கைதிகளின் பெயர் விபரங்களை வெளியிட வேண்டும். போரில் பலியான தமிழீழ விடுதலைப் புலிகள் மற்றும் அவர்களுடன் தொடர்புடையவர்கள் நினைவாக அவர்களின் குடும்பங்களால் மேற்கொள்ளப்படும் அனுதாப நினைவு நிகழ்வுகளுக்கு அனுமதி வழங்கப்பட வேண்டும்.

இறுதிப்போரில் காணாமல் போனவர்கள் தொடர்பில் உரிய விசாரணைகள் நடத்தப்பட வேண்டும். தமிழ்ப் பிரதேசங்களில் தமிழ் மொழியில் தேசியகீதம் பாட அனுமதிக்க வேண்டும்.

வடக்கு கிழக்கில் அரசியல் நடவடிக்கைகளுக்கு சுதந்திரம் வேண்டும். அத்துடன் இராணுவ அடக்குமுறைகள் காணாமல் போதல் சம்பவங்கள் நிறுத்தப்பட வேண்டும்.

தமிழர்களின் துயரங்களுக்கு தீர்வுகாண உடனடியான செயற்பாடுகள் அவசியம். மொழி உரிமைக்கு உறுதிப்பாடு அவசியம். தமிழ்ப் பெண்கள் இராணுவத்தினரால் துஷ்பிரயோகம் செய்யப்பட்டமை தொடர்பில் உரிய விசாரணைகள் அவசியம்.

தமிழ்பேசும் மக்கள் தொழில் கல்வி உட்பட்ட விடயங்களில் புறக்கணிக்கப்படுவது நிறுத்தப்பட வேண்டும். இராணுவத்திலும் படைகளிலும் தமிழர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதும் நீதித்துறைக்கும் உரிய சுதந்திரம் வழங்கப்பட வேண்டும். 2012 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் அமர்வில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களுக்கு உடன்பட வேண்டும்.

**5) ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் ஏனைய முஸ்லிம் கட்சிகளுக்கான பரிந்துரைகள்**

13ஆவது அரசியல் அமைப்பின் நடைமுறைக்கு ஒத்துழைப்பு வழங்கி, அதிகாரப் பரவலாக்களை அர்த்தப்படுத்த வேண்டும்.

# பண்பலை ஒலிபரப்பின் அலைவரிசை மீளமைப்பு

## இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் அறிக்கை

இலங்கையிலுள்ள சகல வானொலி நிலையங்களினதும் பண்பலை ஊடான ஒலிபரப்புகளின் அலைவரிசைகள் இம்மாதம் முதலாம் திகதியிலிருந்து மாற்றம் செய்யப்பட்டிருப்பதை வானொலி நேயர்கள் அனைவரும் அறிவார்கள். இது பற்றி ஏற்கனவே 'வானலை நாதம்' பகுதியிலும் தகவல் வெளியாகியிருக்கிறது.

இந்த அலைவரிசை மீளாய்வுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தியிருக்கும் இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் அனுஷா பெல்பிட்ட இது தொடர்பான அறிக்கையொன்றை வெளியிட்டிருக்கிறார்.

"இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக் குழுவானது, இலங்கையின் வானொலிச் சேவைகளுக்கான புதிய அலைவரிசை ஒழுங்கு முறைகளை வெற்றிகரமாக முடித்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றது. இத்திட்டமானது, இலங்கையின் வானொலி நிகழ்ச்சிகளைத் தெளிவாகக் கேட்பதிலுள்ள தொழில்நுட்பப் பிரச்சனைகளைக் குறைத்து தெளிவாகக் கேட்கச் செய்யும் நோக்கத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களுடைய அறிவுறுத்தல்களின்படியும், ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க அவர்களின் வழிகாட்டலின் கீழும் ஒரு தேசிய தொலைத் தொடர்புகள் கொள்கையாக இது மேற்கொள்ளப்பட்டது.

இலங்கையில் எப்.எம். அலைவரிசைகளை முகாமை செய்யும் முழு அதிகாரம் இலங்கை தொலைத்தொடர்புகள் ஆணைக் குழுவிற்கு அளிக்கப்பட்டுள்ளது. தற்பொழுது இலங்கையில் 45 எப்.எம். வானொலி சேவை நிலையங்கள் 87.5 - 108 மெகாஹேட்ஸ் அலைவரிசையில் இயங்கிவருகின்றன.

எப்.எம். வானொலி சேவை நிலையங்கள் தற்பொழுது பயன்படுத்தும் அலைவரிசைகளைக் கருத்திற்கொண்டு இலங்கைத் தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவானது, இந்த அலைவரிசைகளை வானொலிச் சேவை நிலையங்களுக்கிடையே பகிர்ந்து வழங்குவதற்கான திட்டத்தை வகுத்துள்ளது. தற்பொழுது இவ் வானொலிச் சேவை நிலையங்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளை குறைக்கும் நோக்கத்துடன், வானொலிச் சேவைகளின் அலைவரிசைகளை புதுப்பிக்கும் தேசிய கொள்கையின் அடிப்படையிலேயே இது மேற்கொள்ளப்பட்டது.

தெளிவாக மற்றும் புரிந்து கொள்ளத்தக்கதான தொடர்பாடல் வலையமைப்பை நடைமுறைக்கு கொண்டுவரும் இலங்கைத் தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் பாரிய முயற்சிக்கு, சகல எப்.எம். வானொலிச் சேவை நிலையங்களும் தங்களது முழு ஒத்துழைப்பையும் வழங்கின என்பதை நான் மகிழ்ச்சியுடன் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். இப்புதிய ஒழுங்கு முறைத் திட்டமானது 2012 நவம்பர் முதலாம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

## வானலை நாதம்

சகல எப்.எம். வானொலி சேவை நிலையங்களின் நிகழ்ச்சிகளையும் நாடு முழுவதும் தெளிவாகக் கேட்கத்தக்க வகையிலேயே இப்புதிய அலைவரிசை திட்டத்தின்கீழ் அலைவரிசைகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. ஆரம்பத்தில் இரண்டு வானொலிச் சேவை அலைவரிசைகளுக்கிடையே 100 கிலோ ஹேட்ஸ் - 200 கிலோ ஹேட்ஸ் இடைவெளியே காணப்பட்டது. ஆனால் தற்பொழுது வானொலிச் சேவை அலைவரிசைகளுக்கிடையே 300 கிலோ ஹேட்ஸ் இடைவெளி காணப்படுமாறு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் வானொலி நேயர்கள், ஒரு அலைவரிசையின்கீழ், நாட்டின் அநேக பாகங்களில் வானொலி நிகழ்ச்சிகளைத் தெளிவாகக் கேட்க முடியும்" இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது ■

---

## 14 ஆவது அகவையில் சக்தி FM சக்திமிகு வானொலி

இலங்கையில் இயங்கிவரும் தனியார் வானொலிகளுள் ஒன்றான சக்தி எப்.எம். நேற்று முன்தினம் (20.11.2012) பதினான்கு வருடங்களை நிறைவுசெய்து கொண்டுள்ளது.

எம்.ரி.வி. (M.T.V), எம்.பி.சி. (M.B.C) குழுமத்தில் ஒரு அங்கமான சக்தி எப்.எம். இலங்கை ஒலிபரப்புத்துறை வரலாற்றில் தமிழ்மொழியிலான மூன்றாவது ஒலிபரப்புச் சேவையாக 1998 ஆம் ஆண்டு நவம்பர் 20ஆம் திகதியன்று உத்தியோகபூர்வமாக உதயமானது. அதற்கு முன்பதாக பரீட்சார்த்த ரீதியாக 1998 நவம்பர் முதலாம் திகதியன்று சக்தி எப்.எம். ஒலிபரப்பு ஆரம்பமாகியதையும் இங்கு சிறப்பாகக் குறிப்பிட வேண்டும்.

ஆரம்பத்தில் காலை 5.00 மணி முதல் நள் ளிரவு 12.00 மணிவரையில் நடை-பெற்றுவந்த சக்தி எப்.எம். ஒலிபரப்புச் சேவை சில மாதங்களின் பின்னர் 24 மணிநேர சேவையாக வளர்ச்சி பெற்றிருப்பதும் சிறப்பான சாதனையாகும்.

சக்தி எப்.எம். வானொலி நாடளாவிய ரீதியில் மட்டுமல்ல, உலகளாவிய ரீதியிலும் தனது ஒலிப்பணியை விஸ்தரித்து செயலாற்றிக் கொண்டிருக்கிறது. இம்மாதம் முதலாம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வந்துள்ள அலைவரிசை மீளாய்வு திட்டத்திற்கு அமைய கொழும்பு உள்ளடங்கலாக மேல் மாகாணம், கிழக்கு மாகாணம், தெற்குப் பகுதி மற்றும் வட பகுதி நேயர்கள் 104.1 பண்பலையிலும், ஊவா, கிழக்கு (ஒரு பகுதி) மற்றும் மலையகப் பகுதிகளில் 103.9 பண்பலையிலும், உலகளாவிய நேயர்கள் www.Shakthifm.com என்ற இணையத்தளம் ஊடாகவும் நிகழ்ச்சிகளைக் கேட்கக் கூடியதாக இருக்கிறது.

சக்தி எப்.எம். தனது ஒலிபரப்புச் சேவைக்கு மேலதிகமாக சமூகநல மற்றும் கல்விப் பணிகளிலும் பெரும் பங்களிப்பை செய்து வருகிறது. கடந்த காலங்களில் நிகழ்ந்த இயற்கை அனர்த்தங்களின்போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு பெரிதும் உதவியிருப்பதும், டெங்கு ஒழிப்பு முதலான சுகாதார நல செயற்திட்டத்தை முன்னெடுத்து வருவதும், பொதுமக்களது பல்வேறுபட்ட பிரச்சனைகளை வானலையூடாக வெளிக்கொண்டுவந்து உரிய தீர்வுகளை பெற்றுக்கொடுத்திருப்பதும் மூலமாக மக்கள் சக்தியாக விளங்குகிறது.

கல்விச் சமூகத்திற்கான சேவையாக ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை, கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தர மற்றும் உயர்தரப் பரீட்சை என்பனவற்றுக்கு தோற்றும் மாணவர்களுக்கான இலவச கல்விக் கருத்தரங்குகளை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

நேற்று முன்தினம் (20.11.2012) பதினைந்தாவது ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ள சக்தி எப்.எம். வானொலி காற்றலையில் மேலும் பல சிறப்புமிகு சாதனைகளைப் படைக்கும் என்பதே நேயர்களது எதிர்பார்ப்பாகும்.

- அ. கனகசூரியர்

---

## சமூக வானொலிகள் ஏன் தேவை?



(கடந்தவாரத் தொடர்ச்சி)

பிரதானநிலை வானொலிகளில் மக்களைப் பேச வைப்பதற்காகத் தெரிவு செய்யப்படும் தலைப்புகள் பெரும்பாலும் முதிர்ச்சியற்றவை. சிலநேரம், சில விடயங்கள் காலத்திற்குப் பொருத்தமானதாகத் தெரிவு செய்யப்பட்டாலும் அவை தொடர்பாக நேயர்களின் கருத்துக்களை வழிநடத்திச் செல்வதற்கான தேடல் அறிவிப்பாளரிகளிடம் இருப்பதில்லை. ஒரு செய்தி விவரண நிகழ்ச்சியாக இருந்தாலும் அதில் சினிமா அல்லது அதுசார்ந்த விடயங்கள், களிப்பூட்டும் விடயங்கள் இருந்தாலே அன்றி நேயர்களிடமும் அதிகம் பேசப்படாது என்ற நிலை இப்பொழுது உருவாகியிருக்கின்றது. ஆக, ஒரு சமூகத்தின் அறிவியல் மட்டத்தை உயர்த்தி, ஒரு சமூகத்தை அறிவாலும் கல்வியாலும் போசிக்கக் கூடிய வகையில் நிகழ்ச்சிகளை அமைப்பதற்கான அவகாசம் இன்று மிகவும் குறைவாகவே இருக்கின்றது. மக்களின் வாழ்க்கைத்தரத்தினை உயர்த்தும் தகவல்கள் வழங்கப்படவேண்டிய இடத்தில், மிகவும் அற்பமான தகவல்களே பரிமாறப் படுகின்றன. ஜனபுவத் என்ற ஆங்கில சஞ்சிகை குறிப்பிடும் கருத்துக்கள் பின்வருமாறு:

"இலங்கையில் இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் முக்கியமாக குற்றச்செயல்கள், வன்முறைகள் என்பனவற்றுக்கே அழுத்தங்கொடுக்கின்றன. அரசியல் மற்றும் பாதுகாப்பு நிலவரங்கள், பொழுதுபோக்கு, கலாசாரம் மற்றும் கல்வி நிகழ்ச்சிகள் என்பன கிராமிய, ஓரங்கட்டப்பட்ட மக்களின் அபிவிருத்தித் தேவைகளுக்குத் தோற்றங் கொடுப்பது போல சிறிதாக இடம்பெறும்." (Janapuvath 2008 Volume 4, Issue Ip.4)

தனியார் வானொலி என்ற வகையில் சக்தி எப்.எம்., சூரியன் எப்.எம். ஆகியவற்றைக் கருத்திற்கொண்டால் இவை 24 மணிநேர ஒலிபரப்பினைக் கொண்டிருக்கின்றன. சமையல் குறிப்பு, நடப்பு விவகாரம், அதியசத் தகவல்கள், விளையாட்டு, ஒரு தலைப்பில் நேயர்களைப் பேச வைத்தல் போன்றன உள்ளிட்ட சில உதிரி அம்சங்கள் தவிர ஏனைய நிகழ்ச்சிகள் பெரும்பாலும் வர்த்தக ரீதியான இருப்பினை உறுதிசெய்து கொள்ளுவதற்கான சினிமா, பாடல்சார்ந்த பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளாகும். இவ்வானொலிகள் கொள்கையளவில் வர்த்தக வானொலிகளாகவே உள்ளன. நிதியீட்டல்தான் இவற்றின் முதன்மை நோக்கம். இப்படியிருக்கும் போது சமூக வானொலியொன்றைப் போல் இவை செயற்பட வேண்டும் என எதிர்பார்க்கவும் முடியாது. சமூகவானொலியைப் போல செயற்படாமைக்குக் குறையாகக் கொள்ளவும் முடியாது.

அரசாங்க வானொலியை எடுத்துக் கொண்டால் விளம்பரத்திற்காக ஒலிக்கும் ஓரிரண்டு நிகழ்ச்சிகளைத் தவிர தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், கல்வி, கலைகலாசாரம், போசாக்கு, சுகாதாரம் என்பன உதிரிகளாகவும் செய்திக் குறிப்புகளே பெரும்பாலும் இடம்பெறுகின்றன. குறிப்பாகத் தென்றல் வானொலியை எடுத்துக்கொண்டால் தினமும் பதின்மூன்றரை மணித்தியாலங்கள் ஒலிபரப்பு இடம்பெறுகின்றன. அதிகாலை 5.45 தொடக்கம் 12.00 மணிவரையுள்ள நிகழ்ச்சிகளில் மாத்திரம் அறிவியல்சார்ந்த சில துணுக்குகளையும் தகவல்களையும் அவ்வப்போது செவிமடுக்கலாம். அதனைத் தொடர்ந்து பெரும்பாலும் பாடல்களையே ஏனைய நிகழ்ச்சிகள் மையமாகக் கொண்டிருக்கின்றன. ஆனால், தனியார் வானொலிகளுடன் ஒப்பிடும் போது அரசாங்க வானொலிகள் சமூக மேம்பாட்டுக்கான பல நிகழ்ச்சிகளைக் கொண்டிருக்கின்றன.

இன்று பிரதான நிலை வானொலிகளும் தொலைக்காட்சிகளும் அயல்நாட்டு கலாசாரத்தையும் பண்பாட்டையும் அள்ளியிறைக்கின்ற சாதனங்களாக மாறிவருகின்றன. குறிப்பாக இலங்கையில் தற்போதுள்ள தமிழ்த் தொலைக்காட்சிகளில் இத்தகைய நிலையைக் காணமுடிகின்றது. சக்தி மற்றும் நேத்ரா ஆகிய தொலைக்காட்சிகளில் வாரநாட்களில் இடம்பெறும் நிகழ்ச்சிகளை ஆய்வுக்குட்படுத்திய பொழுது அவை அதிகமான நேரங்களை பொழுதுபோக்கிற்காகச் செலவிடுவதை அறியமுடிந்தது. சக்தி தொலைக்காட்சியில் வாரநாட்களில் இடம்பெறும் நிகழ்ச்சிகளில் 64 வீதமானவை சுத்தமாகப் பொழுதுபோக்குச் சார்ந்தவை. இவற்றில் நாடகம், திரைப்படம், சினிமா மற்றும் பாடல் நிகழ்ச்சிகள் அடங்குகின்றன. சுமார் 9 வீதமான நிகழ்ச்சிகள் பெண்கள் சார்ந்த நிகழ்ச்சிகளாகும். பெண்கள் சார் நிகழ்ச்சிகள் எனும் போது இலங்கைப் பெண்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் தொடர்பானவையோ அல்லது பெண்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கும் பாங்கில் அமைந்தவையோ அல்ல. இதுபற்றி விபரமாக நோக்குவது நமது தேவையன்று. சக்தியில் வாரநாட்களில் 14 வீதமான நிகழ்ச்சிகள் செய்தி, நடப்பு விவகாரம், மக்கள் பிரச்சினைகள் என்பனவற்றுடன் தொடர்புடையன. இத் தொலைக் காட்சியில் சராசரியாகத் தினமும் 11 நாடகங்கள் ஒலிக்கின்றன. சிலவேளைகளில் தொடர்ச்சியாக 5 நாடகங்கள் ஒலிக்கின்றன. இவற்றில் ஒன்று கூட உள்ளூர் தயாரிப்பல்ல. அத்துடன், தொலைக்காட்சி நாடகங்களுக்கு இடையில் குறிப்பிட்ட தொலைக்காட்சியில் நாடகங்களுக்கு கதாநாயகியின் பெயர் எத்தனை தரம் ஒலிபரப்பானது என்பதைக் கண்டு பிடிப்பதற்கான கேள்விகள் வேறு கேட்கப்படுகின்றன. இது ஒரு சிறுபிள்ளைத்தனமான செயல். ஒருநாள் முழுக்க ஒரு நாடகத் தொடரில் கதாநாயகியின் பெயர் எத்தனை முறை ஒலிபரப்பாகின்றது என்று கேட்பதாகயிருந்தால், இத்தகைய தொலைக்காட்சிகள் மக்கள் மீது கொண்டுள்ள அக்கறை என்னவாகயிருக்க முடியும்?

இவ்விடத்தில் ஜனபுவத் சஞ்சிகையில் இடம்பெறும் மேலும் சில குறிப்புகளைக் கவனிக்கலாம். (மிகுதி அடுத்த வாரம்)

துப்பாக்கி வேட்டு வெடிக்கும் போது, கொடி மரத்தின் உச்சியிலே பச்சைக்கொடி பறக்கும்போது, அழியாத பெருமையுடன் அவற்றின் மார்பகம் விம்மிற்று, அவற்றின் நடை நிமிர்ந்தது. அந்த மாதிரியான சந்தர்ப்பங்களில் அவற்றின் பேச்சு பழைய வீரதீரச் செயல்கள் நிறைந்த நாட்களைப் பற்றித் திரும்பும், ஜோன்ஸைப் பண்ணையிலிருந்து விரட்டியது, ஏழு விலங்கு விதிகளையும் எழுதியது, மனிதர்கள் படையெடுத்து வந்ததை மிருகங்கள் சமாளித்து வெற்றி கொண்டது எல்லாம் பற்றி விரிவாகப் பேசப்படும்.

பழைய கனவுகளில் எதுவும் அடியோடு இன்னமும் அழிந்துவிடவில்லை. கிழட்டு தளபதி ஒரு காலத்தில் கனவாகக் கண்டுகொள்ள அந்த லட்சிய பூமி, மனிதன் காலடிபடாத இங்கிலாந்து, விலங்குகள் கைக்கு ஒருநாள் பூரணமாக வந்துவிடும் என்றுதான் மிருகங்கள் நம்பின. அது என்றாவது ஒருநாள் வரும், சமீபத்தில், அவற்றின் வாழ்நாளிலே வராவிட்டாலும், என்றாவது ஒரு நாள் வந்தே தீரும் அது. அங்கும் இங்கும் ரகசியமாக மிருகங்கள் இன்னமும் இங்கிலாந்தின் விலங்குகள் பாட்டைக் கற்றுக்கொண்டு மனதிற்குள் பாடிக் கொண்டன.




இரைந்து பாடினால் ஆபத்து. எந்த மிருகமும் துணிந்து பாடாது. எனினும் பாட்டு மட்டும் எல்லா மிருகங்களுக்கும் நன்கு தெரியும். விலங்குகளின் வாழ்க்கை கஷ்டமாகத்தான் இருந்தது. அவற்றின் நம்பிக்கைகள் எல்லாமே நிறைவேறவில்லை. எனினும் அவை உலகிலுள்ள மற்ற மிருகங்கள் போல மனிதர்களுக்கு அடிமையாக இல்லை. இந்தப் பிரக்ஞை அவற்றிற்குப் பூரணமாக இருந்தது. அவை பட்டினி கிடந்தால், அதற்குக் காரணம் கொடுங்கோலர்களாகிய மனிதர்கள் அவற்றின் உணவைப் பறித்துக்கொண்டதாலல்ல என்பது நிச்சயம்!. வேலை கடுமைதான். ஆனால் அவை தங்களினத் தாருக்காகவே உழைத்தார்கள். வேறு மனிதன் யாருக்காகவும் அல்ல. அந்த விலங்குகளில் யாரும் இரண்டு காலால் நடப்பவைகள் அல்ல. ஒரு மிருகமும் வேறு யாரையும் 'எசமான்' என்று அங்கு அழைப்பதில்லை.

எல்லா மிருகங்களுமே சரிநிகர் சமானமானவை. ஒரு நாள், கோடையின் ஆரம்பகாலத்தில், ஸ்க்வீலர் பன்றி ஆடுகளை எல்லாம் தன்னுடன் வரும்படி உத்தரவிட்டது. பண்ணையின் ஒரு கோடியிலிருந்த, ஒரு உபயோகப்படாத வயலில், புதர்கள் அடர்ந்திருந்த ஒரு பகுதிக்கு அவற்றை அழைத்துச் சென்றது. பண்ணையின் ஒரு கோடியிலிருந்த, ஒரு உபயோகப்படாத வயலில், புதர்கள் அடர்ந்திருந்த ஒரு பகுதிக்கு அவற்றை அழைத்துச் சென்றது. அன்று பூராவும் ஸ்க்வீலர் மேற்பார்வையில் ஆடுகளெல்லாம் அந்த வயலிலே தங்கிவிட்டன. இலை தழைகளை சாப்பிட்டுக் கொண்டிருந்துவிட்டன. மாலை ஸ்க்வீலர் மட்டும் பண்ணை வீட்டுக்குத் திரும்பிவிட்டது. ஆடுகள் அங்கேயே தங்கிவிட்டன. சீதோஷ்ணமும் வெளியே தங்குவதற்கு சௌகரியமாக இருந்தது. ஒரு வாரம் முழுவதும் ஆடுகள் மட்டும் தனியாக வயலிலே தங்கின. மற்ற மிருகங்கள் கண்ணில் படாமலே அவை தங்கின.

(நாளை)

## அம்மாடியோவ்! நீர், நிலம், பனிக்கட்டியிலும் ஓடுமாம் இந்தக் கார்!



நீர், நிலம், பனிக்கட்டி ஆகியவற்றில் செல்லக் கூடிய சூப்பர் காரை, சீனாவைச் சேர்ந்த, யுகான் ஜாங் என்ற இளைஞர் வடிவமைத்துள்ளார்.

நிலத்திலிருந்து நீருக்குள் செல்ல, காரில் உள்ள ஒரு இன்ஜினை இயக்கினால் போதும். காருக்கு அடியில், பலூன் போன்ற அமைப்பிலான, ஏர்பேக் உருவாகும். தண்ணீரில் இருந்து சாலைக்கு வரும் போது, இந்த, ஏர்பேக் சுருங்கி விடும். அடர்ந்த பனிக் கட்டியிலும், இந்த காரை, மணிக்கு, 52 கி.மீ., வேகத்தில் இயக்க முடியும். மேலும், சுற்றுச் சூழலுக்கு பாதுகாப்பான தொழில்நுட்பமும் இதில் உள்ளது. சுற்றுச் சூழலை மாசுபடுத்தும் கார்பன், இந்த காரில் இருந்து, ஒரு சதவீதம் கூட வெளி வராது.

சீனாவை தொடர்ந்து, மற்ற நாடுகளிலும், இந்த காரை பிரபலப்படுத்த திட்டமிட்டுள்ளார், யுகான் ஜாங். இந்த காருக்கான விலை, இன்னும் நிர்ணயிக்கப்படவில்லை.

## முட்டையோ முட்டை!





கிவி பறவையின் முட்டை அதன் எடையில் கால் பங்கு இருக்கும்.


ஆண்டுக்கு ஒரு முட்டை மட்டுமே இடும் பறவைகள் அலாபாட்ரஸ், ஷ்ர்வாட்டர்.


உயிரினங்களிலேயே அதிகமாக முட்டைகளை இடுவது கறையான் மட்டுமே.

பாலூட்டி இனத்தில் முட்டையிட்டுப் பால் கொடுப்பது பிளாட்டிபஸ் மட்டுமே.

பெண் வண்ணத்துப்பூச்சி முட்டையிட்டவுடன் இறந்து விடும்.

நின்றபடியே முட்டையிட்டு நின்றபடியே அடைகாக்கும் பறவை பெங்குயின்.





# சிறுவர் அமுதம்

## நெருப்புக்கோழி



நெருப்புக்கோழிதான் நிலத்தில் வாழும் பறவைகளில் மிகப் பெரியது. இது 6 அடி முதல் 8 அடி உயரம் வரை வளரக் கூடியது. இதன் எடை சுமார் 90 கிலோ.

நெருப்புக்கோழி தென்ஆபிரிக்காவிலும், ஆசியாவிலும் அதிகமாகக் காணப்படுகிறது. இது மணல் பிரதேசங்களில் ஒட்டகத்தைப் போல வேகமாக ஓடும். கால்களில் இரண்டு விரல்கள் மட்டுமே கொண்ட இந்தப் பறவை, மணிக்கு 40 மைல் வேகத்தில் ஓடும் திறன் கொண் டது. எதிரிகளிடம் இருந்து எளிதாகத் தப்பிவிடும். நெருப்புக் கோழியின் ஆயுட்காலம் 35 ஆண்டுகள்.

நெருப்புக்கோழி தான் உண்ட பழங்கள், கொட்டைகள் போன்றவற்றைச் செரிப்பதற்காக ஆணி களையும், இரும்புத் துண்டுகள், கற்கள் போன்றவற்றையும் விழுங்கும். ஆண்டுக்கு ஒரு தடவை மட்டுமே முட்டையிடும். நெருப்புக்கோழியின் ஒரு முட்டை, 24 சாதாரண கோழி முட்டைகளின் எடைக்குச் சமம். இது 18 செ.மீ. நீளமும், 16 செ.மீ. அகலமும் இருக்கும். ஒன்றரை கிலோ எடை கொண் டது.

பெண் நெருப்புக்கோழியானது மணலில் குழி தோண்டி அதைச் சுற்றிலும் கற்களை அடுக்கும். அதில் முட்டைகளை பகலில் பெண்ணும், இரவில் ஆணும் அடைகாக்கின்றன. முட்டையிலிருந்து வெளியே வரும் குஞ்சு நாம் வீட்டில் வளர்க்கும் கோழி அளவு இருக்கும். நெருப்புக் கோழி குஞ்சு பெரிதாக வளர 3 ஆண்டுகள் ஆகும்.

## விடுகதைகள்

1.அழுவேன், சிரிப்பேன் அனைத்தும் செய்வேன் நான் யார்?

2.இவன் வாலுக்கு வையகமே நடுங்கும் அவன் யார்?

3.ஊரெல்லாமல் ஒரே விளக்கு. அதற்கு ஒரு நாள் ஓய்வு அது என்ன?

4.தலையை சீவினால் திறப்பான் அவன் அது என்ன?

5..நாலு காலு உண்டு வீச வாலில்லை அது என்ன?

விடைகள்:
1. கண்ணாடி 2. தேள் 3. நிலா
4. நுங்கு 5. நாற்காலி

# பாலியல் தொழிலை சட்டபூர்வமாக்குவது சுற்றுலாத்துறையின் வளர்ச்சிக்கு உதவுமாம்

பாலியல் தொழிலை சட்டபூர்வமாக்குவது சுற்றுலாத்துறையின் வளர்ச்சிக்கு உதவும் என்று சமூக ஆய்வாளர் ஒருவர் கருத்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் சமூக ஆய்வாளரும், சமூக அபிவிருத்திக்கான நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரியுமான சர்மிளா செய்யத் வெளிநாட்டு செய்தி சேவைக்கு மேலும் தெரிவிக்கையில்,

"பாலியல் தொழிலை சட்டபூர்வமாக்குவது சுற்றுலாத்துறையின் வளர்ச்சிக்கு உதவும். இலங்கை ஒரு பாரம்பரிய கலாசாரங்களை பின்பற்றுகின்ற நாடு என்கின்ற போதிலும், அங்கு ஏற்கனவே பாலியல் தொழில் மிகவும் அதிகமான அளவுக்கு பரந்திருப்பதால், அதனை சட்டபூர்வமாக்குவது சுற்றுலாத்துறைக்கு நல்லது. அதனால், அதில் ஈடுபடும் பெண்களுக்கு ஓரளவு பாதுகாப்பும் கிடைக்கும்.

ஏற்கனவே, பல கிராமிய மற்றும் சிறிய பெண்கள் ஏமாற்றப்பட்டு பாலியல் தொழிலுக்கு தள்ளப்பட்டிருக்கும் நிலையில், இப்படியாக அந்த தொழில் சட்டபூர்வமாக்கப்படுவது, அவர்களுக்கு சிறிதளவாவது பாதுகாப்பை ஏற்படுத்தும்" என்றார்.

# சோதிடர்களுக்கும் விருது வழங்கி கௌரவிப்பு

வலிகாமம்

இலங்கை கலாசார மற்றும் கலை அலுவலகங்கள் அமைச்சினால் சோதிட கலைஞர்கள் விருதுவழங்கி கௌரவிக்கப்பட உள்ளார்கள் சோதிடத்துறையில் முப்பது வருடங்களுக்கு மேற்பட்ட சேவையாற்றலுடன் அறுபது வயதுக்கு மேற்பட்டவர்கள் சோதிடக் கலையைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்தல் போன்றவற்றுக்கு ஆற்றிய சேவைக்கான விருது வழங்குவதற்கு கலாசார அலுவல்கள் அமைச்சு தீர்மானித்துள்ளது.

இந்த விருதுக்கு தகுதியுடையோர் தமது விண்ணப்பங்களை கிராம அலுவலர் மற்றும் பிரதேச செயலரின் சிபார்சுடன் எதிர்வரும் டிசம்பர் ஐந்தாம் திகதிக்கு முன் செயலாளர், கலாசார அலுவல்கள் அமைச்சு செத்திரிபாய, பத்தர முல்ல என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# பாலியல் தொழில் சுற்றுலாத்துறையை வளர்க்குமா? - காறித் துப்புகின்றது உலமா கட்சி

இலங்கையில் விபசாரத்துக்கு அனுமதியளிப்பதன் மூலம் சுற்றுலாத்துறையை வளர்க்க முடியும் என்ற முஸ்லிம் பெண் ஊடகவியலாளரின் கருத்து மிகவும் கண்டிக்கத்தக்கது என உலமா கட்சி தெரிவித்துள்ளது.

இந்த கருத்தை வாபஸ் பெறுவதற்கான அழுத்தங்களை அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா [illegible] மேற்கொள்ள வேண்டும் என உலமா கட்சி தலைவர் மௌலவி முபாறக் அப்துல் மஜீத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

"இந்தக் கருத்தை ஒரு முஸ்லிம் பெண் கூறியிருப்பது மிகவும் கவலை தருகிறது அவர் தனது சமூகம், நாடு, கலாசாரம், பண்பாடு என்பவற்றை கொஞ்சமும் கருத்தில் கொள்ளாமல் கூறியுள்ளமை தெரிகிறது.

விபசாரத்தை அனுமதித்துள்ள நாடுகளில் பொருளாதார வளத்தை விட தரித்திரமே அதிகரித்துள்ளதை காணலாம். இதற்கு உதாரணமாக இந்தியா, தாய்லாந்து போன்ற நாடுகளை காணலாம். இவ்வாறான கருத்துக்களைச் சொல்பவர் நிச்சயம் ஒரு மன நோயாளியாகவே இருக்க முடியும். சமூகத்தையும், நாட்டையும் சீரழித்து அதனை பார்த்து ரசிக்கும் மனங்கொண்டவர்களே இவ்வாறான கருத்துக்களை கூறுவர்.

தனது தாய்நாட்டின் பொருளாதார வளத்துக்காக விபசாரத்தை அனுமதிக்க வேண்டும் என்று ஒருவர் கூறுவது தனது சொந்த வசதி வாய்ப்புக்காக தனது தாயையே விபசாரத்தில் ஈடுபடுத்துவதற்கு ஒப்பானதாகும். இந்த கருத்தை குறித்த பெண் வாபஸ் பெற வேண்டும் அல்லது அதற்காக மன்னிப்பு கேட்க வேண்டும்" என்றார்.

இது தொடர்பாக காத்தான்குடி நகர சபை உறுப்பினரும் பெண்களுக்கான வலுவூட்டலுக்கும் அபிவிருத்திக்குமான நிறுவனத்தின் தலைவியுமான சல்மா அமீர் ஹம்சா விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

"ஒரு பெண்ணாக இருந்து கொண்டு பாலியல் தொழிலை சட்டபூர்வமாக்குவதற்கு ஆதரவு தெரிவித்து கருத்து வெளியிட்டுள்ள சர்மிளாவின் கருத்துக்களை நான் வன்மையாக கண்டிக்கின்றேன்.

இலங்கையில் பாலியல் துஷ்பிரயோகம், சிறுவர் துஷ்பிரயோகம் என்பவற்றை ஒழிப்பதற்கு பொதுநிறுவனங்களும் அரசாங்கமும் பாடுபட்டுவரும் நிலையில் இந்த விடயம் ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்றாகும்.

பாலியல் தொழிலை சட்டபூர்வமாக்குவதன் மூலம் பாலியல் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு கிடைக்கும் என்று சர்மிளா கூறியிருப்பதானது சமூகச் சீரழிவை அதிகரிக்கச் செய்யும் ஒன்றாகவே மாறிவிடும் அபாயமுள்ளது என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இலங்கை போன்ற நாடுகளில் பாலியல் தொழிலாளர்கள் அதிகரித்துள்ளார்கள் என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது ஒன்று. ஏனெனில் பாலியல் தொழிலுக்கு சந்தர்ப்ப சூழ்நிலைகளினால் சென்றவர்களும் தவறாக பயன்படுத்தப்பட்ட பெண்களும் அல்லது அதில் நிர்ப்பந்திக்கப்பட்டவர்களுமே ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்வாறு பாலியல் தொழிலில் ஈடுபடும் பெண்களை அதிலிருந்து மீட்டெடுக்க பெண்கள் அமைப்புக்கள் அரசசார்பற்ற நிறுவனங்கள் பாடுபட்டுவரும் நிலையில் பாலியல் தொழிலை சட்டபூர்வமாக்கும் ஆலோசனையை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாததாகும். அதேபோன்று இதற்கு ஆதரவு தெரிவித்துள்ள சர்மிளாவின் கருத்தையும் ஏற்றுக்கொள்ள முடியாது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள பிரதேசங்களில் வாழும் சிறுபான்மை சமூகங்களான தமிழ், முஸ்லிம் சமூகத்தின் கலாசார பாரம்பரியம் என்பது ஒழுக்க விழுமியங்களை சார்ந்துள்ளது.

சர்மி ளாவின் இந்த கருத்தானது ஒழுக்க விழுமியத்துக்கு மாசு கற்பிக்கும் கருத்தாகும்.

பாலியல் தொழிலை சட்டபூர்வமாக்குவது என்ற ஆலோசனையை எந்த வொரு மனிதநேய பெண் செயற் பாட்டாளரும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்றும் சல்மா அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# மக்கள் மன்றம்

## பண்டத்தரிப்பு ஆயுர்வேத வைத்தியசாலையில் ஆளணி இல்லை

சண்டிலிப்பாய்

பண்டத்தரிப்பு ஆயுர்வேத வைத்தியசாலையில் போதிய ஆளனி வசதிகள் இன்மையால் வைத்தியசாலையின் செயற்பாடுகளை மக்களுக்கு சிறப்பாக செய்வதில் பல சிக்கல்கள் தோன்றியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி வைத்தியசாலை இரண்டு மாடிக் கட்டிடங்களுடன் போதிய இடவசதியுடனும், நோயாளர் தங்குமிடம் என்பனவற்றுடன் சிறப்பாக இயங்கி வருகின்றது.

இங்கு வரும் நூற்றுக் கணக்கான மக்கள் நாளாந்தம் சிகிச்சைகளைப் பெற்றுச் செல்வதுடன், பலர் இவ் வைத்தியசாலையில் தங்கியும் மருத்துவ சேவையினைப் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஆனால் இவ் வைத்தியசாலையில் ஆண், பெண் தொழிலாளர்கள் பற்றாக்குறை காணப்படுவதனால் சில வேலைகளை செய்வதில் பல்வேறு சிரமங்கள் ஏற்பட்டு வருவதாகவும் இவ் வைத்தியசாலைக் கான அனுமதிக்கப்பட்ட ஆளனி கூட வழங்கப்படவில்லை என்றும் வைத்தியசாலை வட்டாரங்கள் கவலை வெளியிட்டு வருகின்றன.

இந்த ஆளனிப் பற்றாக்குறைகள் காரணமாக பல்வேறு வேலைகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## குடிநீர் பிரச்சினைகளைத் தீர்த்து வையுங்கள்

சண்டிலிப்பாய்

மீள்குடியேற்ற பிரதேசங்களான மாதகல் இளவாலைப் பகுதிகளில் குடிநீர் தட்டுப்பாடு நிலவுகிறது. அண்மையில் மீள்குடியேற்றப்பட்ட பிரதேசங்களான மாதகல் கிழக்கு, மாதகல் மேற்கு, மாரீசன் கூடல், இளவாலை ஆகிய பிரதேசங்களில் உள்ள மக்கள் குடிநீரைப் பெறுவதில் பல்வேறு கஷ்டங்களை எதிர்கொள்வதாக சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

மேற்படி பகுதிகளில் மானிப்பாய் பிரதேச சபையினரால் புனரமைக்கப்பட்டுள்ள நீர்த்தாங்கிகள் போதுமானதாக இல்லாமல் காணப்படுவதாகவும் தண்ணீர் நிரம்பி சில மணி நேரங்களில் நீர் பற்றாக்குறை ஏற்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே தங்களுக்கு மேலதிக நீர்த்தாங்கிகளை உரிய இடங்களில் பொருத்தி தங்களின் குடிநீர் பிரச்சினைகளை தீர்க்க நடவடிக்கை எடுக்குமாறு மேற்படி மீள்குடியேற்ற மக்கள் வேண்டி நிற்கின்றனர்.

# இலங்கை பொலிஸ் திணைக்களம் உப பொலிஸ்...

(7 ஆம் பக்கத் தொடர்ச்சி)

(பிறப்புச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும் )

வயது (வர்த்தமானி அறிவித்தலில் தரப்பட்டுள்ள விண்ணப்ப முடிவுத் திகதியன்றுள்ளவாறு) :-

வருடங்கள் :-----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.

8. உயரம் : அடி :-----, அங்குலம் :----- மார்பு : அங்குலம் :-----.

9. கல்வித் தகைமைகள் (சித்தியடைந்த பரீட்சையைக் குறிப்பிட்டு சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

10. மேலதிகத் தகைமைகள் உண் டா ? (சான் றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

11. திருமணம் ஆனவரா/ திருமணம் ஆகாதவரா ? :-----.

12. (அ) தற்போது செய்யும் தொழில் :-----.

(ஆ) நீங்கள் இலங்கை ஆயுதப்படை அங்கத்தவரா ? :-----.

13. வேறு ஏதேனும் விசேட திறமைகள்/ தகைமைகள் உண்டா ? :-----.

14. உங்களைப் பற்றிய தகவல் களைப் பெற்றுக்கொள்ளக் கூடிய உறவினர்கள் அல்லாத இருநபர்களின் பெயர், முகவரிகளைக் குறிப்பிடுக :-

(அ) -----.

(ஆ) -----.

15. (அ) நீங்கள் இதற்கு முன்னர் பொலிஸ் சேவையின் ஏதாவது பதவி ஒன்றுக்கு விண்ணப்பித்ததுண்டா? ஆம் எனின் அது தொடர்பான விபரங்களைத் தருக :-----.

(ஆ) நீங்கள் இதற்கு முன் னர் நிரந் தர பொலிஸ் அல்லது றிசேவ்பொலிஸ் சேவையில் கடமையாற்றியுள்ளீரா? ஆம் எனின் அப்பதவியில் இருந்து விலகியதற்கான காரணங்களைக் குறிப்பிடுக? :-----.

16. நீங்கள் தற்போது றிசேவ் பொலிஸ் சேவையில் சேவையாற்றுகிறீரா?

அவ்வாறாயின் நியமனத் திகதி, பதவிநிலை மற்றும் இலக்கம் போன்ற விபரங்களைக் குறிப்பிடுக. நியமனக் கடிதத்தின் பிரதியை இணைக்குக -

17. (அ) நீங்கள் ஆயுதப் படைதாங்கு சேவையில் சேவையாற்றுகிறீரா ?

(அவ்வாறாயின் குறிப்பிட்ட அப்படைதாங்கு சேவை யின் தலைவர் ஊடாக விண்ணப்பம் அனுப்பப்படல் வேண்டும்) :-----.

(ஆ) நீ ங்கள் ஆயுதப் படைதாங்கு சேவையில் சேவையாற்றியுள்ளீரா?

(அவ்வாறாயின் அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைக்கவும் ) :-----.

18. (அ) நீங்கள் ஆயுதப் படைதாங் கு தொண் டர் அணிச் சேவையில் சேவையாற்றுகிறீரா?

(அவ்வாறாயின் குறிப்பிட்ட அப்படை தாங்கு தொண்டர் சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பம் அனுப்பப்படல் வேண்டும்) :-----.

(ஆ) நீங்கள் ஆயுதப் படைதாங்கு தொண் டர் அணிச் சேவையில் சேவையாற்றியுள்ளீரா ? (அவ்வாறாயின் அதிலிருந்து விலகிய போது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைக்கவும்) : -----.

19. நீங்கள் ஏதாவது குற்றம் தொடர் பாக அல்லது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளீரா? அல்லது வேறு குற்றம் தொடர்பாக குற்றம்சாட்டப்பட்டு நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட்டுள்ளீரா ?

(அவ்வாறாயின் விபரம் தருக) :-----.

20. உங்கள் உறவினர்கள் எவரேனும் தவறு சம்பந்தப்பட்டு சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனரா ? அல்லது அது தொடர்பான அழைப்பாணை கொடுக்கப்பட்டுள்ளனரா ? அல்லது குற்றம் சுமத்தப்பட்டுள்ளனரா? அல்லது குற்றத்துக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளனரா? (அவ்வாறாயின் விபரம் தருக) :-----.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் என்னுடைய அறிவுக்கு எட்டிய வரையில் உண்மையானவையென்றும், சரியானவையென்றும் இத்தால் நான் வெளிப்படுத்துகின்றேன். மேலே தரப் பட்டுள்ள விபரங்கள் எவையேனும் பிழையானவையென்றோ, பொய்யானவையென் றோ தெரியவரின் நான் பொலிஸ் திணைக்கள சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருப்பின் எந்த சந் தர்ப்பத்திலும் உடனடியாக நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

.........................................................,

விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

21. திணைக்கள தலைவரின் சான்றிதழ் (தேவையேற்படின் ) :

இந்த விண்ணப் பதாரி திரு/ செல்வி ................................ அவர்கள் இத்திணைக்களத்தில்/ கூட்டுத் தாபனத்தில்/ சபையில் சேவையாற்றுபவர் எனவும் அவர் விண்ணப்பிக்கும் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டால் அவரை இச்சேவையிலிருந்து விடுவிக்க முடியும் எனவும் தெரிவிக்கிறேன் .

.........................................................,

திணைக்கள தலைவரின் கையொப்பமும்

பதவி முத்திரையும் .

பதவி :-----.

திகதி :-----.

# பெண்களைப் பேராயராக்க வாக்கெடுப்பு



பெண் ஆயர்களை பேராயராகத் தெரிவு செய்யலாமா என்பதில் கிறிஸ்தவ சமய ஆட்சிக் குழு வாக்கெடுப்பு நடத்தத் திட்டமிட்டுள்ளது.

பெண் ஆயர்கள் உருவாகி இருபதாண்டுகளான பின்பும் இன்னும் பழமைவாதிகளுக்கும், புதுமை விரும்பிகளுக்கும் இடையே கருத்து வேறுபாடு இருந்து வருகிறது.

கேண்ட்டர்பரியின் மறை மாவட்டப் பேராயர் அருட் பெருந்திரு ரோவன் வில்லியம்ஸ் பதவிக்காலம் முடியும் நிலையில் அடுத்த மறைமாவட்டப் பேராயருக்கான தெரிவு நடைபெறும் சமயத்தில் பெண்களை பேராயராக்க வாக்கெடுப்பு நடத்தப்படுகிறது.

இந்த வாக்கெடுப்பு குறித்து வெஸ்ட்மின்ஸ்டர் திருச்சபை அலுவலகத்தில் சமய ஆட்சிக் குழுவினரின் மூன்று நாள் கூட்டம் திங்களன்று தொடங்குகிறது. இக்குழு ஆயர்களின் சம்மதத்தோடு சபையாரின் சம்மதத்தையும் இந்த வாக்கெடுப்பின் மூலம் அறிய விரும்புகின்றது.

இந்த வாக்கெடுப்பில் பெண்களைப் பேராயர் ஆக்கலாம் என்பது முடிவானால் பின்பு இந்த முடிவை பாராளுமன்றம் சட்டமாக்கும் அதனைத் தொடர்ந்து அரசியின் அனுமதியும் கிடைக்கும்.

ஒருவேளை, வாக்கெடுப்பில் பெண்களை பேராயர் ஆக்கக் கூடாது என்பது தெரியவந்தால் மீண்டும் இதற்கான முயற்சியை 2019க்குப் பின்பு தான் தொடங்க முடியும். தற்போது நடைபெறும் வாக்கெடுப்புக்கான முயற்சி 2000ல் தொடங்கியது.

இந்த வாக்கெடுப்பு தொடர்பாக சமய ஆட்சிக்குழு திருச்சபைகளைச் சேர்ந்த 468 பேருக்கு ஒரு கையேடு அனுப்பியுள்ளது.

திருச்சபையின் 44 திருமண்டிலங்களிலுள்ள 327 குருமார்கள் கையெழுத்திட்ட கடிதம் ஒன்றை வெள்ளிக்கிழமை வெளிவந்த ஆங்கில நாளிதழ் வெளியிட்டது.

பெண்களைப் பேராயராக்கும் முயற்சியால் திருச்சபையில் நிரந்தரப் பிளவும் பிரிவினையும் ஏற்படும் என்று பலர் கருதுகின்றனர்.

இதற்கிடையே பேராயர், குருமார், மூத்த சபையார் என்று சுமார் ஆயிரம் பேர் சமய ஆட்சிக் குழு பெண்களைப் பேராயராக்க ஆதரவாகச் செயல்பட வேண்டும் என்று கையெழுத்திட்ட கடிதம் ஒன்றை நாளிதழில் வெளியிட்டுள்ளனர்.

# இளவரசர் வில்லியமின் மனைவி கர்ப்பம்



இங்கிலாந்து இளவரசர் வில்லியமின் மனைவி கேட் மிடில்டன் கர்ப்பமாக உள்ளார் என்று அவரது தோழி ஒருவர் தெரிவித்துள்ளார்.


இங்கிலாந்து இளவரசர் வில்லியம்(வயது 30) தனது நீண்ட நாள் காதலியான கேட் மிடில்டன்னை(வயது 30) கடந்தாண்டு ஏப்ரல் மாதம் 29ஆம் திகதி திருமணம் செய்து கொண்டார்.

அவர்கள் திருமணம் முடிந்ததில் இருந்தே கேட் எப்பொழுது கர்ப்பமாவார் என்ற பேச்சு தான். இந்நிலையில் அவர் கர்ப்பமாக இருப்பதாக அவரது தோழி ஜெசிகா ஹே என்பவர் அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த பத்திரிக்கை ஒன்றுக்கு தெரிவித்ததாக நியூயார்க் போஸ்ட் செய்தி வெளியிட்டுள்ளது.

இது குறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பை அடுத்த மாதம் வெளியிட வில்லியம், கேட் தம்ப தியினர் திட்டமிட்டுள்ளார்களாம். இரண்டு குழந்தைகள் போதும் என்று அவர்கள் திட்டமிட்டுள்ளதாக ஜெசிகா தெரிவித்துள்ளார்.

ராணி எலிசபெத்தின் வைர விழா கொண்டாட்டங்கள் மற்றும் லண்டன் ஒலிம்பிக் போட்டிகளுக்காக கேட் கர்ப்பம் தரிப்பதை தள்ளிப் போட்டதாகவும், கேட் பெற்றெடுக்கும் பிள்ளை ஆணோ, பெண்ணோ அது தான் இங்கிலாந்தின் சிம்மாசனத்தில் அமரும் என்றும் கூறப்படுகிறது.

# இஸ்ரேல் - பாலஸ்தீன பிரச்சினை: அமெரிக்க போர்க்கப்பல்கள் விரைந்தன



பாலஸ்தீனத்தின் காஸா பகுதி மீதான இஸ்ரேலின் தாக்குதல் தொடர்வதால், தங்கள் நாட்டு மக்களை மீட்பதற்காக அமெரிக்கா மூன்று கப்பல்களை அனுப்பியுள்ளது.

பாலஸ்தீனத்தின் காஸா பகுதி மீது இஸ்ரேல் தொடர்ந்து 7 நாட்களாக வான்வழி தாக்குதலை நடத்தி வருகிறது.

இத்தாக்குதலுக்கு நேற்று வரையில் 110 பேர் பலியாகி உள்ளனர். இந்நிலையில் ஹமாஸ் பிரிவினரும் எல்லை பகுதியிலிருந்து ராக்கெட் தாக்குதலை நடத்தி வருகின்றனர்.

இஸ்ரேலின் தாக்குதலுக்கு எதிராக பல்வேறு நாடுகளில் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடந்தன.

பாலஸ்தீனத்தின் மீது நடத்தப்பட்டு வரும் தாக்குதலை இஸ்ரேல் உடனடியாக நிறுத்த வேண்டும் என எகிப்து ஜனாதிபதி முகமது முர்சி கேட்டுக் கொண்டுள்ளார். இதுதொடர்பாக அவர் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவுடன் தொலைபேசியில் பேசியுள்ளார்.

இஸ்ரேல்- பாலஸ்தீன பிரச்னையில் சுமூக தீர்வு ஏற்படுத்த அமெரிக்க வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டன் இஸ்ரேலுக்கு விரைந்துள்ளார்.

இதற்கிடையே மத்திய கிழக்கு நாடுகளில் பதட்டம் நிலவுவதால், தங்கள் நாட்டு மக்களை காபாற்ற மூன்று கடற்படை கப்பல்களை அமெரிக்கா அனுப்பி வைத்துள்ளது.

இந்நிலையில் பாலஸ்தீனத்துக்கு தங்கள் முழு ஆதரவை தெரிவிக்கும் வகையில், எகிப்து மற்றும் 12 அரபுநாடுகளின் வெளிவிவகாரத்துறை அமைச்சர்கள் காஸா நகருக்கு வந்துள்ளனர். இஸ்ரேல் தாக்குதலில் காயமடைந்தவர்களை சந்தித்து அவர்கள் ஆறுதல் கூறினர்.

# பாகிஸ்தானில் குர்ஆன் எரிப்பு வழக்கு: கிறிஸ்தவ சிறுமி விடுதலை



பாகிஸ்தானில் குர்ஆனின் சில பக்கங்களை எரித்ததாக ரிம்ஷா என்ற 14 வயது கிறிஸ்துவ சிறுமி மீது குற்றம் சுமத்தப்பட்டது.

கடந்த ஆகஸ்ட் மாதம் முஸ்லிம்களின் புனித நூலான குர்ஆனின் சில பக்கங்களை எரித்ததாக 14 வயது சிறுமி ரிம்'ா மீது குற்றம் சுமத்தப்பட்டதையடுத்து, கைது செய்யப்பட்டார்.

இந்த குற்றச்சாட்டை முஸ்லிம் மத குரு ஒருவர் தெரிவித்தார்.

இந்நிலையில் இந்த வழக்கை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்ததுடன், போலி சாட்சியங்களை தயார் செய்தார் என மதகுரு மீது வழக்கு தொடரப்பட உள்ளது.

# உலக பார்வை

## தாய்லாந்து பிரதமர் இங்கியிடம் கலகலப்பாக பேசிய ஒபாமா



அமெரிக்க அதிபர் தேர்தலில் போட்டியிட்டு இரண்டாவது முறையாக வெற்றி பெற்ற பிறகு பாரக் ஒபாமா தாய்லாந்து, மியான்மர், கம்போடியா ஆகிய 3 ஆசிய நாடுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு வருகின்றார்.


அதன்படி நேற்று வாஷிங்டனில் இருந்து தனி விமானம் மூலம் அவர் தாய்லாந்து சென்றார். பாங்காக் விமான நிலையத்தில் வந்திறங்கிய ஒபாமாவுக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

நீண்டகாலமாக உடல்நலம் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் தாய்லாந்து மன்னர் பூமிபால் அதுல்யாதேஜை அவர் சந்தித்து உடல்நலம் விசாரித்தார். அதன் பிறகு நேற்று இரவு பாங்காக்கில் உள்ள அரசு மாளிகையில் அவருக்கு விருந்தளிக்கப்பட்டது. அந்த விருந்தில் தாய்லாந்து பிரதமர் இங்கலக்கினா வத்ரா, அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஹில்லாரி கிளிண்டன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

விருந்தின்போது ஒபாமா தாய்லாந்து பிரதமரிடம் கலகலப்பாக பேசி சிரித்துள்ளார். இதையடுத்து அவர் இங்லக்கிடம் வழிந்ததாக செய்திகள் வெளியாகின. மியான்மரில் ஜனநாயகத்துக்கு தாய்லாந்து அளித்து வரும் ஆதரவை ஒபாமா பாராட்டினார்.

முன்னதாக புத்தர் கோவிலுக்கு சென்ற ஒபாமா தனது காலணிகளை அகற்றிவிட்டு கோவிலுக்குள் சென்று அங்குள்ள நூற்றுக்கணக்கான புத்தர் சிலைகளை கண்டு ரசித்தார். அதிலும் குறிப்பாக 150 அடி நீளம், 50 அடி உயரமுள்ள சாய்திருக்கும் புத்தர் சிலையை பார்த்து ரசித்தார்.

ஒபாமா கோவிலுக்கு வருவதை அறிந்த உள்ளூர்வாசிகள் வெளியே நின்று கொண்டு ஒபாமா, ஒபாமா என்று மகிழ்ச்சி கரகோஷம் எழுப்பினர். இன்று காலை ஒபாமா தாய்லாந்தில் இருந்து கிளம்பி பர்மா சென்றார்.



லண்டனில் நடைபெற்ற தீபாவளி கொண்டாட்டத்தில் பங்கேற்ற இங்கிலாந்து பிரதமர் டேவிட் கேமரூன் (வலது), இங்கிலாந்துக்கான இந்தியாவின் ஹை கமி'னர் ஜெய்மினி பகவதி.

## ஆப்கானில் போரை முடித்து கொள்கிறோம்: பிரான்ஸ் அதிரடியாக அறிவிப்பு

ஆப்கானிஸ்தானில் தலிபான் தீவிரவாதிகளுக்கு எதிரான போரை முடித்து கொள்வதாக பிரான்ஸ் அறிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் தலிபான்களை ஒடுக்குவதற்காக அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படை வீரர்கள் உள்ளனர். இதில் பிரான்ஸ் வீரர்களும் அடங்குவர்.

இந்நிலையில் ஆப்கானில் பேரை முடித்து கொள்வதாக பிரான்ஸ் அறிவித்துள்ளது.

மேலும், தங்கள் நாட்டை சேர்ந்த வீரர்கள் அனைவரும் 2 மாதங்களில் நாடு திரும்புவார்கள். அதே நேரம் ஆப்கான் இராணுவ வீரர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக 1,500 பிரான்ஸ் வீரர்கள் அடுத்த சில மாதங்களுக்கு அங்கே தங்கி இருப்பார்கள் என்றும் தெரிவித்துள்ளது.

இதனை தொடர்ந்து கபிஸ் மாகாணத்தில் உள்ள நிஜ்ரப் என்ற இடத்தில் முகாமிட்டிருந்த 400 வீரர்கள் நேற்று அங்கிருந்து புறப்பட்டனர். இதன்மூலம் தலைநகர் காபூலுக்கு வெளியே இருந்த அனைத்து பிரான்ஸ் வீரர்களும் வெளியேறி விட்டனர்.

இதற்கிடையே 2014 ஆம் ஆண்டுக்குள் படிப்படியாக வீரர்கள் வாபஸ் பெறப்படுவார்கள் என நேட்டோ ஏற்கனவே அறிவித்திருந்தது குறிப் பிடத்தக்கது.

# மும்பை தாக்குதல் தீவிரவாதி அஜ்மல் கசாப்புக்குத் தூக்கு நிறைவேற்றம்

மும்பை தாக்குதல் தீவிரவாதி அஜ்மல் கசாப் இன்று காலை தூக்கிலிடப்பட்டதாக மகாராஷ்டிர மாநில உள்துறை அமைச்சர் ஆர்.ஆர்.பட்டீல் உறுதிப்படுத்தியுள்ளார்.

கடந்த 2008ஆம் ஆண்டு நவம்பர் 26ஆம் திகதி மும்பையில் பாகிஸ்தான் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 166 பேர் கொல்லப்பட்டனர்.

இத்தாக்குதலில் ஈடுபட்ட தீவிரவாதிகளில் கசாப் மட்டும் உயிருடன் பிடிபட்டான். மற்றத் தீவிரவாதிகள் அனைவரும் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

அஜ்மல் கசாப்பிற்கு, மும்பை சிறப்பு நீதிமன்றம் 2010ஆம் ஆண்டு தூக்குத் தண்டனை விதித்தது.

இந்த தண்ட னையை கடந்த செப்ரெம்பர் மாதம் 29ஆம் திகதி உச்ச நீதிமன்றம் உறுதி செய்தது.



இதனைத் தொடர்ந்து, தனது தண்டனையை குறைக்குமாறு கசாப், ஜனாதிபதி பிரணாப் முகர்ஜிக்கு கருணை மனு அனுப்பியிருந்தான்.

இது குறித்து மத்திய உள் துறை அமைச்சகத்தின் கருத்தை ஜனாதிபதி கோரியிருந்தார்.

அதனைத்தொடர்ந்து, கசாப்பின் கருணை மனுவை நிராகரிக்க உள்துறை அமைச்சகம், ஜனாதிபதிக்கு பரிந்துரை செய்தது.


கசாப் கருணை மனுவை பிரணாப் முகர்ஜியும் கடந்த 8ஆம் திகதியே நிராகரித்ததாக மகாராஷ்டிரா உள்துறை அமைச்சர் ஆர்.ஆர்.பட்டீல் தெரிவித்தார்.

இதனையடுத்து அஜ்மல் கசாப் நேற்று காலை 7.30 மணிக்கு புனே ஏர்வாடா சிறையில் தூக்கிலிடப்பட்டதாக மகாராஷ்டிர மாநில அரசு உயர் அதிகாரி தெரிவித்துள்ளார்.

# இந்திய செய்திகள்

## ஒபாமா நிர்வாகத்தில் முக்கிய பொறுப்பு வகிக்கும் இந்தியர்கள்

இரண்டாவது முறை அமெரிக்க ஜனாதிபதியாக பொறுப்பேற்றுள்ள ஒபாமாவின் நிர்வாகத்தில் இதுவரை இல்லாத அளவுக்கு அதிக எண்ணிக்கையிலான இந்தியர்கள் உயர்பதவியில் அமர்த்தப்பட்டுள்ளனர்.



கடந்த நான்கு ஆண்டுகளாக ஒபாமா ஜனாதிபதி பதவி வகித்த போதே, அமெரிக்க வாழ் இந்தியர்களும், இந்திய வம்சாவளி அமெரிக்கர்களும் முக்கியப் பொறுப்பில் அமர்த்தப்பட்டிருந்தனர்.

அதிகாரப்பூர்வமான எண்ணிக்கை இல்லாத போதும், சுமார் 25 முக்கியப் பொறுப்புகளில் அமெரிக்க வாழ் இந்தியர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

அமெரிக்காவில் 31 இலட்சம் இந்தியர்கள் வசிக்கின்றனர். இது அமெரிக்காவின் ஒட்டுமொத்த மக்கள் தொகையில், ஒரு சத வீதத்துக்கு சற்றே அதிகமாகும்.

ஒபாமாவின் தற்போதைய நிர்வாகத்தில் உள்துறை, கருவூலம், பாதுகாப்பு, வர்த்தகம் உள்ளிட்ட முக்கியப் பொறுப்புகளில் 40க்கும் மேற்பட்ட அமெரிக்க வாழ் இந்தியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கு முன்பு 1987ஆம் ஆண்டு ரீகன் ஜனாதிபதியாக இருந்த போது, ஜாய் செரியன் என்பவர் சமமான வேலைவாய்ப்பு ஆணையத்தில் பணியமர்த்தப்பட்டார். இதுவே, முதல்முறையாக இந்தியர் ஒருவர் முக்கியத்துவம் வாய்ந்த பொறுப்பில் நியமிக்கப்பட்ட நிகழ்வாகும்.

ஒபாமா முதல் முறையாக ஜனாதிபதியாக பொறுப்பேற்ற போது, சர்வதேச மேம்பாட்டுக்கான அமெரிக்க முகமை (யுஎஸ் ஏஐடி) யின் நிர்வாகியாக, ராஜ் ஷா என்ற அமெரிக்க வாழ் இந்தியரை நியமித்தார்.

இதுதான் இந்தியர் ஒருவரால் அமெரிக்காவில் வகிக்கப்பட்ட மிக உயர்ந்த பதவியாகும்.

பின்னர், பெலிஸாக்கான அமெரிக்கத் தூதராக வினய் தும்மலப்பள்ளி நியமிக்கப்பட்டார்.

ஒபாமவின் நிர்வாகத்தில், தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியாவுக்கான அமெரிக்காவின் துணை உதவிப் பாதுகாப்புச் செயலர், தேசிய அறிவியல் கழக இயக்குநர், எரிசக்தித் துறையின் சூழலியல் மற்றும் அணுத் திட்டங்களுக்கான இணைத் தலைவர், நீதித்துறை, உள்நாட்டுப் பாதுகாப்புத்துறை செயலரின் ஆலோசகர், ஐ.நாவுக்கான அமெரிக்க தூதர், சர்வதேச பாதுகாப்பு மற்றும் ஆயுதப்பரவல் தடுப்பு அமைப்பின் ஆலோசகர் என்பவை உள்ளிட்ட அதிமுக்கியமான பொறுப்புகளில் இந்தியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இதன்மூலம் அமெரிக்க வாழ் இந்தியர்களுக்கான முக்கியத்துவம் அதிகரித்துள்ளது.

# தமிழக முதல்வர் ஜெயலலிதாவிற்கு உச்ச நீதிமன்றம் கண்டனம்

சட்டப்பேரவைத் தேர்தலில் (2001ஆம் ஆண்டு), ஜெயலலிதா 4 தொகுதிகளில் வேட்புமனுத் தாக்கல் செய்ததற்கு உச்சநீதிமன்றம் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக திமுக முன்னாள் எம்.பி. செ.குப்புசாமி தொடர்ந்த வழக்கைத் தள்ளுபடி செய்யக் கோரி ஜெயலலிதா சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு, நீதிபதிகள் ஹெச்.எல். தத்து, சி.கே.பிரசாத் ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது.

அப்போது, ஒரு அரசியல் கட்சியின் தலைவரான ஜெயலலிதாவால் எப்படி இவ்வாறு நடந்து கொள்ள முடிந்தது என அவரது சட்டத்தரனியான லலித்திடம் நீதிபதிகள் கேள்வி எழுப்பினர்.



ஒரு மாநிலத்தின் தலைமைப் பொறுப்பில் இருந்த அவரால், அதற்கு தகுந்தவாறு நடந்து கொள்ள முடியாதது ஏன்? என்றும் நீதிபதிகள் வினவினர்.

ஜெயலலிதா 4 தொர்குதிகளில் வேட்புமனுத்தாக்கல் செய்த போது, அவர் மீது, சம்பந்தப்பட்ட தேர்தல் அதிகாரி நடவடிக்கை எடுக்காதது ஏன்? எனவும் கேள்வி எழுப்பினார்கள்.

மாறாக அந்த தேர்தல் அதிகாரி, ஜெயலலிதா சொல்படி நடந்துகொண்டாரா என்றும் நீதிபதிகள் வினவினார்கள். இது தொடர்பான வழக்கில் ஜெயலலிதா மீது வழக்குப் பதிவு செய்யும்படி தேர்தல் ஆணையத்திற்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது சரியல்ல எனவும், மாறாக இந்த பிரச்சினையை மறு ஆய்வு செய்யுமாறு தேர்தல் அதிகாரிக்கு உத்தரவிட்டிருக்க வேண்டும் என்றும் நீதிபதிகள் குறிப்பிட்டனர்.



கார்த்திகை தீபத்திருநாளை முன்னிட்டு மண் விளக்குகள், திருப்பூர் தாராபுரம் ரோடு கோட்டை மாகாளியம்மன் கோவில் அருகே விற்கப்படுகின்றன.

# பேஸ்புக்கில் கருத்துத் தெரிவித்த பெண்கள் விவகாரத்தில் நடவடிக்கை

பேஸ்புக்கில் கருத்து தெரிவித்தது தொடர்பாக மும்பையில் இரண்டு பெண்கள் கைது செய்யப்பட்ட சம்பவம் குறித்த விசாரணை அறிக்கை கிடைத்த பின்னர், உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று மகாராஷ்டிர முதல்வர் பிரித்விராஜ் சவான் கூறியுள்ளார்.

சிவசேனா கட்சி நிறுவனர் பால் தாக்கரே மறைவைத் தொடர்ந்து மும்பையில் கடைகள் அடைக்கப்பட்டிருந்தன.

ஆனால் அச்சத்தினால்தான் இந்த கடையடைப்பு என்றும், மரியாதைக்காக அல்ல எனவும் சஹீன் தாதா என்ற பெண் பேஸ்புக்கில் கருத்து தெரிவித்ததாக கூறப்படுகிறது.

இதை அவரது தோழி ரேனு லைக் (LIKE) செய்துள்ளதையடுத்து இருவரையும் கைது செய்த காவல்துறையினர், பிணையில் வெளிவரக்கூடிய வழக்கு என்பதால் இருவரையும் விடுவித்தனர்.

இருவரும் கைது செய்யப்பட்ட சம்பவம் கருத்து சுதந்திரத்திற்கு எதிரானது என்று எதிர்ப்பு கிளம்பியுள்ளது.

இந்த கைது நடவடிக்கைக்கு கடும் கண்டனம் தெரிவித்து, இந்திய பிரஸ் கவுன்சில் தலைவர் மார்க்கண்டேய கட்ஜு, மகராஷ்டிரா முதல்வர் சவாணுக்கு கடிதம் எழுதியிருந்தார்.

எனவே இந்த விவகாரம் குறித்த முழு விவரங்கள் அடங்கிய அறிக்கையை சமர்ப்பிக்குமாறு உயர் பொலிஸ் அதிகாரிக்கு உத்தரவிட்டிருப்பதாகவும், அந்த அறிக்கை இன்று தனக்கு கிடைக்கும் என எதிர்பார்ப்பதாகவும் மாநில முதல்வர் பிரித்விராஜ் சவான் தெரிவித்தார்.

# இந்தியாவிற்கு 22.6 பில்லியன் டொலர் கடன் வழங்கும் ஜப்பான்

இந்தியாவின் உள்கட்டமைப்பு பணிகளுக்காக ஜப்பான் 22.6 பில்லியன் டொலர் கடன் வழங்க இருப்பதாக ஜப்பான் பிரதமர் யாஷிஹிகோ நோடா தென்கிழக்கு ஆசிய மாநாட்டில் தெரிவித்தார்.

தென்கிழக்கு ஆசிய மாநாட்டில் பங்கேற்க வந்த பிரதமர் மன்மோகன் சிங்கும் ஜப்பான் பிரதமர் யாஷிஹிகோவும் தனியே சந்தித்துப் பேசினர்.

அப்போது இந்தியாவின் உள்கட்டமைப்பு பணிகளுக்காக ஜப்பான் 22.6 பில்லியன் டொலர் கடன் வழங்கப்படும் என யாஷிஹிகோ நோடா தெரிவித்தார்.

இந்த அறிவிப்பை இந்திய பிரதமர் மன்மோகன் சிங் வரவேற்றார்.

உள்கட்டமைப்பு திட்டங்களில் ஜப்பான் நிறுவனங்களின் முதலீட்டுக்கே இந்தியா முன்னுரிமை அளிப்பதாக பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்தார்.

# டெங்கு காய்ச்சலுக்கு புதுமாப்பிள்ளை பலி: துக்கத்தில் மனைவி தீக்குளிப்பு

டெங்கு காய்ச்சலால் இறந்த புதுமாப்பிள்ளையின் மனைவி துக்கம் தாங்க முடியாமல் தீ குளித்துக்கொண்டார். மதுரை மாவட்டத்தில் உள்ள மேலூரில் கடந்த 18ம் திகதி மட்டும் 5 பேர் டெங்கு காய்ச்சலுக்கு பலியாகினர்.

அதில் மேலூர் அருகே உள்ள தென்னகரம்பட்டியைச் சேர்ந்த வேல்மணியும் (வயது 23) ஒருவர்.

இவர் அண்மையில் மஞ்சுளா காந்தி (வயது20) என்ற பெண்ணை திருமணம் செய்து கொண்டார்.

வேல்மணி இறந்த தகவலறிந்த உறவினர்கள் ஏராளமானோர் அவரது வீட்டிற்கு துக்கம் விசாரிக்க வந்தபோது கணவனை இழந்த துயரம் தாங்க முடியாமல் இருந்த மஞ்சுளாகாந்தி திடீர் என்று எழுந்து வீட்டுக்குள் சென்று தனது உடலில் மண்ணெண்ணெய் ஊற்றி தீ வைத்தார்.

தீ எரியத் தொடங்கியவுடன் அவர் அலறிக் கொண்டு வெளியே வந்தவுடனே அங்கிருந்த உறவினர்கள் தீயை அணைத்து அவரை மேலூர் அரசு மருத்துவமனையில் சேர்த்தனர்.

அங்கு அவருக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்ட பின்பு மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லுமாறு மருத்துவர்கள் பரிந்துரைத்தனர்.

# ஒரு நாள் கிரிக்கட் போட்டியில் யாழ்.மத்திய கல்லூரி அணி வெற்றி

இலங்கை துடுப்பாட்டச் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் 13 வயதுப் பிரிவுனருக்கிடையில் மட்டுப்படுத்தப்படாத ஓவர்கள் கொண்ட ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி வெற்றி பெறறுள்ளது.

சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியினை எதிர்த்து யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி மோதியது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி முதல் துடுப்பெடுத்தாடியது.

அணி வீரர் இயல்ஸ்பெல்மனுடைய அரைச்சதம் கைகொடுக்க ஓட்டங்களை இலகுவாகச் சேர்த்தது அவ்வணி.

42 ஓவர்களில் 5 விக்கெட்களை மாத்திரம் இழந்து 167 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளை தமது ஆட்டத்தினை நிறுத்திக் கொண்டது.


துடுப்பாட்டத்தில் இயல்ஸ்பெல்மன் 52 ஓட்டங்களையும், மதுசன், தேனுஜன் முறையே 38, 37 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியின் பந்துவீச்சை எதிர் கொள்ள சிரமப்பட்டது.

அடுத்தடுத்து விக்கெட்களை இழந்து 20 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 64 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக் கொண்டது. பந்துவீச்சில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி சார்பாக மதுசன் 6 விக்கெட்களையும், சிம்ஸன் 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

பலோ ஒன் முறையில் மீண்டும் தமது இரண்டாவது இனிங்ஸைத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி. 17 ஓவர்களில் 42 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்களையும் இழந்து, இனிங்ஸ் மற்றும் 59 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. பந்துவீச்சில் மதுசன் 4 விக்கெட்களைக் கைப்பற்றினார்.

# ஐசிசி டெஸ்ட் ரேங்கிங் புஜாரா, ஓஜா முன்னேற்றம்



சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் (ஐசிசி) டெஸ்ட் போட்டிகளுக்கான தரவரிசைப் பட்டியலில், இந்திய வீரர்கள் புஜாரா, ஓஜா முன்னேறினர்.

அகமதாபாத் தில் இங்கிலாந்துடன் நடந்த முதல் டெஸ்டில் 2 இன்னிங்சிலும் அபாரமாக விளையாடிரன் குவித்த செதேஷ்வர் புஜாரா (206*, 41*), பேட்டிங் தரவரிசயில் 35 இடங்கள் முன்னேறி 24வது இடத்தைப் பிடித்துள்ளார்.

முதல் இன்னிங்சில் அதிரடியாக சதம் விளாசிய சேவக் ஒரு இடம் முன்னேறி 22 இடத்தில் உள்ளார். ரன்குவிப்பு டாப் 10ல் ஒரு இந்திய வீரர் கூட இடம் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மாஸ்டர் பேட்ஸ்மேன் சச்சின் 17வது இடத்தில் பின்தங்கி உள்ளார். இலங்கை வீரர் சங்கக்கரா முதல் இடத்திலும், தென் ஆப்ரிக்காவின் அம்லா 2வது இடத்திலும் உள்ளனர்.

பந்துவீச்சில் அசத்திய பிரக்யான் ஓஜா 9 இடங்கள் முன்னேறி முதல் முறையாக டாப் 5ல் இடம் பிடித்துள்ளார். தென் ஆப்ரிக்க வீரர்கள் டேல் ஸ்டெயின், வெர்னான் பிலேண்டர் முதல் 2 இடங்களில் உள்ளனர்.

# இரண்டாவது போட்டியில் ஷேன் வொற்சன் இல்லை

அவுஸ்திரேலியாவிற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணிக்கும், அவுஸ்திரேலிய அணிக்குமிடையிலான 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது போட்டிக்கான அவுஸ் திரேலிய, தென்னாபிரிக்க அணிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

அறிவிக்கப்பட்டுள்ள அவுஸ்திரேலிய அணியில் ஷேன் வொற்சன் மீண்டும் சேர்க்கப்படவில்லை. இதன் காரணமாக முதலாவது போட்டியில் பங்குபற்றிய அதே அணியே மீண்டும் இரண்டாவது போட்டிக்காகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

காலில் ஏற்பட்ட உபாதை காரணமாக ஷேன் வொற்சன் முதலாவது போட்டியில் பங்குபற்றியிருக்காத நிலையில் இரண்டாவது போட்டியில் தனியே துடுப்பாட்ட வீரராக மாத்திரம் களமிறங்கும் உடற்தகுதியைப் பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டது. ஆனால், நாளை ஆரம்பமாகவுள்ள போட்டியில் ஷேன் வொற்சனைச் சேர்ப்பதில்லை என முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நாளைய போட்டியில் பங்குபெறவுள்ள தென்னாபிரிக்க அணியும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அறிவிக்கப்பட்டுள்ள அணியில் முதலாவது போட்டியில் பங்குபற்றிய அணியில் 2 மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

முதலாவது போட்டியில் அணியில் சேர்க்கப்பட்ட பின்னர் போட்டியில் பங்குபற்றாமலேயே காயமடைந்த மத்தியவரிசைத் துடுப்பாட்ட வீரர் ஜே.பி.டுமினி இற்குப் பதிலாக பஃப் டு பிளெஸிஸ் சேர்க்கப்பட்டுள்ளார்.

அதேபோன்று முதலாவது போட்டியில் தனது அறிமுகத்தை மேற்கொண்ட ரோறி கிளெய்ன்வெல்ட்டிற்குப் பதிலாக சுழற்பந்து வீச்சாளர் இம்ரான் தாஹிர் சேர்க்கப்பட்டுள்ளார்.

# இலங்கைக் கிரிக்கெட் நிர்வாகத்தில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும்

இலங்கைக் கிரிக்கெட் சபையின் நிர்வாகத்தில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டுமென சர்வதேசக் கிரிக்கெட் சபையின் முன்னாள் பிரதம நிறைவேற்று அதிகாரி ஹரூன் லோகார்ட் தெரிவித்துள்ளார்.

இலங்கைக் கிரிக் கெட் சபைக்கு வழங்கியுள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சர்வதேசக் கிரிக்கெட் சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரிப் பதவியிலிருந்து ஓய்வுபெற்றதும் இலங்கையின் கிரிக்கெட் நிர்வாகத்தில் ஏற்படுத்தப்பட வேண்டிய மாற்றங்களைப் பிரேரிப்பதற்காக இலங்கைக் கிரிக்கெட் சபையால் பணிக்கமர்த்தப்பட்ட ஹரூன் லோகார்ட், தனது இறுதி அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கைக் கிரிக்கெட் சபை அதிகாரிகள், முன்னாள் அதிகாரிகள், இலங்கையின் வீரர்கள், இலங்கையின் முன்னாள் வீரர்கள், ஊடகவியலாளர்கள், ரசிகர்கள் ஆகியோரிடம் கருத்துக்களைக் கேட்டறிந்த ஹரூன் லோகார்ட், தனது 10 பக்க அறிக்கையைக் கையளித்துள்ளார்.


அவர் வழங்கியுள்ள பிரேரிப்புக்களில் இலங்கைக் கிரிக்கெட் அணியின் தேர்வில் விளையாட்டுத்துறை அமைச்சரின் தலையீடு, இலங்கைக் கிரிக்கெட் சபையின் மோசமான பெயர், இலங்கைக் கிரிக்கெட் சபையின் நெருக்கடியான நிதி நிலை, நிர்வாகத்தில் காணப்படும் தொழில்முறையற்ற நடவடிக்கைகள், வெளிப்படையற்ற தன்மை ஆகியன இல்லாது செய்யப்பட வேண்டும் எனவும், முறையான நிறுவன அடிப்படையொன்று உருவாக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

ஹரூன் லோகார்ட்டின் அறிக்கை தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த இலங்கைக் கிரிக்கெட் சபையின் செயலாளர் நிஷாந்த ரணதுங்க, அவ்வறிக்கையிலுள்ள பிரேரிப்புக்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் எனத் தான் தனிப்பட்ட முறையில் கருதுவதாகவும், இலங்கையின் விளையாட்டுக் கழகங்கள், ஊடகங்கள், வீரர்கள், இலங்கைக் கிரிக்கெட் சபை ஆகியன இணைந்து இந்தப் பிரேரிப்புக்களை நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# டெஸ்ட் தரப்படுத்தலில் குமார் சங்கக்கார முதலிடம்

சர்வதேசக் கிரிக்கெட் சபை யின் டெஸ்ட் வீரர்களுக்கான தரப்படுத்தலில் இலங்கை வீரர்கள் சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்தியுள்ளனர். துடுப்பாட்ட வீரர்களுக்கான தரப்படுத்தலில் குமார் சங்கக்கார தொடர்ந்தும் முதலிடத்தில் காணப்படுவதோடு, பந்து வீச்சாளர்களுக்கான தரப்படுத்தலில் ரங்கன ஹேரத் தொடர்ந்தும் முன்னேற்றத்தை வெளிப்படுத்தி நான்காவது இடத்தைப் பெற்றுள்ளார்.

நடந்து முடிந்த இந்திய, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான போட்டி, பங்களாதேஷ் - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான போட்டி, இலங்கை - நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான போட்டி ஆகியவற்றின் பின்னரான தரப்படுத்தலிலே இந்த நிலை காணப்படுகிறது.



இதில் நியூசிலாந்து அணிக்கெதிரான போட்டியில் 11 விக்கெட்டுக்களைக் கைப்பற்றி போட்டியின் நாயகன் விருதை வென்ற ரங்கன ஹேரத் 828 புள்ளிகளைப் பெற்று தரப்படுத்தலில் தனது சிறப்பான புள்ளிகளைப் பெற்றதோடு 4ஆவது இடத்தையும் பெற்றுள்ளார்.

நியூசிலாந்திற்கெதிரான போட்டியில் தான் துடுப்பெடுத்தாடிய ஓர் இனிங்ஸில் ஓட்டங்களைப் பெரிதளவில் குவிக்காத குமார் சங்கக்கார புள்ளிகளை இழந்த போதிலும் தொடர்ந்தும் முதலிடத்தில் காணப்படுகிறார்.

தவிர, அப்போட்டியில் இலங்கை சார்பாக 91 ஓட்டங்களைப் பெற்ற இலங்கை அணியின் தலைவர் மஹேல ஜெயவர்தன 6 இடங்கள் முன்னேறி 13ஆவது இடத்திலும், அப்போட்டியில் அரைச்சதம் பெற்ற அஞ்ஜலோ மத்தியூஸ் 28ஆவது இடத்திலும் தரப்படுத்தப்பட்டுள்ளனர். துடுப்பாட்ட வீரர்களுக்கான தரப் படுத்தல்:

குமார் சங்கக்கார, ஹசிம் அம்லா, ஜக்ஸ் கலிஸ், மைக்கல் கிளார்க், ஷிவ்நரின் சந்தர்போல், ஏ.பி.டி. வில்லியர்ஸ், அலஸ்ரெயர் குக், யுனிஸ் கான், அஷார் அலி, கிரேம் ஸ்மித், மைக்கல் ஹசி, மிஸ்பா உல் ஹக், கெவின் பீற்றர்சன், மஹேல ஜெயவர்தன, திலான் சமரவீர.

# அவுஸ்ரேலியாவிற்கான இலங்கை டெஸ்ட் போட்டிஅணி அறிவிப்பு

அவுஸ்ரேலியாவிற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற் கொள்ளவுள்ள இலங்கை டெஸ்ட் குழாம் இலங்கைத் தேர்வாளர் களால் அறிவிக்கப்பட்டுள்ளது. 16பேர் கொண்ட குழாமே அறிவிக்கப்பட்டுள்ளது.

மஹேல ஜெயவர்தன தலைமையில் அறிவிக்கப்பட்டுள்ள இந்த அணியில் நியூசிலாந்துக்கெதிரான டெஸ்ற் தொடருக்காக அறிவிக்கப்பட்டிருந்த டெஸ்ட் அணியில் இடம்பெற்றிருந்த வீரர்களில் 14 பேர் இடம்பெற்றுள்ளனர்.

அக்குழாமில் சேர்க்கப்பட்டிருந்த புதுமுக வீரரான தரிந்து கௌஷால் நீக்கப்பட்டு வேகப்பந்து வீச்சாளர் நுவான் பிரதீப் சேர்க்கப்பட்டுள்ளார். அத்தோடு திலகரட்ண டில்ஷானுக்கு மாற்று வீரராக முதலாவது போட்டிக்குச் சேர்க்கப்பட்ட திமுத் கருணாரத்னவும் இக்குழாமில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வேகப்பந்து வீச்சாளர்களாக நுவான் குலசேகர, சானக வெலகெதர, 'மின்ட எரங்க, தம்மிக்க பிரசாத், நுவான் பிரதீப் ஆகியோர் அணியில் சேர்க்கப்பட்டுள்ளதோடு, சுழற்பந்து வீச்சாளர்களாக ரங்கன ஹேரத், சுராஜ் ரந்தீவ் ஆகியோர் சேர்க்கப்பட்டுள்ளனர்.



அறிவிக்கப்பட்டுள்ள 16 பேர் கொண்ட குழாம் தவிர, லஹிரு திரிமன்ன, திஸர பெரேரா, ஜீவன் மென்டிஸ், அகில தனஞ்ய, அஜந்த மென்டிஸ் ஆகியோர் தற்காலிக வீரர்களாகத் தயார் நிலையில் அறிவிக்கப்பட்டுள்ளனர். அறிவிக்கப்பட்டுள்ள 16 பேர் கொண்ட குழாம்:

மஹேல ஜெயவர்தன, அன்ஜலோ மத்தியூஸ், திலகரட்ண டில்ஷான், குமார் சங்கக்கார, தரங்க பரணவிதான, திலான் சமரவீர, பிரசன்ன ஜெனவர்தன, ரங்கன ஹேரத், நுவான் குலசேகர, 'மின்ட எரங்க, சுராஜ் ரந்தீவ், டினே' சந்திமால், சானக வெலகெதர, நுவான் பிரதீப், தம்மிக்க பிரசாத், திமுத் கருணாரத்ன

மாற்று வீரர்கள்:

லஹிரு திரிமன்ன, திஸர பெரேரா, ஜீவன் மென்டிஸ், அகில தனஞ்ய, அஜந்த மென்டிஸ்.

இப்பத்திரிகை இன்ஃபோமீடியா பிரைவேட் லிமிட்டட் நிறுவனத்தினால் இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள தமது அச்சகத்தில் 22.11.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது